



தமிழரசு
1.3.1996 ரூ.3




MAHINDRA FORD INDIA LTD
Foundation stone laid by
Dr. J.JAYALALITHA
Hon'ble Chief Minister of Tamilnadu
in the presence of
Mr. ALEX TROTMAN
Chairman
Ford Motor Company
Mr.KESHUB MAHIND
Chairman
Mahindra & Mahindra
Friday, February 23, 1996.



# இந்த இதழில்...


★ இடைக்கால
நிதி நிலை அறிக்கை - 1996-1997
மாண்புமிகு நிதி அமைச்சர்
டாக்டர் இரா. நெடுஞ்செழியன்
அவர்கள் ஆற்றிய உரை .................................... 2

★ தொழில்வள மாநிலங்களையும்
முந்தும் வகையில் தமிழகம்
மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரை ......... 10

★ தந்தை பெரியார் சமூகநீதி விருது
வழங்கும் விழாவில் மாண்புமிகு
முதல்வர் அவர்கள் ஆற்றிய
சிறப்புரை .............................................. 17

★ இந்தியாவில் முன்னணியில்
விளங்கும் தமிழ்நாடு காவல்துறை
—மாண்புமிகு முதல்வர் அவர்கள்
பாராட்டு ................................................ 22

★ பெரியார் மாவட்ட ஆட்சித் தலைவர்
அவர்களின் கட்டுரை ............................ 25

★ பெரியார் மாவட்டம் - ஒரு
கண்ணோட்டம் ........................................ 29

★ பெரும்புகழ் பெற்ற பெரியார்
மாவட்டத் திருக்கோயில்கள் ................ 30

★ கிராம மகளிருக்கு வேளாண்
தொழில் நுட்பம் .................................... 35

★ பெரியார் மாவட்டச் சுற்றுலாத்
தலங்கள் .............................................. 41

★ காவல் நிர்வாகத்தில் பெரியார்
மாவட்டம் ............................................ 45


இதழ்தோறும் ஓர் இனிய குறள்:

அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை (37)

★ பல்லக்கைச் சுமப்பவனும் அதன்மேலிருந்து ஊர்ந்து செல்லுவோனுமாகிய அவர்களிடையே அறத்தின் பயன் இஃது என்று கூறவேண்டா!


# தமிழரசு

திருவள்ளுவராண்டு - 2027
மாசித் திங்கள் : 18
மலர்: 26 இதழ்: 17
1.3.1996
விலை: ரூபாய் 3





## பெரியார் மாவட்டச் சிறப்பிதழ்



★ தமிழகம் ஓர் அமைதிப் பூங்கா

★ இன ஒற்றுமையின் சின்னம்

★ இந்தியத் திருநாடே பின்பற்றுகின்ற சிறந்த முன்னுதாரணம்

# வருவாய் நிதி ஆதாரத்திலிருந்து மாநிலங்களுக்குப் பங்கு வழங்குக!

மத்திய அரசுக்கு மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் வலியுறுத்தல்

தமிழ்நாடு அரசு நிதி அமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், 1996-97 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தைச் சட்ட மன்றப் பேரவையில் வைத்து, 1996 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 20 ஆம் நாள் அன்று ஆற்றிய உரை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

*1995-96* ஆம் ஆண்டிற்குரிய திருத்த மதிப்பீடுகளையும், *1996-97* ஆம் ஆண்டிற்குரிய இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளையும் இந்தப் பேரவையின் மேலான ஒப்புதலுக்கு வைப்பதில் நான் பெருமிதமும் பெருமகிழ்ச்சியும் கொள்கிறேன்.

"பிணி இன்மை செல்வம் விளைவு இன்பம் ஏமம்
அணி என்ப நாட்டிற்கு இவ் வைந்து."

நோய் இல்லாமை, பொருள் வளம், விளைவு மிகுதி, இன்ப வாழ்வு, நல்ல பாதுகாப்பு ஆகிய ஐந்தும், ஒரு நாட்டிற்கு அணிகலன்களாக விளங்குவனவாகும் என்று அறிவுடையோர் கூறுவார்கள் என்பது திருவள்ளுவப் பெருந்தகையாரின் சீரிய வாக்கு. திருவள்ளுவர் கூறியுள்ள நெறிமுறைக்கு ஏற்ப, தமிழ்நாடு, சென்ற ஐந்தாண்டுக் காலமாக, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் செம்மையான ஆட்சியின் கீழ் இயங்கி வருகிறது என்பது, அனைவரும் அறிந்த உண்மையாகும்.

*1991* ஆம் ஆண்டில் தமிழ்நாட்டு மக்கள், புரட்சித் தலைவி டாக்டர். ஜெ.ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மிகப் பெரிய பெரும்பான்மை பெறுகின்ற வகையில் வாக்களித்து ஆட்சியில் அமர்த்தினர். பேரறிஞர் அண்ணா அவர்கள் வகுத்தளித்த அடிப்படைத் தத்துவங்கள், பொன்மனச் செம்மல் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் மனிதநேய நெறி ஆகியவற்றின் அடிப்படையில், இவ்வரசு நடைமுறைப்படுத்திய கொள்கைகளும் திட்டங்களும் தமிழ்நாட்டு மக்களின் வாழ்வில் வளம் பெற்றுத் தந்துள்ளன. இவ்வரசின் மீது மக்கள் கொண்டிருந்த அசைக்க முடியாத நம்பிக்கை மிகச் சரியானதே என்பது கடந்த ஐந்தாண்டுகளாக எய்திய சாதனை வாயிலாக முழுமையாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. நாம் அளித்த வாக்குறுதிகளைச் செம்மையாகச் செயற்படுத்தி மிகச் சிறந்த நிருவாகத்தைப் பேணிக் காத்து, இம்மாநிலத்தை நிலையான வளர்ச்சிப் பாதையில் இட்டுச் சென்றுள்ளோம்.

*2.* இவ்வரசு, *1996* ஜூனில் முழுப்பதவிக்காலத்தை வெற்றிகரமாக முடிக்கவுள்ளது. நாடாளுமன்ற ஜனநாயக நெறியின் மிகச் சிறந்த மரபுகளைப் பின்பற்றும் வகையில், *1996-97* ஆம் ஆண்டிற்கு இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தைத் தாக்கல் செய்ய முடிவு செய்துள்ளோம். அதன் அடிப்படையில், நிதியாண்டின் முதல் ஆறு மாத காலத்திற்குரிய செலவினங்களுக்கு உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி பெறப்படும். தேர்ந்தெடுக்கப்படவிருக்கும் புதிய சட்டமன்றப் பேரவையில் முழு அளவிலான வரவு-செலவுத் திட்டம் தாக்கல் செய்யப்படும்.

*3. 1990, 1991* ஆம் ஆண்டுகளில் நாடு எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடி நிலைமை, பொருளாதாரச் சீர்திருத்தம் மற்றும் தாராளமயமாக்கல் தொடர்பாகப் பெரும் விளைவை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை எடுக்கச் செய்தது. மத்திய அரசின் பொருளாதாரச் சீர்திருத்தத்தை இவ்வரசு தொடர்ந்து ஆதரித்து வந்துள்ளது. அதே சமயத்தில், ஏழை எளிய, வசதி வாய்ப்பற்ற மக்கள் மீது நாம் கொண்ட அக்கறையின் காரணமாக, ஏழை எளிய மக்களின் வாழ்க்கை நிலை பாதிக்கப்படாத வகையிலும், சமூக நலத் திட்டங்கள் குறித்த இன்றியமையா இனங்களுக்குச் செய்யப்படும் செலவின் அளவுகள் குறைக்கப்படாமலிருப்பதன் வகையிலும் உறுதி செய்யப்பட வேண்டியதன் அவசியத்தையும் நாம் வலியுறுத்தியுள்ளோம்.

*4.* தேசிய அளவிலான சீர்திருத்தங்களிலிருந்து மாநில அளவிலான சீர்திருத்தங்களுக்குத் தற்போது பெரிதும் முக்கியத்துவம்



அளிக்கிறோம். பெரும் பொருளாதார நிருவாகக் கட்டுப்பாட்டிற்கான அதிகாரங்கள் மத்திய அரசிடமே பெரிதும் உள்ளதால், பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்தும் ஒழுங்குமுறை விதிகளைத் தளர்த்தும் வகையில், மத்திய அரசு கொண்டு வரும் சீர்திருத்தங்கள் செயற்படுத்துவதற்கு பொதுவாக எளிமையானவையாகும். இதைக்காட்டிலும், மாநில அரசின் பொருளாதாரச் சீர்திருத்தங்களை நிறைவேற்றுவதுதான் மிகவும் கடினமானதாகும். மாநில அரசின் செலவினங்களில் பெரும்பகுதி சமூகப் பணிகள் குறித்ததாகும்; அதனைக் குறைக்க இயலாது, குறைக்கவும் கூடாது. மேலும், மாநில அரசின் செலவினங்களில் பெரும் பகுதி சம்பளங்கள் வகையிலானது; செலவினங்களுடன் தொடர்புடையது; அதனைக் கட்டுப்படுத்துவது கடினமானதாகும். இத்தகு சூழ்நிலையில், பொதுச் செலவினங்களைக் கட்டுப்படுத்துவது முதலான நிதிச் சீர்திருத்தங்களை நாம் மேற்கொள்ள வேண்டியுள்ளது. அதே சமயத்தில், பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்தத் தேவையான அடிப்படை வசதிகளைத் தரமுயர்த்தப் பெருமளவில் கூடுதல் முதலீடுகள் செய்ய நிதிவாயில்களைத் திரட்டவேண்டும்.

5. இதில் இடர்ப்பாடுகள் உள்ள போதிலும், தமிழ்நாடு அரசு, இம்மாநிலத்தில் பொருளாதாரச் சீர்திருத்தங்களைக் கொண்டு வரக் கொள்கையளவில் நடவடிக்கைகளை ஏற்கெனவே எடுக்க முனைந்துள்ளது. வரிவிதிப்பைப் பொறுத்தவரையில், சிக்கல் வாய்ந்த விற்பனை வரி முறையை நாம் மிகவும் எளிமையாக்கியுள்ளோம். வரிவீதங்களின் மொத்த எண்ணிக்கை 17 என்பதிலிருந்து 5 அடிப்படை வீதங்களாகவும், 4 தனி வீதங்களாகவும் குறைக்கப்பட்டது. பொருட்களைத் தொகுப்பாக்குவதும் சீரமைக்கப்பட்டது. இடுபொருட்கள் மீதான வரிவிதிப்பைக் குறைப்பதற்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1995 டிசம்பரில் நடைபெற்ற விற்பனை வரிச் சீர்திருத்தங்கள் குறித்த மாநில நிதி அமைச்சர்கள் கூட்டத்தில் நான் கலந்து கொண்டேன்; வரிவீதங்களை நாடு தழுவிய வகையில் பொருந்துமாறு ஒரே சீராக ஆக்குவதற்கும், சீர்குலைக்கும் வரித்தள்ளுபடி செய்தல், வரி செலுத்துவதைத் தள்ளிவைத்தல் ஆகியவை குறித்த திட்டங்களை 1.4.1997க்குள் ரத்து செய்வதற்கும், மாநிலங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று அக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

6. இம்மாநிலத்திலுள்ள தொழில்களுக்காக, மேம்படுத்தப்பட்ட அடிப்படை வசதிகளை உருவாக்க, நாம் பல நடவடிக்கைகள் எடுத்துள்ளோம். 1992 ஜூனில் அறிவிக்கப்பட்ட தொழில் கொள்கையும் மாநிலத்தின் குறிப்பான செயல் திட்டமும் இம்மாநிலத்தில் முதலீட்டுச் செயற்குறிப்புகளுக்கு விரைவாக அனுமதி வழங்கும் நடைமுறைகளுக்கு வகை செய்கிறது. அடிப்படை வசதிகளுக்கு நிதி ஆதாரங்களை அதிகரிக்கும் நோக்குடன், மின் உற்பத்தி, நெடுஞ்சாலைகள் கட்டமைப்பு போன்ற துறைகளில் தனியார் துறையின் பங்கேற்பை நாங்கள் வரவேற்றுள்ளோம்.

7. இம்மாநிலத்தின் தொழில் சூழ்நிலையில் நாம் ஏற்படுத்தியுள்ள சீரமைப்புகள் நல்ல பலனை அளிக்கத் தொடங்கியுள்ளன. 1991-92ல் 4.1 சதவீதமாக இருந்த தொழில் உற்பத்தியின் வளர்ச்சி வீதம், 1994-95 ல் 8.7 சதவீதமாக உயர்ந்துள்ளது. மாநிலத்தின் நிகர உற்பத்தியின் வளர்ச்சி வீதம் 1991-92 ல் 2.69 சதவீதத்திலிருந்து 1994-95 ல் 4.90 சதவீதமாக உயர்ந்துள்ளது.

8. நடப்பாண்டில் ஏற்பட்டுள்ள வறட்சி நிலையாலும், கருநாடக

அரசு காவிரியில் நீரை விடுவிக்காததாலும் 14 இலட்சம் டன் உணவு தானிய உற்பத்தி இழப்பு ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. வறட்சியால் ஏற்படும் பாதக விளைவிலிருந்து ஏழை, எளிய மக்களைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியம் குறித்து எப்போதும் விழிப்புடன் இருந்துவரும் இவ்வரசு, உணவுப் பொருட்களின் விலையைக் கட்டுப்பாட்டிற்குள் வைக்கும் பொருட்டுப் பொது விநியோக முறையில் குடும்ப அட்டை ஒன்றுக்குக் கூடுதலாக 8 கிலோ அரிசி வழங்க முடிவுசெய்தது. இந்த நடவடிக்கையினால், உணவுப் பொருள் உதவித் தொகைக்காகத் திங்களொன்றுக்கு ரூ. 70 கோடி அளவிற்கு நாம் ஏற்கவேண்டி வந்த கூடுதல் நிதிப் பொறுப்பும் கூட, இந்தத் துணிவான முடிவை எடுப்பதிலிருந்து நம்மைப் பின் வாங்கச் செய்யவில்லை. இத்தொகையுடன், 1995-96 ல் உணவுப் பொருள் உதவித் தொகை வகையிலான ஒட்டுமொத்த நிதிச் சுமை, வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டைத் தாக்கல் செய்தபோது மதிப்பிடப்பட்ட ரூ.600 கோடியிலிருந்து, 1995-96 திருத்த மதிப்பீட்டில் ரூ.800 கோடியாக உயரும். 1996-97 இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் உணவுப் பொருள் உதவித் தொகைக்காக ரூ.840 கோடி வகை செய்யப்பட்டுள்ளது. விலைவாசியைக் குறைக்கவும், அடிப்படைத் தேவையான உணவுக்கு உத்திரவாதத்தை எவ்வகையிலும் அளிக்கவும் இவ்வரசின் உறுதியினை, 1990-91 ல் ரூ. 105 கோடியாக இருந்த உணவுப் பொருள் உதவித் தொகையை 1995-96 இலும் 1996-97 இலும் வகை செய்யப்பட்டுள்ள உணவுப் பொருள் உதவித் தொகையுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதன் மூலம் அறியலாம்.

## பத்தாம் நிதிக்குழு

9. 1995-96 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தைச் சட்டப் பேரவையில் வைத்து ஆற்றிய எனது உரையில், பத்தாம் நிதிக்குழுவின் அறிக்கையையும், நம்முடைய மாநில நிதி நிலையில் அதன் பாதகமான விளைவுகளையும் பற்றி நான் விரிவாக ஆய்வு செய்து விளக்கிக் கூறியிருந்தேன். பத்தாம் நிதிக்குழுவின் பரிந்துரைகள், மாநிலங்களுக்கிடையே பகிர்ந்தளிக்கத்தக்க ஒட்டுமொத்த நிதி ஆதாரங்களை உயர்த்தவில்லை என்பதை நான் சுட்டிக் காட்டியிருந்தேன். மிகச் சிறப்பான முறையில் நிதியை நிருவகித்த தமிழ்நாடு போன்ற மாநிலங்கள், பத்தாம் நிதிக் குழுவின் பரிந்துரையினால் எவ்வாறு பாதிக்கப்பட்டன என்பதையும் நான் குறிப்பிட்டிருந்தேன். மேலும், பத்தாம் நிதிக் குழு அறிக்கையின் சில அம்சங்கள் குறித்து நாம் மேல் நடவடிக்கையை எதிர்நோக்கியுள்ளோம். பத்தாம் நிதிக் குழு கருத்துத் தெரிவித்த நிதிப்பகிர்வுக்கான மாற்றுத் திட்டம் குறித்து மத்திய அரசு இன்னும் நடவடிக்கையெடுக்கவில்லை. இந்த மாற்றுத் திட்டத்தில், மாநிலங்களுடன் பகிர்ந்து கொள்ளப்படும் ஒட்டு மொத்தப் பங்களவு உயராது போனாலும், மத்திய அரசு விதித்து வசூலிக்கும் வரிகளில், அதிகம் உயர்ந்து வரக்கூடிய வரிவரவுகளில், அதாவது நிறுவன வரி, சுங்கத் தீர்வை போன்றவற்றில் கிடைக்கும் வரவுகளில் மாநிலத்திற்கு ஒரு பங்கு கிடைக்கும். நடப்பாண்டில் கூட, மாநிலங்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்படாத சுங்கத் தீர்வைகள், நிறுவன வரி ஆகியவற்றின் வளர்ச்சி வீதம், மாநிலங்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்படுகின்ற ஆயத்தீர்வைகளின் வளர்ச்சி வீதங்களைக் காட்டிலும் அதிகமாகவுள்ளது என்று தெரிகிறது. எனவே, பத்தாம் நிதிக் குழு பரிந்துரைத்த நிதிப் பகிர்வுக்கான மாற்றுத் திட்டம் குறித்து மத்திய அரசு தேவையான மேல் நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று நாம் வலியுறுத்துகிறோம்.

10. பத்தாம் நிதிக் குழு உள்ளாட்சி அமைப்புகளுக்கு மானியங்கள் வழங்கப் பரிந்துரைத்துள்ளதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். உள்ளாட்சி மன்றங்கள், புதிய மூலதன முதலீடுகளுக்காக மட்டுமே இத்தகைய மானியங்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். 1996-97 ல் தமிழ்நாட்டிற்கு ரூ.100.71 கோடி கிடைக்கும். இதில் ரூ.71.83 கோடி ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கும், ரூ.28.88 கோடி நகர்ப்பகுதி உள்ளாட்சி அமைப்புகளுக்கும் வழங்கப்படும். இந்த இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், இதற்குத் தேவையான நிதி ஒதுக்கங்கள்


செய்யப்பட்டுள்ளன. உள்ளாட்சி அமைப்புகளுக்கிடையே இத்தகைய மானியங்களைப் பகிர்ந்தளிப்பது, மாநில நிதிக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் நடைபெறும்.

## ஆண்டுத் திட்டம்

11. 1991–92 ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாடு மாநிலம், ஒவ்வோர் ஆண்டும் ஏற்பளிக்கப்பட்ட ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டளவை பெரிய அளவில் அதிகரித்து வந்து சாதனை புரிந்திருப்பதையும், இதற்கான ஒப்புதலைப் பெறுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்திருந்த சீரிய முயற்சிகளையும் மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கறிவர். மேலும், குறிப்பாகத் திட்டங்களைச் செயல்படுத்தும்போது, ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீட்டளவை ஆண்டு தோறும் விஞ்சியுள்ளோம். பெரிய மாநிலங்கள் பல, அவற்றின் ஏற்பளிக்கப்பட்ட ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டளவைக் கூட எய்த இயலாமல் இருந்த நிலையை ஒப்பிட்டுப் பார்த்தால், இந்தச் சாதனை அரும்பெரும் சாதனையாகும். இது மாநிலத்தை மேம்படுத்த அரசின் உறுதியைக் காட்டுகிறது.

12. 1994–95 ஆம் ஆண்டில், சிறப்புவகையின அல்லாத ஒன்பது மாநிலங்கள் முதலில் ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீட்டை எய்த முடியாத நிலையில் இருந்தன. இவ்வாறிருக்க, 1994–95 ஆம் ஆண்டுக்கான ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீட்டளவு 30.89 சதவீதம் அதிகரிக்கப்பட்டு, ரூ.2750 கோடியாக உயர்த்தப்பட்டிருந்த போதிலும், நாம் எய்திய சாதனையின் அளவு ரூ.2845.70 கோடி ஆகும்.

13. நடப்பாண்டில், ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீடு ரூ.3200 கோடி என்றிருக்க, வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்ட தொகை ரூ.3250.58 கோடியாகும். திருத்த மதிப்பீடுகளில், திட்டப் பணிகளுக்கான ஒதுக்கீடு ரூ.3316.24 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. 1995–96ஆம் ஆண்டிலும் திட்ட ஒதுக்கீட்டளவை முழுமையாக அடைவோம் என அரசு உறுதியாக நம்புகிறது. இத்துடன், எட்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின்




நான்காம் ஆண்டு இறுதியில், பணவீக்கத்தை கணக்கில் கொள்ளாத ஏற்பளிக்கப்பட்ட ஒதுக்கீட்டில் 80.66 சதவீதம் நிறைவேற்றப்பட்டிருக்கும். இதே காலஅளவில், சிறப்பு வகையின அல்லாத மாநிலங்கள் அனைத்தும் எட்டாம் ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீட்டில் 59 சதவீதத்தை மட்டுமே நிறைவேற்றியிருக்கும். அதனுடன் ஒப்பிட, இம்மாநிலத்தின் சாதனை மிகச் சிறப்பானதாக இருக்கும்.

14. 1996–97ஆம் ஆண்டிற்குரிய ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டளவு பொதுத் தேர்தல் முடிந்த பின்னரே மத்திய திட்டக் குழுவால் முடிவு செய்யப்படும். இருப்பினும், இந்த இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், நடைபெற்றுவரும் திட்டப் பணிகளுக்கென ரூ.3549.68 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. திட்ட அளவு இறுதியாக முடிவு செய்யப்படும்போது, ஒதுக்கீட்டளவு மேற்கொண்டும் உயர்த்தப்படலாம். விலைவாசி ஏற்றத்தைக் கணக்கிற்கொள்ளாத எட்டாம் ஐந்தாண்டுத் திட்ட ஒட்டுமொத்த ஒதுக்கீட்டளவான ரூ.10,200 கோடியை இம்மாநிலம் விஞ்சும் என்பதை இது உறுதி செய்யும்.

## ஏழை மக்களுக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டம்

15. இம்மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்கான சீர்திருத்தங்களுக்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளுடன் கூடவே, ஏழை எளிய மக்களுக்காக உணவுக்கு உத்தரவாதம், சத்துணவு, தொடக்கச் சுகாதாரப் பணி, அனைவருக்கும் தொடக்கக் கல்வி, ஏழை எளியவர்க்கு வேலை

வாய்ப்புத் திட்டங்கள், குடிநீர் வசதி, வீடு இல்லாதவர்க்கு வீட்டு வசதி, சமூகப் பாதுகாப்பு, நலிந்த பிரிவினருக்கான சிறப்புத் திட்டங்கள் ஆகிய திட்டங்கள் அடங்கிய சமூகப் பாதுகாப்புத் திட்டத்தை நாங்கள் உருவாக்கினோம். சமூகப் பாதுகாப்புத் திட்டத்திற்காக 1995-96 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டில் மொத்தம் ரூ.2048.64 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 1996-97ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தில் இதற்கென ரூ.2076.18 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

16. மாண்புமிகு முதலமைச்சர் 1993 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள்,14ம் நாள்அன்று தொடங்கிய 15 அம்சத் திட்டத்தைச் செயலாக்குவதில் அடைந்த முன்னேற்றம் தொடர்ந்து செயலாக்கப்படுகிறது. குழந்தைகள் நலனுக்கான புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா 15 அம்சத் திட்டம், பன்னாட்டுப் பார்வையாளர்களிடமிருந்து பாராட்டுகளைப் பெற்றுள்ளது. 15 அம்சத் திட்டத்தின் செயல்பாடான குழந்தை நலத் துணைத் திட்டம் 1994-95, 1995-96 ஆம் ஆண்டுகளில் செயல்படுத்தப்பட்டுள்ளது. 1996-97ஆம் ஆண்டில் இத்துணைத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு ரூ.819.31 கோடி ஆகும்.

17. குழந்தைகளுக்குச் சத்துணவு அளிப்பதில் தமிழ்நாடு மாநிலம் பிற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. 1996-97ல் சத்துணவுத் திட்டத்திற்கும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த





சத்துணவுத் திட்டத்திற்குமான ஒட்டுமொத்த நிதி ஒதுக்கீடு ரூ.354.36 கோடி ஆகும். மூன்றாவது தமிழ்நாடு ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டத்தின் ஆயத்தப் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது, இம்மாநிலத்திலுள்ள பாலர் பள்ளிச் சிறார்கள் அனைவருக்கும் சத்துணவும், சுகாதாரப் பாதுகாப்பும் தொடர்ந்து அளிக்கப்படுவதை உறுதி செய்யும்.

18. சுகாதார-மருத்துவப் பணிகள், அதிலும் குறிப்பாகத் தொடக்கச் சுகாதாரப் பணி, இந்த அரசு தனிக்கவனம் செலுத்துகின்ற முக்கியப் பணியாகும். சுகாதாரம்-குடும்ப நலன் குறித்த நிதி ஒதுக்கீடு 1995-96ல் ரூ.688.95 கோடி என்றிருக்க, 1996-97 ஆம் ஆண்டு இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தில் மொத்த நிதி ஒதுக்கீடு ரூ.737.08 கோடி ஆகும். அரசு மருத்துவ மனைகளிலும், சுகாதார மையங்களிலும் தற்போதுள்ள மருத்துவப் பணிகளின் தரத்தைக் கணிசமான அளவிற்கு மேம்படுத்துவதில் பெரிதும் கவனம் செலுத்தப்படுகிறது. 1996-97 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், மருத்துவமனைக் கட்டிடங்கள், சாதனங்கள் பராமரிப்பிற்குப் போதுமான அளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மருந்துகள், மருந்துப் பொருட்கள் வழங்குவதற்கான ஒட்டுமொத்த நிதி ஒதுக்கீடு ரூ.97 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மருத்துவப் பணிகள் நிறுவனம் வாயிலாக, மருந்துகள், அறுவைச் சிகிச்சைச் சாதனங்கள் வழங்குவதைச் சீரமைக்க இந்த அரசு எடுத்த முயற்சிகளை, அவையின் மாண்புமிகு உறுப்பினர்கள் நினைவு கூர்வர். இந்த நடவடிக்கைகள், இம்மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து அரசு மருத்துவமனைகள், தொடக்கச் சுகாதார நிலையங்களில் தரமான மருந்துப் பொருட்கள் கிடைக்கச் செய்வதை உறுதிசெய்து சமுதாயத்தின் மிக வறிய நிலையிலுள்ளவர்களுக்குப் பயனளிப்பதாக அமைந்துள்ளன. நம்முடைய இப்பணியை முன்மாதிரியாகக் கொண்டு, ஏனைய மாநிலங்களும் நடவடிக்கை எடுத்து வருகின்றன என்பது நமது அரசுக்குப் பெரிதும் மனநிறைவு அளிப்பதாகவுள்ளது. மருந்துகளைக் கொள்முதல் செய்து அரசுத் துறைகள் அனைத்திற்கும் வழங்கும்

(தொடர்ச்சி 49-ஆம் பக்கம் பார்க்க)

# ERODE

# RANA TEXTILE

# PROCESSORS (P) LIMITED

**REGISTERED OFFICE:**

474, Valayakkara Street

ERODE - 638 001.

Phone: 0424 - 214755

0424 - 214355

Fax: 0424 - 215102

உ



தான்சானியா நாட்டு முன்னாள் அதிபர் டாக்டர் ஜூலியஸ் நைரேரே மற்றும் அவரது துணைவியாருக்கு, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் விருந்து அளித்து நினைவுப் பரிசு வழங்கினார். (17.2.96)

# படமும் செய்தியும்

சென்னையிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் இயங்கி வருகின்ற இஸ்லாமிய சமுதாயக் கல்வி நிறுவனங்கள் மற்றும் தொண்டு இல்லங்களைச் சேர்ந்தவர்களும், வேறு சில முக்கிய முகமதியப் பிரமுகர்களும், ஆற்காடு இளவரசர் திரு முகமது அப்துல் அலி அவர்களுடன் வந்து, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களைத் தலைமைச் செயலகத்தில் சந்தித்தார்கள். (27.2.96)






# தொழில்வள மாநிலங்களையும் முந்தும் வகையில் தமிழகம்!

## மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரை

மகிந்திரா ∴ போர்டு மோட்டார் தொழிற்சாலைக்கான அடிக்கல் நாட்டும் இந்த விழாவில் கலந்து கொள்வதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தத் திட்டத்தின் மூலம் உலகளாவிய பொருளாதார வளர்ச்சியில் நமது முன்னேற்றம் புதிய அத்தியாயத்தைத் தொடங்குகிறது. உலக மோட்டார் தொழில் துறைக்குத் தலைமை வகிக்கும் போர்டு, இந்தியாவின் மாபெரும் தொழில் நிறுவனமான மகிந்திராவுடன்இணைந்துசெயல்படுவது தமிழகத்தில் மோட்டார்த் தொழில் வளர்ச்சியில் புதிய அத்தியாயம் மட்டுமல்ல, உலகப் பொருளாதாரப் போட்டியில் தமிழகம் உரிய இடம் வகிப்பதைக் குறிப்பதுமாகும்.

தமிழகம் நீண்ட காலமாகவே மோட்டார்த் தொழிலில் முன்னோடி மாநிலம். தமிழகத்தில் மோட்டார் பாகங்கள் தொழில் மூலம் கடந்த ஆண்டிலும் ரூ.2,200 கோடி வணிகம் நடந்திருக்கிறது. இந்தியா முழுவதையும் கணக்கில் கொண்டால் இது சுமார் 33 சதவிகிதம் ஆகும். மோட்டார் பாகங்கள் ஏற்றுமதியில் அகில இந்திய அளவில் உள்ள மொத்தத்தில் தமிழகத்தின் பங்கு 30 சதவிகிதமாக இருந்தது.

மோட்டார்களுக்குத் தேவைப்படுகின்ற உதிரிப்பாகங்கள் ஒவ்வொன்றும் இங்குத் தயாரிக்கப்படுகின்றன. பெரும்பாலான தயாரிப்பாளர்கள் உலக அளவில் போட்டியிடும் நிலையை அடைந்திருக்கிறார்கள்.

**கனவு நனவாகிறது**

சர்வதேசத் தரம் வாய்ந்த ஒரு பெரிய தொழில் நிறுவனம் தான் நமக்கு வேண்டும் என்ற நிலை இருந்தது. அந்தக் கனவும்




இன்று நனவாகத் தொடங்கியிருக்கிறது.

நமது மாநிலத்திற்கு மேலும் இதுபோன்ற இரண்டு, மூன்று பெரிய திட்டங்களைக் கொண்டு வர முடியும் என்று நம்புகிறேன். சென்னை, இந்தியாவின் மோட்டார்த் தொழில் நகராக, இந்தியாவின் 'டெட்ராய்ட்' ஆக இந்த அரசால் விளங்கப் போகிறது என்பது உறுதி.

தற்போதைய தாராளப் பொருளாதார சகாப்தத்தில் எந்த ஒரு மாநிலமும் முன்னேற்ற மடைய பெருமளவு தொழில் முதலீட்டினைப் பெற வேண்டும். அப்படிப் பெறுவதற்கு மாநிலத்தில் உரிய சூழ்நிலை வேண்டும். புதிய தொழில் கொள்கை அறிவிக்கப்பட்ட பின்பு, கடந்த 4 ஆண்டுகளில் தொழில் வளர்ச்சிக்கு ஏற்ற சூழ்நிலையை உருவாக்கப் பெரு முயற்சி செய்து வருகிறேன். தொழில் வளர்ச்சிக்கான கட்டுமான கட்டுக்கோப்பு, தொழில் அமைதி, தொழில்துறைக்கு ஊக்கம், தொழில் வளர அரசு உதவி ஆகியவைகளில் கவனம் செலுத்தி வருகிறேன்.

தொழில் வளர கட்டுமானத் தேவைகள் என்பதில் நிலம், மின்சக்தி, தண்ணீர் வசதி, போக்குவரத்து வசதி, மற்றும் வீட்டு வசதிகள், பள்ளிகள், மருத்துவ உதவிகள் முதலியன அடங்கும்.

இந்தத் தேவைகளுக்காகப் புதிய வளர்ச்சி மையங்களையும், தொழில்பேட்டைகளையும் அமைத்து வருகிறோம். தடையற்ற மின் வசதி, தொழில் வசதிக்கு மிக முக்கியமான தேவை என்பதால், மின் உற்பத்தியைப் பெருக்குவதில் முக்கியக் கவனம்செலுத்துகிறோம்.

**மின்வெட்டு இல்லாத தமிழகம்**

இன்று அகில இந்தியாவிலும் மின்வெட்டு இல்லாத மாநிலம் தமிழகம்தான். புதிய தொழில் திட்டங்களால், மின்சாரத் தேவை அதிகரிக்கும் நிலையிலும் இந்த மின் சக்தி வழங்கலைத் தொடர்ந்து நிலை நிறுத்தி வருவோம்.

**தண்ணீர் வசதி இரு பெரும் திட்டங்கள்**

புதிய தொழில்களுக்குத் தண்ணீர் வசதி என்ற வகையில் சென்னை நகருக்காகவும், தூத்துக்குடி, திருப்பூர், கடலூர், ஒசூர் ஆகிய தொழில் நகரங்களுக்காகவும் இரு மாபெரும் தண்ணீர் வழங்கு திட்டங்களைத் தொடங்குகிறோம்.

தொழில் வளர்ச்சித் தேவைப் பாடுகளைப் பூர்த்தி செய்வதில், மகாராஷ்டிரம், குஜராத், கர்நாடகம், ஆகிய தொழில்வள மாநிலங்களையும், முந்தும் வகையில் தமிழகம் சிறப்பிடம் பெற்றுள்ளது.

முதலீடு வருவதற்கு ஏற்ற சூழ்நிலையை ஏற்படுத்துவது என்பதைப் பொறுத்த வரையில், தமிழகம் இந்தச் சூழ்நிலையை நல்ல முறையில் உருவாக்கியிருக்கிறது. தொழிலாளர்கள் வேலை இழப்பு நாட்கள் இங்கு

மிகக் குறைவு. தொழிலாளர் உற்பத்தித் திறனும் இங்கு அதிகம். தொழில்நுட்பம் தெரிந்தவர்கள் இங்கு ஏராளமாக உள்ளனர். இது நமது சிறந்த மூலபலம் என்ற வகையில் தொழில்நுட்ப அறிவு இங்கு வளர்ந்துள்ளது.

புதிய தொழில்களுக்கு ஊக்கம் என்ற வகையில் மற்ற மாநிலங்களை முந்தும் அளவில் இங்கு வசதிகள் செய்து கொடுக்கிறோம். தொழில் தொடங்கும் அனுமதிகள் உடனுக்குடன் வழங்கப்படுகின்றன. அலுவலர்கள் தக்க முறையில் ஒத்துழைக்கிறார்கள். எனது தலைமையில் ஒரே இடத்தில் பல்வேறு வகைத் தொழில் அனுமதி கிடைக்க வழி செய்யப்பட்டிருக்கிறது. உலகம் முழுவதிலிருந்தும் முதலீடு வருவதற்குரிய நிலையை இது ஏற்படுத்தியிருக்கிறது.

இந்த நடவடிக்கைகள், தமிழகத்தை முதலீட்டுப் பெருக்கத்துக்கு உரிய மாநிலமாக ஆக்கியிருக்கின்றன.

**முதலீடுகள் குவிவதில் 2வது சிறப்பு அம்சம்**

ஆகஸ்டுத் திங்கள் 1991க்கும் ஜுன் திங்கள் 1995-க்கும் இடைப்பட்ட ஆண்டுகளில் நேரடியாக அயல்நாட்டு மூலதன வருகை என்ற அளவில் தமிழகம் நாட்டிலேயே இரண்டாவது இடம் வகிக்கிறது. முதலீடுகள் வகையில் குஜராத்துக்கு அடுத்த மாநிலமாகத் தமிழ்நாடு விளங்குகிறது.

போர்டு, ரூபாண்ட், பில்கிங்டன், சீகேட் போன்ற உலகின் பெரிய நிறுவனத் தலைவர்கள் வருகை மூலம் முதலீட்டுக்கு ஏற்ற மாநிலம் தமிழகம் என்பது புலனாகிவிட்டது. புதிய தொழில் திட்டங்களுக்கு வசதிகள் செய்து கொடுப்போம். சாலை வசதிகள், செய்தித் தொடர்புகள், துறை முகங்கள், வீட்டு வசதிகள் முதலியன ஏற்படுத்தி 21ஆம் நூற்றாண்டின் தொழில் தேவைகளையும் பூர்த்தி செய்ய ஏற்ற நடவடிக்கைகளை எடுப்போம்.



**தற்போது நம் மக்களுக்கு வேண்டியது படிப்பு மட்டும் அல்ல; அறிவும் வேண்டும். சுயமரியாதையும் வேண்டும். தன்மான உணர்ச்சியும், எதையும் பகுத்துணரும் திறனும், ஆராய்ந்து அறியும் அறிவும் தான் மிகவும் தேவை.**

**எதற்கும் சலியாது உழைத்துத் துன்பம் வந்தாலும், ஏச்சு வந்தாலும், எவ்வித இழப்புகள் ஏற்பட்டாலும் அதைப் பொருட்படுத்தாது எதிர்த்துழைத்துக் கடைசிவரை கொள்கையை நழுவவிடாது காத்து நிற்பதே உண்மைத் தொண்டின் குணமாகும்.**

- தந்தை பெரியார்

போர்டு - மகிந்திரா சென்னையைத் தங்கள் தொழிலகத்துக்காக தேர்ந்தெடுத்திருப்பதில் உண்மையாகவே மகிழ்ச்சி அடைகிறேன். திரு டிராட்மன், திரு கேஷப் மகிந்திரா ஆகியோருக்கு என் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். தொழில் மயமாக்குவதில் உதவி செய்ய விற்பனை வரிச் சலுகைகளையும் அளிக்கிறோம்.

**விற்பனை வரி விலக்கு**

இந்த கார்த் தொழிற்சாலையில் தயாரிப்புகளுக்காக மாநிலத்திலிருந்து பெறப்படும் இடுபொருட்களுக்கு விற்பனை வரி வேண்டாம் என்று உத்தரவிட்டிருக்கிறேன். மோட்டார் துணைப் பாகங்கள் தயாரிப்புத் தொழிலுக்கு இது பெரிதும் ஊக்கமூட்டுவதாக அமையும் என்று நம்புகிறேன். உலகத் தரம் வாய்ந்த தொழில் அமைவதில் இது உறுதுணையாகவும் அமையும்.

தமிழகத்தின் சிறப்பு நடவடிக்கைகள் மூலம் உலகத் தரம் வாய்ந்த தொழிலகம் இங்கு அமையும். 'மோட்டார் தொழில் பூங்கா' என்று சொல்லத்தக்க வகையில் புதிய துணைத் தொழில் பிரிவுகள் ஏற்படும். பெருமளவில் ஏற்றுமதிக்கும் முயற்சிக்கக் கூடிய வகையில் தொழில்கள் அமையும். இத்திட்டத்தைச் செயல்படுத்துவதில் அரசு எல்லா உதவியும், ஆதரவும் அளிக்கும் இந்தத் திட்டம் வெற்றியடைய என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்".

# இந்தியாவின் டெட்ராய்ட்டாகச் சென்னை நகரம் உருவாகிறது !

இந்தியாவின் மோட்டார் தொழில் நகரமாகச் சென்னையை உருவாக்கும் முயற்சியில், சென்னைக்கு அருகில் உள்ள மறைமலை நகரில் ரூ.1,500 கோடி செலவில், போர்டு மகிந்திரா கார் தொழிற்சாலை யானது 350 ஏக்கர் நிலத்தில் உருவாக உள்ளது. அமெரிக்கா வில் உள்ள 'போர்டு' மோட்டார் கம்பெனியும், மும்பாயைச் சார்ந்த மகிந்திரா நிறுவனமும் இணைந்து தமிழக அரசின் உதவியுடன் இத்தொழிற்சாலை தொடங்கப்பட இருக்கிறது.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், இக்கார்த் தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டிட 23.2.96 அன்று பகல் 12.00 மணியளவில் சென்னையிலிருந்து ஹெலி காப்டர் மூலம் மறைமலைநகர் வந்தடைந்தார். மாண்புமிகு முதல்வர் அவர்களை, போர்டு கம்பெனியின் நிர்வாக இயக்குநர் திரு ஜான்பார்க்கரும், மகிந்திரா அண்ட் மகிந்திரா நிர்வாக இயக் குநர் திரு ஆர்.கே. பீதாம்பரும் மலர்க்கொத்து கொடுத்து இனிதே வரவேற்றனர்.

பின்னர் விழா நடைபெறும் மேடைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் வரும்பொழுது போர்டு கம்பெனியின் சேர்மன் திரு அலெக்ஸ் டிராட்மன் அவர்களின் துணைவியாரும், மகிந்திரா அண்ட் மகிந்திரா நிறுவனத் தலைவர் திரு. கேசப் மகிந்திரா அவர்களின் துணைவி யாரும் மலர்க்கொத்து கொடுத்து வரவேற்றார்கள்.

பின்னர், வேத மந்திரங்கள் முழங்கவும், அபிராமி அந்தாதிப் பாடல் முழங்கவும் விழா தொடங்கியது. இந்த இனிய விழாவின் வரவேற்புரையாக, போர்டு மகிந்திரா கார் நிறுவன நிர்வாக இயக்குநர் ஜான் ஜி. பார்க்கர் உரையாற்றினார். அதனைத் தொடர்ந்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் போர்டு கார் நிறுவனப் பணி களை குத்துவிளக்கு ஏற்றி, தொடங்கி வைத்தார். அதன்பின் மேடையில் நின்றவாறு ஒரு பொத்தானை அழுத்தியதும், அடிக்கல் பெயர்ப் பலகையின் மீது இருந்த திரை விலகியவுடன் அனைவரும் கைதட்டி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். பின்பு மகிந்திரா அண்ட் மகிந்திரா குரூப் நிறுவனத் தனைவர் திரு கேசப் மகிந்திரா அவர்களும் அமெரிக்க போர்டு நிறுவனத் தலைவர் திரு அலெக்ஸ் டிராட்மன் அவர்களும் சென்னை யில் உள்ள அமெரிக்கத் தூதர் திரு திமோத்தி கவுசர் அவர் களும் அரசு தொழில்துறை முதன்மைச் செயலர் திரு சி.ராமச்சந்திரன், இ.ஆ.ப., அவர் களும், அரசு தலைமைச் செய லாளர் திரு என். அரிபாஸ்கர், இ.ஆ.ப, அவர்களும், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் எம். சின்னசாமி அவர்களும் வாழ்த்துரை வழங்கினார்கள்.

பின்னர், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உரையாற் றிய பின் இறுதியில் நன்றி யுரையாக, மகிந்திரா அண்ட் மகிந்திரா நிர்வாக இயக்குநர் திரு ஆர்.கே. பீதாம்பர் உரை யாற்றினார்.

இந்தச் சீர்மிகு விழாவில் மாநிலங்களவை உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், வாரியத் தலைவர்கள், தொழில் அதிபர்கள், பல வெளிநாட்டுப் பிரமுகர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். 1996-ஆம் ஆண்டு முதல் செயல்படத் தொடங்கும் இக் கார்த் தொழிற்சாலை, ஆண்டு ஒன்றுக்கு ஒரு இலட்சம் கார்கள் தயாரிக்கும் திறன் கொண்டதாக அமையும். இப் புதிய தொழிற்சாலைக்கு "மகிந்திரா போர்டு இந்தியா லிமிடெட்" என்றும், இங்கு உருவாகும்

காருக்கு "போர்டுபியஸ்டா" என்றும் பெயரிடப்பட்டுள்ளது.

உலகிலேயே அதிக அளவு கார்களைத் தயாரிக்கும் இரண்டாவது பெரிய நிறுவனம் போர்டு மோட்டார் நிறுவனம் ஆகும். உலகில் முதல் 500 நிறுவனங்களின் பட்டியலில் இது 2-வது இடத்தை வகிக்கிறது. இத்தொழிற்சாலைகளில் தயாரிக்கப்படும் கார்கள் பியஸ்டா என்று அழைக்கப்படுகிறது. கடந்த ஆண்டு மத்தியில் அமெரிக்காவில் அறிமுகமானது. இந்நிறுவனத்தில் மொத்தம் 3,38,000 நபர்கள் பணியாற்றுகின்றனர். மறைமலைநகரில் தொடங்கப்படும் இத்தொழிற்சாலையின் மூலம் 1,000 நபர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பும், 20,000 நபர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பும் கிடைக்கும். இவ்வகையான 'பியஸ்டா' கார்கள் நவீன தொழில்நுட்பத்துடன் தயாரிக்கப்படவிருக்கிறது. சிறப்புப் பாதுகாப்புத் தன்மை, நேர்த்தியான வடிவமைப்பு, கொண்டதாக இருக்கும்.

'இந்தியாவின் டெட்ராய்ட்' (அமெரிக்காவில் உள்ள டெட்ராய்ட் நகரில் தான் ஏராளமான பெரிய கார் தொழிற்சாலைகள் உள்ளன.) என்ற பெயரை நமது சென்னை நகரம் பெறும் நாள் வெகு தொலைவில் இல்லை எனலாம்.

**நிகழ்ச்சித் தொகுப்பு:**
**அ. மதிமாறன்**



# பெரியார் நூற்றாண்டு

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சராக டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் இருந்தபோதுதான் 18.9.1978இல் பெரியார் நூற்றாண்டு விழா தொடங்கப் பட்டது.

ஈரோட்டில் அவ்விழா தொடங்கி வைக்கப்பட்டபோது டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் 'பத்து அம்சத் திட்டம்' ஒன்றை வெளியிட்டார். அதன் விவரம் வருமாறு:

1. கோவை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, அதில் ஒன்றினுக்குப் பெரியார் மாவட்டம் என்று பெயரிடப்படும்.

2. கோவையில், பெரியார் பல்கலைக் கழகம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்கும்.

3. தமிழகத்தில் உள்ள வீதிகளின் பெயர்களில் உள்ள சாதிகளின் பெயர்கள் நீக்கப்படும்.

4. பெரியார் கூறிய எழுத்துச் சீர்திருத்தம் கொண்டுவரப்படும்.

5. ஈரோட்டில், பெரியார் அண்ணா நினைவகம் உள்ள கோர்ட் வீதிக்குப் பெரியார் பெயர் இடப்படும்.

6. பெரியார் பெயரில் ஓர் அருங்காட்சியகம் நிறுவப்படும்.

7. கலப்புமணம் செய்து கொண்டவர்களின் குழந்தைகளுக்கும், விதவை மணம் புரிந்து கொண்டவர்களின் குழந்தைகளுக்கும், தாழ்த்தப்பட்டோருக்கு அளிக்கப்படும் எல்லாச் சலுகைகளும் அளிக்கப்படும்.

8. பெரியாரின் கொள்கைகளைச் சட்டமாக்கி, யாரையும் துன்புறுத்தாமல், யாருக்கும் தொல்லை கொடுக்காமல் அவைகளைச் சட்டபூர்வமாக நிறைவேற்றிட நடவடிக்கை எடுக்கப்படும்.

9. பெரியாரின் நூல்களைத் தமிழகத்தில் உள்ள எல்லா நூலகங்களும் வாங்க ஆணையிடப்படும்.

பெரியாரின் கொள்கைகளைக் கிராமங்கள்தோறும் பரப்புவதற்காக 15 ஆயிரம் படித்த இளைஞர்கள் திரட்டப்படுவார்கள்.



# கன்று ஈனாமலேயே பால் கறக்கும் கறவை மாடுகள்

பெரியார் மாவட்டத்தில் பால் உற்பத்தியில் பல சாதனைகள் ஆற்றப்பட்டு வருகின்றன. குறிப்பாக, தூண்டப்பட்ட பால் உற்பத்தி முறையில் கன்று ஈனாமலே பால் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. என்ன ஆச்சரியமாக இருக்கிறதா? பெரியார் மாவட்டத்திற்கு வந்தால், கிட்டத்தட்ட 100 பசுக்கள் கன்று ஈனாமலேயே பால் கறக்கின்ற விஞ்ஞானத்தின் அதிசயத்தைக் காண முடியும்.

நீண்ட காலமாகத் தொடர்ந்து கருவூட்டல் செய்த பிறகும் சினை பிடிக்காமல் உள்ள வறட்டு மாடுகள் மற்றும் கிடாரிகளில் மருந்தை ஊசிகள் மூலம் செலுத்தி, கன்று ஈனாமலேயே பால் உற்பத்தியைச் செய்ய முடியும் என்று அறிவித்து செய்து காட்டுகிறார்கள் அங்குள்ள கால்நடை மருத்துவர்கள். இந்தத் தூண்டப்பட்ட பால் உற்பத்தித் திட்டம் மூலம் 21 நாட்கள் மருத்துவச் சிகிச்சைக்குப் பிறகு, மாடுகள் மற்றும் கிடாரிகள் கன்று ஈனாமலேயே ஒரு நாளைக்கு இரண்டு வேளைகள் பால் சுரந்து கறக்கின்றன. இந்தப் பால் இயற்கையாக மற்ற பசும்பாலைப் போலவே அனைத்துச் சத்துக்களும் நிரம்பியுள்ளன. தற்போது பெரியார் மாவட்டத்தில் 105 பசுக்கள் இத்திட்டத்தின் மூலம் பால் தந்து கொண்டிருக்கின்றன.

இந்தத் திட்டத்தின் மூலம் ஒரு சுமையாக இருந்த மலட்டு மாடுகள் அவற்றை வளர்க்கும் விவசாயிகளுக்குச் சுவையுள்ள பால் தரும் பசுக்களாக மாறியிருப்பதால் விவசாயிகளிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது.

கன்று ஈனாமலேயே பால் கறக்கும் இந்தப் பசுக்கள் மீண்டும் சினைப் பிடிக்கின்ற வாய்ப்பினைப் பெறுகின்றன. இந்தத் திட்டத்தில் ஒரு கால்நடைக்கு ஆகும் செலவு ரூ.850 மட்டும் தான். இந்தத் திட்டம் தற்போதைக்குப் பசுக்களில் மட்டுமே செயல்படுத்தப்படுகிறது. எருமை இனத்தில் இன்னும் செய்யப்படவில்லை. வறட்டு மாடுகள் நல்ல உற்பத்தி கறவை மாடுகளாக் மாறுவதால், விவசாயிகளுக்கு ஏற்படும் பொருளாதார இழப்பைச் சரி செய்வதுடன் நாட்டிற்கும் பால் செல்வத்தை அதிகரிக்கும் நல்ல திட்டமாக இது விளங்குவதால் அனைவரின் வரவேற்பையும் பெற்று வருகிறது.

*With Best Compliments From*

# MILKA BREAD

## PIONEER BAKERIES (P) LTD.,

**Registered Office & Factory**

MILKA JUNCTION

Poondurai Road, Moolapalayam,

Erode - 638 002

Phone: 216719, 217405

Fax : 0424 - 217405

*With Best Compliments From*

# T P K BUS SERVICE

Phone: 78806, 70219,
Res. : 76641

OFFICE & WORK SHOP

6/2, Nachiappa Street

Backside to New Bus Stand

ERODE - 1

BRANCHES

Komarapalayam ◆ Sankari

Prop: T.P.K. Balamurugan



# "சமூக நீதிக் கொள்கை, புரட்சிகரமான சமுதாய மாற்றத்தின் தூண்டுகோல்!"

## மாண்புமிகு முதலமைச்சர் பெருமிதம்

***1995-ஆம் ஆண்டுக்கான 'தந்தை பெரியார் சமூகநீதி விருதை***
***திரு கி. வீரமணி அவர்களுக்கு வழங்கும் விழாவில்,***
***மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்***
***ஆற்றிய சிறப்புரை***

**க**டந்த 5 ஆண்டுகளாகத் தந்தை பெரியார் அவர்களின், பல்வேறு சமுதாயச் சீர்திருத்தக் கொள்கைகளைச் செயல்படுத்தி வரும் எங்கள் அரசின் சார்பில் **1995**-ஆம் ஆண்டிற்கான தந்தை பெரியார் சமூகநீதி விருதினை, திராவிடர் கழகப் பொதுச் செயலாளர், மதிப்பிற்குரிய சகோதரர் திரு கி. வீரமணி அவர்களுக்கு வழங்கி உங்கள் அனைவரையும் நேரில் காண்பதில் நான் பெரு மகிழ்ச்சியும் பேருவகையும் அடைகிறேன்.

சமூக நீதிக் கொள்கைகளைச் செயல்படுத்துவதில், காலங்கால மாக இந்தியத் துணைக்

கண்டத்தில் உள்ள மற்ற மாநிலங்களுக்குத் தமிழ்நாடு ஒரு வழிகாட்டியாக - முன்னோடி யாக இருந்து வந்துள்ளது. அன்று திராவிட இயக்கத்தின் முன் னோடிகள் வகுத்துத் தந்த, வகுப்புவாரி பிரதிநிதித்துவம் என்ற கொள்கை உங்கள் அன்புச் சகோதரியின் ஆட்சிக் காலத்தில் முழுப் பரிமாணத்தை அடைந்து, 69 சதவிகித இட ஒதுக்கீட்டுச் சட்டமாக இன்று உருவெடுத்துள்ளது.

சீரிய சமூக நீதிச் சிந்தனை களுக்கு வழி வகுத்த, இந்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இன்று ஆலவிருட்சமாக வளர்ந்து உங்கள் அன்புச் சகோதரியின் ஆட்சியில் ஒரு சட்டமாக, அது வும் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் முழுப் பாதுகாப் பைப் பெற்ற ஒரு சட்டமாக முழுமை அடைந்துள்ளது என் பதை எண்ணிப் பார்த்து நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

பொது வாழ்க்கையில் எங் களுக்குக் கலங்கரை விளக்கங் களாக நின்று வழி நடத்திச் செல்லும் சான்றோர்கள், இட ஒதுக்கீட்டுக் கொள்கையைத் தங்கள் உயிரினும் மேலான ஒரு கொள்கையாகக் கடைப்பிடித்து வந்தனர். அடித்தளத்து மக்கள் நலிந்த பிரிவினர், சமுதாயத்தில் ஒதுக்கி வைக்கப்பட்டோர் ஆகி யோர் வாழ்க்கையில் மேன்மை அடைய இந்தச் சமூக நீதிக் கொள்கை புரட்சிகரமான சமு தாய மாற்றத்திற்கு ஒரு தூண்டுகோலாகவும் முற்போக் குச் சிந்தனைகளுக்கு ஒரு திறவுகோலாகவும் அமைந்திருந் தது.

அந்த உணர்வு சற்றும் குறையாமல் சமூக நீதியைக் கட்டிக் காக்கும் மகத்தான பணியில் இன்று நாங்கள் ஒரு மாபெரும் சாதனையை நிகழ்த் திக் காட்டியுள்ளோம்.

பெரியாரின் சமூக நீதிக் கொள்கைகளுக்கும் பேரறிஞர் பெருந்தகை அண்ணாவின் சமு தாய முன்னேற்றச் சிந்தனை களுக்கும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் மனித நேய எண்ணங்களுக்கும், செயல் வடிவம் கொடுத்த மக்கள் நல அரசு, எங்கள் அரசு என்பதை நாங்கள் நிரூபித்துக் காட்டி யுள்ளோம். தமிழகத்தின் சமூக நீதி வரலாற்றில் எங்கள் சாதனை ஒரு புதிய மைல் கல்லாக என்றென்றும் விளங் கும் என்று உறுதியாக நம்பு கிறேன்.

அந்த வகையில் முற்போக் குச் சிந்தனைகளுக்கு வழி வகுத்து, பெண் கல்வி வளர்ச் சிக்கு ஓங்கிக் குரல் கொடுத்த, தந்தை பெரியாரின் இலட்சியங் களையும், கொள்கைகளையும் பரப்பி சமுதாயப் பணி ஆற்றி வரும் ஒருவருக்கு ஆண்டு தோறும் "தந்தை பெரியார் சமூகநீதி விருது" வழங்கிக் கௌரவிப்பது என எங்கள் அரசு முடிவு செய்தது.

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரின் கொள்கைகளை நாடெங்கும் பரப்பி நல்ல சமுதாயப் பணிகளை நாளும் மேற்கொண்டு வரும் மக்கள் நலத் தொண்டர், திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் அருமைச் சகோதரர் மதிப்பிற் குரிய திரு கி. வீரமணி அவர் களுக்கு, இந்த விருதினை இன்று வழங்கியதில் நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

---

★ **பொதுத் தொண்டு செய்ப வனுக்கு ஏற்படும் தொல்லைகள், அவன் தனது இலட்சியத் திற்குக் கொடுக்கும் விலை.**

**—தந்தை பெரியார்**

---

தந்தை பெரியாரின் பெயரில் அமைந்த இந்த விருதினைப் பெற முழுத் தகுதி படைத்த ஒருவர் இன்று இருக்கிறார் என்றால், அவர் நிச்சயமாகத் திரு கி. வீரமணி அவர்களாகத் தான் இருக்க முடியும். தனது வாழ் நாளின் பெரும் பகுதியைத் தந்தை பெரியாருக்குத் தொண்டு செய்வதிலும் – அவர் தம் கொள்கைகளைப் பரப்பி, சமுதாய நலப் பணிகளை மேற்கொள்வதிலும் செலவிட்டு வருகிற திரு கி. வீரமணி அவர் களைவிட, தகுதியானவர் வேறு எவர் இருக்க முடியும்? பெரியாரின் கொள்கைகளைத் தொடர்ந்து மக்கள் மத்தியில் பரப்பி வருவதோடு கல்வி நிலையங்களையும், மருத்துவ மனைகளையும் ஏற்படுத்தி அவற் றின் மூலம் மக்களுக்கு அயராத கல்வித் தொண்டையும், சமு தாயத் தொண்டையும் ஆற்றி வரும் பெரியாரின் சீடர், அவரது வழித் தோன்றல், மதிப்பிற்குரிய திரு கி. வீரமணி அவர்கள் நமது அனைவரின் பாராட்டுதலுக்கும், போற்றுதலுக்கும் உரியவர் ஆவார்.

தந்தை பெரியாரின் சமு தாயச் சீர்திருத்தக் கருத்துக் களுக்கும் சமூக நீதி காக்கும்

இலட்சியங்களுக்கும் இன்று செயல் வடிவம் கொடுத்து அல்லும் பகலும் அயராது பாடுபட்டு வரும் திரு கி.வீரமணி அவர்களுக்குத் தமிழக அரசின் சார்பிலும் எனது சொந்த சார்பிலும் எனது நெஞ்சார்ந்த நல்வாழ்த்துக்களையும் இதயம் கனிந்த பாராட்டுக்களையும் உரித்தாக்கிக் கொள்கிறேன்.

திரு கி. வீரமணி அவர்கள் பொருளாதாரத்தில் முது கலைப் பட்டமும் சட்டக் கல்வியில் பட்டமும் பெற்ற ஒரு சிறந்த கல்வியாளர். தந்தை பெரியார் அவர்கள் "விடுதலை" நாளிதழை நடத்தும்போது திரு கி.வீரமணி அவர்கள் தந்தை பெரியாருக்கு உதவியாக உறுதுணையாக இருந்து செயல்பட்டு வந்துள்ளார். பின்னர் 1978-ஆம் ஆண்டு முதல் 'விடுதலை' நாளிதழின் ஆசிரியராகப் பொறுப் பேற்று ஒரு செய்தித் தாளின் இலட்சிய ஆசிரியராகச் சீரிய முறையில் பணியாற்றி வருகின்றார்.

தனது மனத்திற்குச் சரி என்று பட்ட கருத்தை, அது எத்தனைக் கசப்பானதாக இருந்தாலும் அதைத் துணிவுடன் தயக்கமின்றி வெளிப்படுத்தும் ஆற்றல் படைத்தவர் திரு கி. வீரமணி அவர்கள். அதே நேரத்தில், அடுத்தவர் மனம் சற்றும் புண்படாமல், தனது கருத்துக்களை எடுத்துரைக்கும் திறமையையும் உரிய பண்பையும் நான் அவரிடம் கண்டிருக்கிறேன்.

பெரியாரின் கொள்கைகளைச் செயல்படுத்துவதில்

**☆ மனதில் மாசு, மதவெறி, சாதி, சுயநலம், ஆணவம் இவற்றை மக்கள் விட்டொழிக்க வேண்டும், அப்போதுதான் நம் நாடு முன்னேறும்.**
**—பேரறிஞர் அண்ணா**

இம்மியளவும் அவர் விட்டுக் கொடுப்பதில்லை என்பதையும் நான் நன்கறிவேன். தந்தை பெரியார் அவர்கள் திராவிடர் கழகம், பொதுத் தேர்தலில் போட்டியிடக் கூடாது என்று அன்று இட்ட கட்டளையை இன்று வரை சிரமேற்கொண்டு செயல்படுத்தி வருவதிலும்; தந்தை பெரியாரின் அடியொற்றி பெண் கல்வி வளர்ச்சிக்குத் தன்னை அர்ப்பணித்துச் செயல்பட்டு வருவதிலும் திரு கி.வீரமணி அவர்கள் உயர்ந்து நிற்கிறார். அவரது இலட்சியப் பிடிப்பும் அர்ப்பணிப்பு உணர்வும் போற்றிப் பாராட்டத் தக்கவை ஆகும்.

கடந்த 50 ஆண்டுக் காலமாக அவர் தமிழகத்தின் மூலை முடுக்குகளுக்கும் ஏன், வெளி மாநிலங்களுக்கும் அயல் நாடுகளுக்கும் பயணம் செய்து தந்தை பெரியாரின் கொள்கைகளைப் பரப்பி வருவதோடு, சமுதாய நற்பணிகளையும் மேற்கொண்டு வருகிறார். தஞ்சையில் இயங்கி வரும் பெரியார் மணியம்மை மகளிர் தொழில்நுட்பக் கல்லூரி இந்தியாவிலேயே—ஏன்? உலகிலேயே, பெண்களுக்கெனப் பிரத்தியேகமாக ஆரம்பிக்கப் பட்ட முதல் பொறியியற் கல்லூரி என்ற பெருமையை உடையது என்பது நமக்கெல்லாம் பெருமை தரும் செய்தி ஆகும்.

திரு கி. வீரமணி அவர்கள் அனைவரையும் கவரும் பேச்சாற்றலும், கருத்துக்களை ஆணித் தரமாக வெளிப்படுத்தும் எழுத்தாற்றலும் ஒருங்கே பெற்ற ஒரு சிந்தனையாளர். அவர் எழுதிய நூல்களும், கட்டுரைகளும் ஏராளம்.

69 சதவிகித இட ஒதுக்கீட்டுக் கொள்கைக்கு நிரந்தரப் பாதுகாப்பைப் பெற்றுத் தந்த சாதனைக்காகப் பல்வேறு கட்சியினர் எனக்கு அளித்த பாராட்டு விழாவில் உரையாற்றும் போது, மதிப்பிற்குரிய சகோதரர் திரு கி. வீரமணி அவர்கள், சமூக நீதி காக்க தன் வாழ்க்கையை அர்ப்பணித்த தந்தை பெரியாரின் பெயரில் ஒரு விருதினை ஏற்படுத்தி, சமூக நீதி காக்கும் சமுதாயப் பணியை ஆற்றும் ஒருவருக்கு ஆண்டுதோறும் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அவரது சீரிய ஆலோசனையை ஏற்று அந்த விழா மேடையிலேயே தந்தை பெரியாரின் இலட்சியப் பாதையில் சமுதாயப் பணி ஆற்றுவோருக்கு ஆண்டுதோறும் "தந்தை பெரியார் சமூகநீதி விருது" தமிழக அரசால் வழங்கப்படும் என்று அறிவித்தேன்.

அன்று நிச்சயம் இந்த விருது தனக்கு வழங்கப்படும் என்று திரு கி. வீரமணி அவர்கள் எண்ணியிருக்கமாட்டார். ஏனெனில், அவர் விருதுகளுக்கும், விளம்பரத்திற்கும் அப்பாற் பட்டவர் என்பதே எனது கணிப்பு.

விருதுகள் அவரைத் தேடி வந்தாலும் கூட, அதற்காக

ஆசைப்படாத ஒரு தூய தொண்டுள்ளம் படைத்த உறுதியான மனிதர் அவர். எனவே, தந்தை பெரியாரின் திருப் பெயரில் வழங்கப்படுகின்ற இந்த விருதினை அவரது சீடரும் அவரது வழித் தோன்றலுமான சகோதரர் திரு கி. வீரமணி அவர்களுக்கு வழங்கலாம் என்று நான் தெரிவித்த கருத்தை எனது அமைச்சரவையில் இடம் பெற்றுள்ள அனைத்து அமைச்சர்களும் ஒருமனதாக வரவேற்று ஏற்றுக் கொண்டார்கள். இந்தச் சீரிய விருதினை மிகவும் தகுதி படைத்த ஒருவருக்கு வழங்கியதில் நான் உண்மையில் பெருமிதம் அடைகிறேன்.

திரு கி. வீரமணி அவர்கள் மேலும் பல்வேறு சிறப்புகளையும் புகழையும் பெற்று நீடூழி வாழ வேண்டும் என்று நிறைந்த மனதோடு நெஞ்சார வாழ்த்துகிறேன்.

இந்த விழாவில் கலந்து கொண்ட நீங்கள் அனைவரும் எல்லா வளமும் நலமும் பெற்று வாழ்வாங்கு வாழ வேண்டும் என்ற எனது நெஞ்சத்துப்பேரவாவினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### பிராமி எழுத்துக்கள்

தமிழ்நாட்டில் அரிக்கமேடு, கொற்கை, அழகரை, உறையூர், கரூர், முட்டம், வல்லம், காஞ்சிபுரம் போன்ற பல ஊர்களில் கிடைந்துள்ள பானை ஓடுகள் மூலம் பண்டைய பிராமி எழுத்து வடிவம் கிடைக்கப்பெற்றுள்ளது. ஆனால், அவைகள் எல்லாவற்றையும் விட, கொடுமணலில் மிகவும் அதிகமாகக் கிடைத்துள்ளன.

கொடுமணல் பகுதியில் கிடைக்கப் பெற்றப் பானை ஓட்டுப் பகுதியில் பிராமி எழுத்து வடிவங்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.



## மாண்புமிகு முதல்வருக்குப் பரிசு

**தி**ராவிடர் கழகப் பொதுச் செயலாளர் திரு கி. வீரமணி அவர்கள் ஏற்புரை நிகழ்த்தும் முன்பு, தமிழில் அறிவியல் கருத்துக்கள் இடம் பெற வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெஜெயலலிதா அவர்கள், தஞ்சையில் எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் கூறியதற்கிணங்க, 4,000 அறிவியல் சொற்களுக்குச் சரியான தமிழ்ச் சொற்களைக் கொண்ட "தமிழ் அறிவியல் அகராதி"யைக் கொண்ட கம்ப்யூட்டர் சாப்ட்வேர் ஒன்றை மாண்புமிகு முதல்வர் சமூக நீதிகாத்த வீராங்கனை - புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களிடம் வழங்கினார். இதனை சென்னையில் உள்ள பெரியார் கணிணி ஆய்வுக் கல்வியகமும், தஞ்சை வல்லத்தில் உள்ள பெரியார் நூற்றாண்டு மகளிர் தொழில்நுட்பக் கல்லூரியும் இணைந்து தயாரித்தது ஆகும்.

# 'தந்தை பெரியார் சமூகநீதி விருது' வழங்கும் விழா

தமிழக அரசால் அறிவிக்கப்பட்ட 1995-ஆம் ஆண்டிற்கான 'தந்தை பெரியார் சமூகநீதி விருது' வழங்கும் விழா சென்னைக் கலைவாணர் அரங்கத்தில் எழுச்சியுடனும், உணர்ச்சியுடனும் 26.2.1996 அன்று மாலை நடைபெற்றது.

'தந்தை பெரியார் சமூகநீதி விருதினை, முதன் முதலாகத் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் திரு கி. வீரமணி அவர்களுக்கு, மாண்புமிகு தமிழக முதல்வர் சமூக நீதிகாத்த வீராங்கனை புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் வழங்கிச் சிறப்பித்தார்.

இந்த எழில்மிகு விழா மேடையில், தந்தை பெரியார், மாண்புமிகு முதல்வர் திருவுருவப் படங்களுடன், 'தந்தை பெரியார் சமூகநீதி விருது - 1995 வழங்கும் விழா' என்ற வாசகங்கள் பொறிக்கப்பட்டிருந்தன. விழா மேடையின் இரு பக்கச் சுவர்களிலும் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரின் ஒளிச்சுடர் வடிவமைக்கப்பட்டு இருந்தது.

விழா மேடையில் தலைவர்கள் அமர்வதற்கு முன்பு, தமிழக அரசின் பெரியார் சமூக நீதி விருதை, முதன் முதலாகத் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் திரு கி.வீரமணி அவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் பெற இருக்கிறார் என்று அறிவித்தவுடன், விழா அரங்கமே பொது மக்களின் கையொலியால் அதிர்ந்தது. இவ்விழாவின் வரவேற்புரையாக மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு கு. லாரன்ஸ் அவர்கள் உரையாற்றினார். அவரைத் தொடர்ந்து மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ்.டி.சோமசுந்தரம் அவர்களும், மாண்புமிகு தமிழகச் சட்டப்பேரவைத் தலைவர் திரு சேடபட்டி இரா. முத்தையா அவர்களும் வாழ்த்துரை வழங்கினார்கள். பிறகு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் திரு கி. வீரமணி அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தி 5 பவுன் மதிப்புள்ள பதக்கத்தைப் பலத்தக் கரவொலிக்கிடையே அணிவித்து, "பெரியார் சமூகநீதி விருது" என்ற வாசகமும், தந்தை பெரியார், தமிழக முதல்வர் உருவப் படங்களும் பொறிக்கப்பட்ட வெள்ளித் தட்டை, நினைவுப் பரிசாக வழங்கிக் கௌரவித்து, மாண்புமிகு முதல்வர் அவர்கள் விழாப் பேருரையாற்றினார். பிறகு திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் திரு கி. வீரமணி அவர்கள் ஏற்புரை நிகழ்த்தும் போது, 1938-ஆம் ஆண்டு தந்தை பெரியாருக்குப் பெண்கள் தான் பெரியார் என்ற பட்டத்தை அளித்தார்கள். இப்போது பெண் முதலமைச்சர் மூலமாகவே தந்தை பெரியார் விருது தரப்படுவது குறித்து, சுட்டிக் காட்டியபொழுது விழா அரங்கத்தில் உள்ளோரின் கையொலி, சில நிமிடங்கள் கழித்துத் தான் அடங்கியது. இறுதியாக, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைச் செயலாளர் திரு எம். தங்கதுரை, இ.ஆ.ப., அவர்கள் நன்றியுரையாற்ற விழா இனிதே முடிவடைந்தது.

இவ்விழாவில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், வாரியத் தலைவர்கள், திராவிடர் கழகத்தைச் சார்ந்த பெரியோர்கள், பொதுமக்கள், மாணவ மாணவியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். விழா நடைபெறும் இடம் சுற்றி வண்ண விளக்குகளாலும், தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டு ஒளி மயமாகத் திகழ்ந்தது.

---

**நிகழ்ச்சித் தொகுப்பு:**
**அ. மதிமாறன்**

# இந்தியாவில் முன்னணியில் விளங்கும் தமிழ்நாடு காவல்துறை

## மாண்புமிகு முதல்வர் பாராட்டு

**சி**றப்பாகவும், வீரதீரத்துடனும் செயலாற்றுவதில் தங்களை மற்றவர்களிடமிருந்து வேறுபடுத்தி, கடமையாற்றிருக்கும், தேர்ந்தெடுக்கப் பட்ட காவல்துறையைச் சேர்ந்த ஆண், பெண் அலுவலர்களுக்குக் குடியரசுத் தலைவர் பதக்கங்களை இன்று வழங்குவதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். தங்களுக்கு மட்டும் இவர்கள் புகழைத் தேடிக்கொள்ளாமல் கூடவே தான் மேற்கொண்ட கடமையில் ஈடுபாடு, செயல்பாட்டில் உறுதி, அர்ப்பணிப்புப் போன்றவை மூலம் தமிழகத்திற்குப் பெருமை தேடித்தந்திருக்கிறார்கள்.

நம்முடைய காவல்துறை அலுவலர்களில் பலர் சீரிய சேவை, வீரதீரச் செயல்கள் ஆகியவற்றிற்காகக் குடியரசுத் தலைவரின் தங்கப் பதக்கங்களையும், உயிர் காக்கும் தீரச் செயல்களுக்காகப் பாரதப் பிரதமரின் பதக்கங்களையும் இன்று பெறுவதில் நான் உண்மையிலேயே பெருமிதம் அடைகிறேன். இது வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒரு நிகழ்ச்சியாகும். குடியரசுத் தலைவர் பதக்கமும், விருதும் பெறுகிற அனைவருக்கும் என் இதயங்கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு காவல்துறை, பணித்திறமை, தொழில் நேர்மை ஆகியவற்றில் இந்தியாவிலேயே சிறந்த இடத்தைப் பெற்றுள்ளது. அண்மையில் நவீன ஆயுதங்களைப் பயன்படுத்துவதிலும், அதிநவீன தகவல் தொடர்புச் சாதனங்களையும் பயன்படுத்துவதிலும், கணிணி போன்ற சாதனங்களைப் பயன்படுத்துவதிலும், விரைவான முன்னேற்றம் கண்டு வீரநடை போடுகிறது. அபரிதமான துணிச்சல், தனித்தன்மையான வீரம், கடினமானப் பணிகளையும் வெற்றிகரமாக நிறைவேற்றி, புரிகின்ற சாதனை, கடமையில் முழு ஈடுபாடு, அர்ப்பணிப்பு ஆகியவையே நாட்டில் மிகவும் பாராட்டத்தக்க ஒரு காவல் படையாகத் தமிழ்நாடு காவல்துறையை உயர்த்திக் காட்டியுள்ளது.

பயங்கரவாதத்தை எதிர்த்து, அடக்குவதிலும் சரி, பொது மக்களுக்கும் அரசுக்கும் இடையே நெருங்கிய உறவை மேம்படுத்துவதிலும் சரி, குற்றங்களைக் குறைத்து, சட்டத்திற்குப் புறம்பான செயல்களில் ஈடுபடுபவர்களை அடக்குவதிலும் சரி, இடர்ப்பாட்டில் சிக்கிக் கொண்டு, தவிப்பவர்களுக்கு உதவுவதிலும் சரி, தமிழ்நாடு காவல்துறை எப்போதுமே சிறப்பாகச் செயல்பட்டு, நற்பெருமையினை நிலைநாட்டி, தமிழ்நாட்டிற்கு என்றென்றும் பெருமை தேடித் தந்துள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் காவல்துறை பல கடுமையான நெருக்கடியைச் சந்திக்க நேர்கிறது என்பதில் ஐயமில்லை. மாறிவரும் சமுதாய சூழ்நிலைக்கேற்ப வன்முறை, பதட்டம், குற்றங்கள் இழைப்பதில் அதிநவீனம் போன்ற சமுதாயக் கேடுகளை எதிர்கொள்ளும் சூழ்நிலையில் காவல்துறை இருக்கிறது. இன்று உலக அளவில் இதே நிலைமைதான் எங்கும் உள்ளது. இதன் காரணமாகவே, காவல்படையை நவீனமயமாக்கி, மேம்படுத்தும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். மின்னணுச் சாதனங்களில் உயர் தொழில் நுட்ப மேம்பாடு, தகவல் தொடர்புச் சாதனம் மற்றும் ஆற்றல் மிக்க கணிணிகளின் துணையோடு உலகம் முழுவதிலுமே காவல்துறையை நவீனப்படுத்திடும், முயற்சிகள் தொடங்கியுள்ளன.

தமிழகமும், அந்த வகையில் முன்னணியில் இருப்பதைக்

கண்டு நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். அதிநவீனப் பாது காப்புச் சாதனங்கள், தகவல் தொடர்புத் துறையில் நவீன டிஜிட்டல் கருவிகள், கணினி மூலம் விரல் ரேகைகளை ஸ்கேன் செய்தல், புள்ளி விவரங் களைத் திரட்டி இருப்பில் வைத்தல் மற்றும் சரிபார்த்தல் ஆகியவற்றில் தமிழ்நாடு இந்தியாவிலேயே முதல் இடம் வகிக்கிறது என்பதிலும் நான் மகிழ்ச்சியடைகிறேன். கடந்த 5 ஆண்டுகளில் தமிழகக் காவல் துறைக்கு நவீன கருவிகள், வாகனங்கள், பயிற்சி முறைகள் மனிதவள மேம்பாடு ஆகிய வற்றிற்காக ஒதுக்கப்படும் நிதியை ஒவ்வொரு நிதிநிலை அறிக்கையின்போதும் அதிக அளவில் ஒதுக்கியிருக்கிறோம். இதன் விளைவாகவே நாட்டில் மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது தமிழகம் மிகவும் தேர்ச்சிப் பெற்ற, பணித் திறமைமிக்க, கட்டுப்பாடு மிக்க, காவல்படையைப் பெற்றிருப் பதை நாம் அறிய முடியும். மாநிலத்தில் கடந்த காலத்தில் தலைதூக்கியிருக்கும் பலவித மான சவால்களையும், நெருக் கடியான சூழ்நிலைகளையும், வன்முறைகளையும் துணிச் சலாக, திறமையாக, பொறுப் புணர்வோடு எதிர்கொண்டு, குற்றங்களைக் குறைத்திருப் பதால் தமிழ்நாடு காவல்படை சிறப்பாகப் பணியாற்றியுள்ளது என்பதைச் சொல்வதிலும் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

குற்றங்களைக் குறைப் பதிலும், சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதிலும் நமது காவல்துறையின் பணி மகத் தானது. இவ்விரண்டு பொறுப்பு களையும் நிறைவேற்றுவதில் தங்களிடமுள்ள எல்லா வசதி களையும், காவல்துறை பயன் படுத்தி, தன்னுடைய பொறுப்பு களை மேம்பட நிறைவேற்றிட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

முற்போக்கான நமது சமுதாயத்தில், சட்டத்தின் பாது காவலர்களாக மட்டும் செயல் பட்டால் போதாது. ஏழை எளிய மக்கள், நலிந்த தாழ்த்தப்பட்ட மக்களின் காவலர்களாகவும் காவல்துறை செயல்பட வேண்டும் என்று மக்கள் எதிர்பார்க் கிறார்கள். சுருங்கச் சொல்லின், நீதி, நியாயத்தின் வழிகாட்டியாக அவர்கள் செயல்பட வேண்டும் என்றும் எதிர்பார்க்கிறார்கள்.

பெண்கள், குழந்தைகள், முதியோர், ஒதுக்கப்பட்டோர் போன்றோர் தங்களுக்குப் பாது காப்பைக் காவல்துறை யிடமிருந்து எதிர்பார்க்கிறார்கள். இந்த ஒரு காரணத்திற்காகவே மக்களின் நியாயமான தேவை களை நிறைவேற்றுபவர்களா கவும், பொது மக்களிடத்தில் அன்பும் பரிவும் கொண்டிருப்ப வர்களாகவும், மனித நேயங் கொண்ட காவல்துறையை உருவாக்குவதில் அதிக அக்கறை காட்டி வருகிறேன்.

மாநிலம் முழுவதிலும், இயங்கி வரும் காவல்துறை நண்பர்கள் இயக்கம், மற்றும் 57 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் தமிழ்நாடு காவல் துறையை மனித நேயம் மிக்கதாய் ஆக்குவதற்கான நல்ல சான்றுகளாகும். தமிழ்நாடு காவல்துறையில் மேலும் மேலும் பெண்களைச் சேர்த்துக் கொள் வதன் மூலம், மக்கள் காவல் துறை நல்லுறவு உருவாகும் என்பதில் எனக்கு நல்ல நம்பிக்கை உள்ளது.

போதை மருந்து, பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதி, பாலியல்



குற்றங்கள் ஆகிய தீமைகளை வேரோடு களைந்து, மக்களின் உற்ற நண்பனாக, தமிழ்நாடு காவல்துறை விளங்கும் என்பதிலும் எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை உண்டு.

தமிழ்நாடு காவல்துறைத் தலைவர் திரு வால்டர் தேவாரம் அவர்களின் தலைமை தமிழ்நாட்டுக் காவல்துறைக்கும், தமிழ்நாட்டிற்கும் மேலும் பல சிறப்புகளையும், பாராட்டுக்களையும் குவிக்கும் என்பதில் ஐயமில்லை.

விருதுகளையும், பதக்கங்களையும் இன்று பெற்றுள்ள காவல்துறை, தீயணைக்கும் படை, ஊர்க்காவல் படை ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த ஆண், பெண் அலுவலர்களுக்கு மீண்டும் என் 'இதயங்கனிந்த வாழ்த்துக்களையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறேன். எதிர்காலத்தில் அவர்களது முயற்சிகளில் மேலும் பல வெற்றிகளையும், புகழையும் குவிக்கவும் வாழ்த்துகிறேன். தமிழ்நாடு காவல்துறையினர் பாரம்பரியத்தையும், தளராமுயற்சியையும், கட்டிக்காக்கும் சீரிய பணியைத் தொடர்வீர்கள் என்ற நம்பிக்கையும் எனக்கு உண்டு.

**(சென்னைக் கலைவாணர் அரங்கில் 17.1.96 அன்று நடைபெற்ற குடியரசுத் தலைவர் பதக்கம் வழங்கும் விழாவில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம்).**

**பண்டைய பர்கூர் மலைப்பகுதி**

பண்டைய பர்கூர் மலைப்பகுதி கன்னட அரசர்களின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. அக்காலத்தில் போரில் ஈடுபட்டு வெற்றிவாகை சூடிய வீரர்களின் நினைவாக, நாட்டப்பட்ட வீரக்கற்கள் இன்றுமுள்ளன. மலைப்பகுதிகளில் சோளகர் என்ற பழங்குடியினர் வாழ்ந்து வருகின்றார்கள்.


'தமிழரசு' பெரியார் மாவட்டச் சிறப்பிதழ் சிறக்க நல்வாழ்த்துக்களுடன்

**கலைமகள் கல்வி நிலையம்,**

மகளிர் மேனிலைப் பள்ளி, மெட்ரிகுலேஷன் பள்ளி, துவக்கப் பள்ளி
குழந்தைகள் ஆங்கிலப் பள்ளி, ஈரோடு



இருமொழிச் சொற்கொண்டல், தென்னகக் கல்வி மேதை, அமரர் திரு எஸ். மீனாட்சி சுந்தரனார், பி.ஏ.,எல்.டி., அவர்களால் 2 ஆசிரியைகளுடனும், 77 சிறார்களுடனும் ஈரோட்டில் தோற்றுவிக்கப்பட்ட கலைமகள் கல்வி நிலையம், இன்று ஏறத்தாழ 6,000 குழந்தைகள், 200 ஆசிரியர், அலுவலருடன், பெண்கள் மேனிலைப் பள்ளி, துவக்கப் பள்ளி, குழந்தைகள் ஆங்கிலப் பள்ளி, மெட்ரிகுலேஷன் பள்ளி என நான்கு பெரும் பிரிவுகளுடன் இயங்கி வருகிறது.

இதன் வளர்ச்சியில் பெரும் பங்கேற்று, இந்நிலைக்கு உயர்த்தியவர், அமரர் செல்வி எம். முத்தையா, பி.ஏ.,பி.டி., ஆவார். அவரோடு இணைந்து செயல்பட்ட ஆசிரியர் குழாமின் அயராத உழைப்பின் மூலம் ஆண்டுதோறும் மேனிலை, பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வுகளில் 200க்கும் மேற்பட்ட மாணவர் நூற்றுக்கு நூறு தேர்ச்சி பெறுகின்றனர். சஞ்சாயிகா சிறுசேமிப்பிலும், இந்நிறுவனம் முதலிடம் வகிக்கிறது. இங்குள்ள தொல்பொருள் ஆய்வுக்கூடம் பள்ளிகள் அளவில் தனித்தன்மை வாய்ந்தது. மாணவியரின் உடல், அறிவு, ஆன்ம வளர்ச்சிக்கென பற்பல முறைகள் பின்பற்றப்படுகின்றன. மாணவியர் பல்வகைப் போட்டிகளிலும் அறிவியல் கண்காட்சிகளிலும் மாநில, தேசிய அளவில் பங்கு பெற்றுப் பரிசுகள் பெறுகின்றனர். ஈரோட்டின் பொதுச் சொத்தாக நிறுவனரால் அர்ப்பணிக்கப்பட்ட இக்கல்வி நிலையத்தின் பொன்விழா அக்டோபர் 5ஆம் தேதி முதல் 7ஆம் தேதி வரை சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.





# பெரியார் மாவட்ட வளர்ச்சிப் பணிகள்

**திரு என்.எஸ். பழனியப்பன், இ.ஆ.ப.,**
**மாவட்ட ஆட்சித் தலைவர்**
**பெரியார் மாவட்டம்**

பெரியார் மாவட்டம் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் மற்றும் மாநில, மத்திய அரசின் சிறப்புத் திட்டங்களை வெற்றி கரமாகச் செயல்படுத்தும் மாவட் டங்களில் ஒன்றாக விளங்குகிறது.

### ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்

நடப்பு நிதியாண்டில் இம் மாவட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு ரூ.398.80 இலட்சம் ஆகும். இதில் நாளதுவரை ரூ.319.04 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. சாதனை விழுக்காடு 80.2 சதவிகிதமாகும். மொத்தம் 6,791 நபர்களுக்கு இது வரை மானியம் வழங்கப்பட்டுள்ளது.

தாழ்த்தப்பட்ட மலைச்சாதி இனத்தவர்கள் 2,920 நபர்களுக்குக் கடனுதவி வழங்க ரூ.142.96 இலட்சம் மானியம் வழங்கப் பட்டுள்ளது. 2,847 பெண்களுக்குக் கடனுதவி வழங்கும் வகையில் ரூ.119.57 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

### ஊரக மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம்

கிராமப்புறங்களில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள பெண் களை 5 முதல் 15 வரை உறுப் பினர்களாகக் கொண்ட குழுக் களாக அமைத்துப் பல்வேறு தொழில்களை மேற்கொள்ள மானியத்துடன் கூடிய வங்கிக் கடனுதவி வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் பெரியார் மாவட்டத்தில் நடப்பு ஆண்டு வரை 750 மகளிர் குழுக்கள் அமைக்கப் பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### மகுடம்

ஊரக மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத் தைச் செம்மைப்படுத்தும் வகையில் 200 வானொலி கேட்போர் மகளிர் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும், தமிழகத்திலேயே பெரியார் மாவட்டத்திலிருந்து வெளியிடப்படும் மகுடம் மகளிர் மலர் என்ற மாத இதழை ஊரக வளர்ச்சித்துறை அங்கீகரித்துள்ளது.

பண்ணாரி டெக்ஸ் என்ற பெயரில் ஷோரூம் ஒன்று 6.10.94 முதல் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரில் தொடங்கப் பட்டுச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

டோக்ரா திட்டத்தின் கீழ் தயாரிக்கப்படும் போர்வைகள், கோரா சில்க் புடவைகள், பவானி ஜமக்காளம், துண்டுகள் மற்றும் ஏனைய பொருட்கள் பண்ணாரி டெக்ஸ் வாயிலாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

### படித்த கிராமப்புற இளைஞர்களுக்குச் சுயவேலைவாய்ப்புத் திட்டம்

நடப்பு 1995-96-ஆம் ஆண்டுக்கு ரூ.23.52 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 663 இளைஞர்களுக்கு இத் திட்டத்தில், இம்மாவட்டத்தில் உள்ள 20 ஊராட்சி ஒன்றியங் களிலும் பயிற்சிகள் கொடுக்கப் பட்டு வருகின்றன.

1995-96-ஆம் ஆண்டில் பெரியார் மாவட்டத்திற்கு ரூ.1052.05 இலட்சம் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. அதில் நாளதுவரை ரூ.883.471 இலட்சம் செலவிடப்பட்டு 23.071 இலட்சம் மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

கீழ்க்கண்ட பணிகள் மொத்தம் ரூ.1469.607 இலட்சம் மதிப்பீட்டில் எடுத்துச் செய்யப்பட்டு நடைபெற்று வருகிறது.

2,438 தொகுப்பு வீடுகள், 100 ஜீவன்தாரா கிணறுகள், 74 பள்ளிக் கட்டடங்கள், 51.60 கி.மீட்டர் நீளமுள்ள ஆதிதிராவிடர் பயனடையும் மெட்டல் சாலைகள், 63.30 கி.மீட்டர் நீளமுள்ள இதர மெட்டல் சாலைகள், 74 கி.மீட்டர் நீளமுள்ள தார்ச் சாலைகள், 20 நியாயவிலைக் கடைகள், 30 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம், 8 நெசவாளர்கூட்டுறவுப் பணிமனை, ஒரு ஊராட்சி அலுவலகம் ஆகக் கூடுதலாக ரூ.1469.607 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பணிகள் எடுத்துச் செய்யப்பட்டு வருகின்றன.

4

### தீவிரச் சுகாதாரத் திட்டம்

கிராமப்புறங்களில் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள பயனாளிகள் தாங்களாகவே உள்ளூரில் கிடைக்கின்ற மூலப் பொருட்களைக் கொண்டு பயிற்சி பெற்ற கொத்தனார்கள் மூலம் தங்களது சொந்தச் செலவில் குறைந்த செலவிலான நவீனக் கழிப்பிடங்களை கட்டிக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு யுனிசெப் நிறுவனம் கழிப்பிடம் ஒன்றுக்கு ரூ.500 வீதம் உதவித் தொகையாக வழங்குகிறது. பயனாளியின் பங்குத் தொகை ரூ.500 ஆகும். அரசு ரூ.1,500 மானியமாக வழங்குகிறது.

1994-95-ஆம் ஆண்டு முடிய 48,625 தனியார் இல்லங்களில் கழிப்பிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இதற்கான அரசு மற்றும் யுனிசெப் சேர்ந்து நாளது வரை மொத்தம் ரூ.658 இலட்சம் செலவிட்டுள்ளது.

1992-96-ஆம் ஆண்டிற்குப் பெரியார் மாவட்டத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட 5,000 கழிப்பிடங்கள் 20 ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### பள்ளிகளில் சுகாதாரக் கழிவறை

பள்ளி மாணவ மாணவியர் களிடத்திலே சுகாதார விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு, இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

### வயிற்றுப் போக்கு நோய்த் தடுப்புத் திட்டம்

பெரியார் மாவட்டத்தில் யுனிசெப் நிதி உதவியுடன் வயிற்றுப்போக்கு நோய்த் தடுப்புத் திட்டம் 1992-93 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வயிற்றுப் போக்கு நோய் ஏற்படும் குழந்தைகளுக்கு ஓஆர்எஸ் கரைசல் இலவசமாகக் கொடுக்கப்பட்டு வருகிறது. இதுபற்றி கிராமப் புறங்களில் ஓஆர்எஸ் பொட்டலங்கள் தாய்மார்களுக்கு எளிதில் கிடைக்கக் கிடங்குகள் தொடங்கப்பட்டுள்ளன. கிராம அளவில் 127 கிராம செயற்படைக் குழு உறுப்பினர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் சிறப்பாகப் பெரியார் மாவட்டத்தில் செயல்படுத்தப்படுவதால் மாவட்டத்தில் குழந்தை இறப்பு விகிதம் மிகவும் குறைந்துள்ளது.

### கிராம அளவில் கைப்பம்புகள் இயக்குதல்

பராமரிக்க இலகுவான இந்தியா மார்க் 3 கைப்பம்பைக் கிராமப்புறங்களில் நிறுவுவதன் மூலம் அவைகளை விரைந்து பழுதுபார்த்துக் கொள்ள இயலும். இதைக் கருத்தில் கொண்டு தற்பொழுது உபயோகத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தை மகளிரே நிர்வகிக்கும் பொருட்டு, கிராமப் புறங்களில் மகளிரைக் கொண்ட வாட்சன் குழுக்கள் அமைக்கப்பட்டு, இத்திட்டத்தின் நோக்கம் பற்றி மகளிர்கள் தெரிந்துகொள்ள உதவும் வகையில் பல கட்டங்களில் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

### பரவலாக்கப்பட்ட மாவட்டத் திட்டம்

தமிழக அரசு பரவலாக்கப்பட்ட மாவட்டத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் (1995-96,) பெரியார் மாவட்டத்தில் 301, பணிகள் ரூ.199.628 இலட்சத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான உள்ளூர் வளர்ச்சித் திட்டம் (1995-96)

இத்திட்டத்தின் கீழ், மொத்தம் 180.00 இலட்சம் ரூபாய் வரப்பெற்றுள்ளது.

181.46 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் தார்ச்சாலைகள், வடிகால்கள், கால்வாய்கள் சீரமைப்பு, குளங்களை மேம்பாடு செய்தல் முதலிய 187 பணிகள் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.

### ஊராட்சி ஒன்றியப் பொதுநிதி வேலைகள்

பெரியார் மாவட்டத்திற்குட்பட்ட 20 ஊராட்சி ஒன்றியங்களில் ஒன்றியப் பொதுநிதியின் உபரி நிதியிலிருந்து கடந்த 1994-95-ஆம் ஆண்டில் 474 வேலைகள் ரூ.663.00 இலட்சம் மதிப்பீட்டில் எடுத்துச் செய்யப்பட்டுள்ளன.

நடப்பு ஆண்டில் ஊராட்சி ஒன்றிய உபரி பொது நிதியிலிருந்து வறட்சியால் பாதிக்கப்பட்ட 96 குடியிருப்புகளில் புதிதாக ஆழ்குழாய்க் கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன. 49 குடியிருப்புகளில் குடிநீர்க் குழாய்கள் விரிவாக்கப் பணிகள் செய்யப்பட்டுள்ளன. இப்பணிகளுக்காக மட்டும் 92 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. மேலும் 368 கிலோ மீட்டர் ஊராட்சி ஒன்றிய சாலைகள் ரூ.750.00 இலட்சம் செலவில் மேம்பாடு செய்யப்பட்டுள்ளன. இதன்மூலம் பெரியார் மாவட்டத்தில் அனைத்துக் கிராமங்களுக்கும் சாலை வசதி செய்யப்பட்டு போக்குவரத்துக்கு ஏற்ற தரமான சாலைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

மேலும், இம்மாவட்டத்தில் 741 சத்துணவுக் கூடங்கள் பழுது பார்க்கப்பட்டு, மின் வசதி செய்யப்பட்டுள்ளன. இப்பணிக்காக மட்டும் மொத்தம் 50.00 இலட்சம் ரூபாய் ஊராட்சி ஒன்றிய உபரி நிதியிலிருந்து செலவிடப்பட்டுள்ளது.

நிதி வசதி குறைவாயுள்ள ஒரு சில ஊராட்சி ஒன்றியங்களைத் தவிர மற்ற ஒன்றியங்களில் மொத்தம் 1,389 பணிகள் 910 இலட்சம் ரூபாய்க்கு மேற்கொள்ளப் பட்டுள்ளன.

**பேரூராட்சிகளில் வளர்ச்சிப் பணிகள்**

1995-96-ஆம் ஆண்டு பேரூராட்சிப் பொது நிதியிலிருந்து 19 பேரூராட்சிகளில் 615 எண்ணிக்கை வேலைகள் ரூ.146.876 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 15 பேரூராட்சிகளில் 445 தொகுப்பு வீடுகள் ரூ.98.165 மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

மாவட்ட பரவலாக்கப்பட்டத் திட்டத்தின் கீழ் 12 பேரூராட்சிகளில் 18 வேலைகள் ரூ.15.128 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் 16 பேரூராட்சிகளில் 37 பணிகள் ரூ.32.160 இலட்சம் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன.

அந்தியூர் பேரூராட்சியில் பகுதி 2 திட்டத்தின் கீழ் ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டணக் கழிப்பிடம் கட்டும் பணி அனுமதிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

பேரூராட்சி அடிப்படை வசதிகள் மேம்பாடு திட்டத்தின் கீழ் 845 பணிகள் ரூ.234.850 இலட்சம் மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

தூசிபடியாச் சாலைகள் அமைக்கும் திட்டத்தின் கீழ் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

விரிவாக்கப் பகுதிகளில் புதிய தெரு மின் விளக்குகள் அமைக்கும் திட்டத்தில் 14 பேரூராட்சிகளுக்கு 140 புதிய தெரு மின் விளக்குகள் அமைக்க ரூ.5.100 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

முத்தூர் பேரூராட்சியில் ஒருங்கிணைந்த நகர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.10.50 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம் கட்டும் பணி நடப்பு (1995-96-இல்) தொடங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

**வறட்சி நிவாரணத் திட்டம்**

411 புதிய ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கவும், 158 மாற்று ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்க ரூ.256.05 இலட்சமும், 237 குழாய் விரிவாக்கம் செய்ய ரூ.157.40 இலட்சமும், 194 காற்றமுழுத்த மின்மோட்டார் பொருத்துதல் ரூ.148.39 இலட்சமும், 3 தனி மின்பாதை அமைக்க ரூ.30.00 இலட்சம், ஆக, கூடுதலாக மொத்தம், 1,003 பணிகளுக்கு ரூ.591.84 இலட்சம் செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தொட்டதெல்லாம் துலங்கும், கண் பட்டதெல்லாம் விளங்கும் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் நல்லாட்சியில், எந்தத் திட்டத்தையும் இன்முகத்தோடு வரவேற்று, இடைவிடாது செயல் படுத்துவதால் எல்லா விருதுகளும் விரும்பி வரும் இடம் பெரியார் மாவட்டமாக விளங்குகிறது என்றே கூறலாம்.

## பரிசு குவிக்கும் பெரியார் மாவட்டம்

1994-95-ஆம் ஆண்டிற்கு பெரியார் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு என்.எஸ். பழனியப்பன், இ.ஆ.ப., அவர்கள், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களிடமிருந்து ஐந்து பரிசுகளைப் பெற்று பெரியார் மாவட்டத்தைத் தமிழகத்தில் ஓர் முன்னோடி மாவட்டமாகத் திகழச் செய்துள்ளார்.

**இருபது அம்சத் திட்டத்திற்கான முதல் பரிசு**

இத்திட்டம் மிகச் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு, 150 சதவிகித சாதனைப் படைத்துப் பெரியார் மாவட்டம் முன்னிலையில் உள்ளது.

**குடும்ப நலத்திட்டத்திற்கான முதல் பரிசு**

குறியீட்டைத் தாண்டி சாதனை படைக்கப்பட்டு பரிசு பெறப்பட்டுள்ளது.

**சிறுசேமிப்புக்கான பரிசு**

சிறுசேமிப்பு வசூலில் பெரியார் மாவட்டம் சாதனை படைத்து பரிசு பெற்றுள்ளது.

**டாக்டர் ஜெ.ஜெயலலிதா 15 அம்சக் குழந்தைகள் நலத் திட்டம்**

இத்திட்டத்தை முழுமையாக வெற்றியடையச் செய்தமைக்கு கேடயம் பெறப்பட்டுள்ளது.


**மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் இதர யுனிசெப் திட்டங்களுக்கானப் பரிசு**

யுனிசெப் வல்லுநர்களின் கேடயத்தினைப் பெற்றுள்ளது.

**மால்கம் ஆதிசேய்யா விருது**

அறிவொளி இயக்கத்தினை செயல்படுத்தியமைக்காக வழங்கப்பட்டுள்ளது.

# பெரியார் மாவட்டம்


கர்நாடகம்
தாளவாடி
அந்தியூர்
சத்தியமங்கலம்
அம்மாபேட்டை
உதகமண்டலம்
டி.என்.
பாளையம்
பவானி
பவானிசாகர்
கோபிசெட்டிப்
பாளையம்
சேலம்
நம்பியூர்
ஈரோடு
பெருந்துறை
ஊத்துக்குளி
மொடக்குறிச்சி
சென்னிமலை
கோயம்புத்தூர்
கொடுமுடி
காங்கேயம்
வெள்ளக்கோயில்
கரூர்-தீரன் சின்னமலை-
கவுண்டர் மாவட்டம்
குண்டடம்
மூலனூர்
தாராபுரம்
திண்டுக்கல்-அண்ணா

# பெரியார் மாவட்டம் - ஒரு கண்ணோட்டம்

பெரியார் மாவட்டமானது கோவை மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டு, ஈரோடு நகரைத் தலைநகரமாகக் கொண்டு 1979 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 17-ஆம் தேதி முதல் செயல்பட்டு வருகிறது.

இந்த மாவட்டம் தெற்கில் திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தையும், கிழக்கில் திருச்சி, சேலம் மாவட்டங்களையும், மேற்கில் கோவை மாவட்டம் மற்றும் கர்நாடக மாநிலத்தையும் எல்லையாகக் கொண்டுள்ளது.

இந்த மாவட்டத்தின் முதல் ஆட்சியராக திரு வே. லட்சுமிரதன், இ.ஆ.ப., அவர்கள் 17.9.1979 முதல் 28.5.89 வரை பணியாற்றியுள்ளார்.

மாவட்டத்தின் மொத்தப் பரப்பளவு 8,179 சதுர கி.மீ.

காடுகளின் பரப்பளவு 2,32,827 எக்டேர்.

சராசரி மழை அளவு 717 மி.மீட்டர்.

வருவாய்க் கோட்டங்கள் 3. ஈரோடு, தாராபுரம், கோபி செட்டிபாளையம்.

வருவாய் வட்டங்கள் 7. ஈரோடு, பெருந்துறை, தாராபுரம், காங்கேயம், கோபிசெட்டிபாளையம், சத்தியமங்கலம் மற்றும் பவானி.

வருவாய்க் கிராமங்கள் 510, ஊராட்சி ஒன்றியங்கள் 20, பேருராட்சிகள் 61, கிராம ஊராட்சிகள் 340.

நகராட்சிகள் 6. ஈரோடு, கோபி, பவானி, தாராபுரம், சத்தியமங்கலம், பவானிசாகர்.

மக்கள் தொகை 1991-ஆம் ஆண்டு கணக்குப்படி 23,22,851.

இதில் ஆண்கள் 11,84,841, பெண்கள் 11,38,010, ஆதி திராவிட வகுப்பினர் 3,98,123, ஆதிதிராவிட பழங்குடியினர் 19,194, கல்லூரிகள் 5, தொழில்நுட்பக் கல்லூரிகள் 5, மேல்நிலைப் பள்ளிகள் 53, சத்துணவு மையங்கள் 2872.

### ஈரோட்டுப் பெயர்க் காரணம்

ஈரோடு தொல் பழங்காலத்திலேயே மக்கள் சீரோடு வாழ்ந்த ஓர் இடமாக இருந்து வந்திருக்கிறது. சோழர்கள் காலத்தில் இப்பகுதி மூவேந்த சோழச் சதுர்மங்கலம் என்று அழைக்கப்பட்டு வந்துள்ளது. பெரும்பள்ளம், பிச்சைக்காரன் பள்ளம் என்ற இரண்டு ஓடைகளின் இடையே அமைந்துள்ள காரணத்தால், ஈரோடை என்ற பெயர் வந்து, நாளடைவில் ஈரோடு என்று ஆயிற்று.

- புலவர் செ. இராசு

### பெரியார் மாவட்டத்திலுள்ள நீர்த்தேக்கங்கள்

பவானிசாகர்

உப்பாறு

காலிங்கராயன் நீர்த்தேக்கம்

கொடிவேரி


பவானி கூடுதுறை

ஜோடர்பாளையம்

கொரட்டுப்பள்ளம்



**உலகில் மனிதன் மற்ற உயிரினங்களைவிடச் சிறந்தவனாகக் கருதப்படுவதற்குக் காரணம், அவன் எல்லையற்ற அறிவுச் சக்தி பெற்றிருப்பது தான். மற்ற நாட்டு மனிதன் இந்த அறிவைப் பயன்படுத்தி மிகமிக முன்னேறிக் கொண்டு வருகிறான். ஆனால், இந்த நாட்டு மனிதனோ, அந்த அறிவினைப் பயன்படுத்தாத காரணத்தினால் மிகமிகப் பின்னுக்குப் போய்க் கொண்டிருக்கிறான்.**



# பெரும்புகழ் பெற்ற பெரியார் மாவட்டத் திருக்கோயில்கள்

**பெரிய மாரியம்மன்**

ஈரோடு நகரத்திலிருந்து கோயம்புத்தூர் செல்லும் நெடுஞ்சாலைத் தொடக்கத்தில், வடக்கு நோக்கியபடி உருவாகியுள்ளது அருள்மிகு பெரிய மாரியம்மன் திருக்கோயில். இத்துடன் சின்ன மாரியம்மன், புது மாரியம்மன் ஆகிய கோயில்களும் இணைந்துள்ளன.

இங்கே இருபது நாட்கள் நடைபெறும் பங்குனித் திருவிழா பிரசித்தி பெற்றதாகும்.

**கொங்கலம்மன்**

ஈரோடு வட்டத்தில் உள்ள வற்றில் சந்தை அருகே உள்ளது அருள்மிகு கொங்கலம்மன் திருக்கோயில். பத்ரகாளி போல் விளங்குகிறது விக்கிரகம்.

17ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டது இக்கோயில் என்கிறது வரலாறு. கொங்குநாட்டு மக்களுக்கு அருள்பாலிக்கும் அம்மன் ஆதலால், கொங்கலம்மன் என்னும் பெயர் கொண்டு விளங்குவதாகக் கூறப்படுகின்றது.

**மகுடேசுவரர்**

ஈரோடு வட்டம் கொடுமுடியில் அருள்மிகு மகுடேசுவரர் அருள்மிகு வீர நாராயணப் பெருமாள் திருக்கோயில்கள் உள்ளன.

---

☆ **மாறுதலைக் கண்டு அஞ்சாமல், அறிவுடைமையோடும், ஆண்மையோடும் நின்று எதையும் நன்றாய் ஆராய்ச்சி செய்து, காலத்திற்கும் அவசியத்திற்கும் தக்க வண்ணம் தள்ளுவன தள்ளிக் கூட்டுவன கூட்டித் திருத்தம் செய்ய வேண்டியது பகுத்தறிவுடைய மனிதனின் இன்றியமையாத கடமையாகும்.**

**—தந்தை பெரியார்**

---

ஈரோட்டிலிருந்து 40 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள இக்கோயிலில் சிவன், விஷ்ணு, பிரம்மா ஆகிய மும்மூர்த்திகள் எழுந்தருளியுள்ளனர். மூர்த்தி, தலம், தீர்த்தம் காவிரி என்ற மூவகைச் சிறப்பும் கொண்ட இத்தலம் திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள், அருணகிரியார் ஆகியோரால் பாடல்பெற்ற திருத்தலம் ஆகும்.

**வரதராஜப் பெருமாள்**

அருள்மிகு வரதராஜப் பெருமாள் திருக்கோயில், கொடு முடிக்கு வடக்கே 2 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. இத்துடன் அருள்மிகு சோளீசுவரர், அருள்மிகு அங்காள பரமேசுவரி, அருள்மிகு பொன் காளியம்மன் திருக்கோயில்களும் சேர்ந்தே இருக்கின்றன.

காவிரிக்குக் கரையமைத்த கரிகாற் சோழனால் இக் கோயில்கள் எழுப்பப்பட்டதாகத் தெரிகிறது.

**சுப்பிரமணிய சுவாமி**

பெருந்துறை வட்டத்தில் உள்ள சென்னி மலையில் எழுந்தருளியுள்ள அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக் கோயில் புகழ்பெற்றதாகும். ஈரோட்டிலிருந்து தாராபுரம் நெடுஞ்சாலையில் 30வது கிலோமீட்டரில் கடல் மட்டத் திலிருந்து 1,749 அடி உயரே உள்ள கோயில் இது.

அருணகிரிநாதர் போன் றோரால் பாடப்பெற்ற இக் கோயிலுக்கு வந்து வழி படுவோருக்குப் பிள்ளைப்பேறு கிட்டும் என்று சொல்லப் படுகிறது. கீழேயிருந்து மேலே கோயிலுக்குப் போகத் தனியே ஒரு தார்ச்சாலை உண்டு; எனினும் 1,320 திருப்படிகளும் அமைக்கப்பட்டுள்ளன. தைப் பூசம், பங்குனி உத்திரம் ஆகிய நாட்களில் இங்கே சிறப்புற விழா நடத்தப்படுகிறது.

மலையடிவாரத்தில் திருமண மண்டபம் ஒன்றும் கட்டப் பட்டுள்ளது.

**சிவன்மலை**

காங்கேயம் திருப்பூர் நெடுஞ் சாலையில், ஐந்தாவது கிலோ மீட்டரில் இருக்கிறது சிவன் மலை. இது, பதினெண் சித்தர் களில் ஒருவரான சிவவாக்கியர் என்பாரால் நிறுவப்பட்ட திருத்தலம் எனப்படுகிறது. இங்குள்ள அருள்மிகு முருகப் பெருமான், அருணகிரியாரால் பாடப் பெற்றவன்.

இக்கோயில், கடல் மட்டத் திலிருந்து சுமார் 400 அடி உயரத்தில் இருக்கின்றது.

**பண்ணாரி மாரியம்மன்**


பவானியாற்றின் வடகரை யில், சத்தியமங்கலத்திலிருந்து மைசூர் செல்லும் சாலையில், 14 கிலோமீட்டர் தொலைவில் உள்ள காட்டுப் பகுதியில் அமைந்திருக்கின்றது, அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக் கோயில்.

பங்குனி மாதத்தில், இக் கோயில் திருவிழா சிறப்புற நடைபெறும். இவ்விழா வினுக்குத் தமிழ்நாட்டு மக்கள் மட்டுமல்ல ; கர்நாடக மக்களும் திரண்டு வந்து கொண்டாடி மகிழ்வதுண்டு.

**கொண்டத்துக் காளியம்மன்**

கோபிசெட்டிப்பாளையம் அந்தியூர் சாலையில் பாரியூரில் உள்ளது அருள்மிகு கொண்டத்துக் காளியம்மன் திருக்கோயில். இங்கே மார்கழி மாதத்தில் நடைபெறுகின்ற 'குண்டம் தேர்த் திருவிழா' மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படுவதாகும்.

அருள்மிகு பத்ரகாளியம்மன் கொண்டத்துக் காளியம்மனாகக் காட்சி தரும் இத்திருக்கோயிலில் திங்கள், செவ்வாய், வெள்ளி ஆகிய கிழமைகளில் சிறப்பு வழிபாடு நடைபெறுகிறது.



பவானி சங்கமேஸ்வரர் திருக்கோயில்

வீரராஜன் சித்தர் சமாதி இங்கே தான் இருக்கின்றது.

**சங்கமேசுவரர்**

ஈரோடு மேட்டூர் சாலையில், பவானி ஆறும் காவிரியாறும் கூடும் துறையில் அமைந்திருக் கிறது, அருள்மிகு சங்கமேசுவரர் திருக்கோயில். இலந்தை மரம் இக்கோயிலின் தலவிருட்ச மாகும். ஆறுகால பூஜை நடை பெறும் இக்கோயில் திருஞான சம்பந்தராலும், அருணகிரி நாதராலும் பாடல் பெற்றதாகும்.


பண்ணாரியம்மன் திருக்கோயிலின் ஒரு தோற்றம்

பவானி சங்கமேசுவரர் திருக் கோயில் படத்தோடு அஞ்சல் தலையொன்றும் மத்திய அரசால் வெளியிடப்பட்டுள்ளது. வேத நாயகி சமேதராக இங்கே சங்கமேசுவரர் காட்சி தருகிறார்.

**வீர குமாரசுவாமி**

கோவை திருச்சி நெடுஞ் சாலையில், தாராபுரம் வட்டம் வெள்ளக் கோயிலில் விளங்கு கின்றது அருள்மிகு வீரக் குமாரசுவாமி திருக்கோயில். இங்கே எழுந்தருளியுள்ள மூலவர் அருள்மிகு வீரக் குமரன், பதினெண் சித்தர்களால், பாங்குற உருவாக்கப்பட்டிருப் பதாகச் சொல்லுகிறார்கள். கருங்கடம்பு மரம், இக்கோயிலின் தலவிருட்சம் ஆகும்.

இக்கோயிலில், பெண்கள் சென்று வழிபடுவதில்லை. மகா சிவராத்திரி தொடங்கி 12 நாட்கள் இங்கே கோலா கலமாகத் திருவிழா நடத்தப் பெறுகிறது. தை, ஆடி, அமாவாசைகளும் விழா வெடுக்கும் காலங்களாகும். கருங்கடம்ப மரம் இக்கோயில் தலவிருட்சமாகும்.




**பத்ரகாளியம்மன்**

பெருந்துறை வட்டத்தில் உள்ள குன்னத்தூரில் இருக்கும் ஆதியூர் வெள்ளியம்பதி பசுஞ்சோலை நடுவே அருள்மிகு பத்திரகாளியம்மன் முரசன் சாமி கொண்டத்து பத்ரகாளி அம்மன் ஆகிய சந்நிதிகளோடு அமைந்துள்ளது இக்கோயில்.

இந்த ஆலயத்தில் 48 நாட்கள் தங்கி மனநோய், சித்தப்பிரமை பிடித்தவர்கள் வழிபாடு செய்தால் நலம்பெறலாம் என்று கூறப்படுகிறது. இக்கோயிலில் நடைபெறும் செவ்வாய் வழி பாடும், அமாவாசை வழிபாடும் சிறப்புடையதாகும். ஆவணி பௌர்ணமியில் இக்கோயில் திருவிழா மகத்தான அளவில் கொண்டாடப்படுகிறது. தொரட்டி மரம், இக்கோயிலின் தலவிருட்ச மாகும்.

—பி.எல்.ஆர்.

போன்: 22052

நல்வாழ்த்துக்கள்

# சரவணா தியேட்டர்

கபிலர் வீதி

கோபிசெட்டிபாளையம் 638 452

பெரியார் மாவட்டம்

எங்களது நல்வாழ்த்துக்கள்

# விஸ்வா நன்னீர் இறால் தீவனங்கள்

கிரம்பளர் - I

கிரம்பளர் - II

கிரம்பளர் - III

பெல்லட் - 25 mm

*தயாரிப்பாளர்கள்:*

# விஸ்வா அக்ரோ எண்டர்பிரைசஸ் லிமிடெட்

41, மில் ரோடு

கோபிசெட்டிபாளையம் 638 476

தொலைபேசி: எண்கள் 23235, 22593

22493, 23344

TNGST No.155 - 29610704

CST No. 600695

S.K.T. PACKAGING INDUSTRIALS

S.K.T. POLY BAGS

S.K.T. PAPER PRODUCT

KAMARAJ NAGAR,
BHAVANI - 638 302

Phone: 20708

*MFRS.:*

*HM, HD, PE, LLD, BAGS, ROLLS, SHEETS, PLAIN WITH 4 & 8 COLOUR PRINTING, SHOPPING BAGS, PAPER BAGS, ETC.,*

M/s. NALLAM TEXTILES (P) LTD.,

Vellamadai, Olapalayam (P.O),
Kangayam
PERIYAR DISTRICT

SIVASAKTHI FOOD PRODUCTS

125-A, Coimbatore Road,
Vellakovil
PERIYAR DISTRICT

CHAMUNDI Food Products

125-B, Coimbatore Road,
Vellakovil
PERIYAR DISTRICT



## கிராம மகளிருக்கு வேளாண் தொழில் நுட்பம் பெரியார் மாவட்டத்தில் வெற்றிச் செயலாக்கம்!

**வி**வசாயத்தில் ஈடுபடுகின்ற மகளிருக்கு நவீன வேளாண் தொழில் நுட்பங்கள் கற்றுக் கொடுக்கப்பட்டு வருகின்றது.

'ஆணுக்குப் பெண் இங்கே இளைப்பில்லை' என்பது மட்டு மில்லை; அவர்கள் 'ஆண்களை விட ஒருபடி மேலே' என்கின்ற வகையில் அறிவும் தெளிவும் பெற்று விளங்கிட வேண்டும் என்ற தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் பெருநோக்கை மெய்யாக்குகின்ற அரிய திட்டமான பண்ணை மகளிர் பயிற்சித் திட்டம், பெரியார் மாவட்டத்தில் மிகவும் சிறப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

பெரியார் மாவட்டத்தில், ஈரோடு, கோபி, தாராபுரம் ஆகிய மூன்று கோட்டங்களில் பண்ணை மகளிர் பயிற்சி தற்போது அளிக்கப்பட்டு வருகின்றது. ஒவ்வொரு கோட்டத்திலும் மூன்று வேளாண்மை அலுவலர்கள் கொண்ட குழு பயிற்சி அளிக்கின்றது. பயிற்சி பெறுபவர்கள் அனைவரும் பெண்கள்; அதுவும் கிராமப்புறப் பெண்கள் என்பதால், எவ்விதத் தயக்கமும் இன்றி, அவர்கள் பயிற்சிக்கு வரவேண்டும் என்று இத்திட்டப் பணிக்கு முழுக்க முழுக்கப் பெண் வேளாண்மை அலுவலர்களே நியமிக்கப் பட்டிருக்கிறார்கள்.

ஒரு குழுவுக்கு 25 பேர் என்ற கணக்கில் 25 வயது முதல் 45 வயதுடைய திருமணமான பெண்கள் சேர்க்கப்பட்டு, ஆண்டுக்கு ஒரு கோட்டத்திற்கு 9 குழுக்களுக்குப் பயிற்சி அளிக்கப் படுகிறது. ஆக, மூன்று கோட்டங் களுக்கும் சேர்த்து மொத்தம் 27 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட உள்ளன. பெரியார் மாவட்டத் தில், இந்த ஆண்டு பயிற்சி பெறும் மகளிரின் எண்ணிக்கை 675 ஆகும்.

பண்ணை மகளிர் பயிற்சித் திட்டத்திற்குக் கிராமப்புறப் பெண்கள் மத்தியில் ஆதரவு எப்படியிருக்கிறது என்ற கேள்விக்கு வெகு உற்சாகத்

துடன் பதில் அளித்தார், ஈரோடு கோட்டத்தில் பண்ணை மகளிர் பயிற்சி அளிக்கும் வேளாண்மை அலுவலரான திருமதி க. தமிழ்ச்செல்வி. பயிற்சிக்கு வருவதில் மகளிர் காட்டுகின்ற ஆர்வத்தையும், பயிற்சி பெறுவதில் அவர்கள் காட்டுகின்ற ஊக்கத்தையும் நமக்குக் காட்டுகின்ற கண்ணாடியாக வேளாண்மை அலுவலரின் உற்சாகப் பெருக்கு இருந்தது.

அது உண்மைதான் என்பதைப் பண்ணை மகளிர் பயிற்சி வகுப்பு நடத்தப்பட்ட 'சித்தோடு' என்னும் ஊருக்குச் சென்றபோது கண்கூடாகக் கண்டோம். வேளாண்மை அலுவலரைக் கண்டதும் 'டான்வா, டான்வா' என்று குரல் கொடுத்தபடி, மழலைச் செல்வங்கள் வீட்டின் உள்ளே சென்று தங்கள் அன்னைமார்களை அழைத்து வந்ததும், முகமகிழ்வுடன் தங்களது பயிற்சியைப் பற்றி அவர்கள் உரையாடல் செய்ததும் அவர்கள் எவ்வளவு ஒரு மன விருப்பத்துடன் இப்பயிற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதைத் தெள்ளெனக் காட்டியது பண்ணை மகளிர் பயிற்சித் திட்டம் என்பதன் ஆங்கில முதலெழுத்துக் குறுக்கமே TANWA

**பண்ணை மகளிர் விவசாயத் தொழில் நுட்பங்களை எவ்வாறு அறிந்து கொள்கின்றனர்?**

திட்டத்தைச் செயல்படுத்தும் வேளாண்மை அலுவலர்கள் பயிற்சி பெற்ற விவசாயப் பட்டதாரிகள். அதிலும் எண்ணியதைத் திண்ணமென முடிக்கும் பெண்மணிகள். அவர்கள் கிராமப்புறங்களுக்குச் சென்று, அங்கேயே பயிற்சிக்குழு உருவாக்கி, அவசரமின்றி, பொறுமையோடு, நேரடியாக அந்தப் பகுதிக்கு ஏற்ற விவசாயத் தொழில் நுட்பங்களைப் பாடமாகக் கற்பிப்ப' துடன், செயல் விளக்கமாகப் பயிற்சி பெறுபவர்களைச் செய்து காட்டச் சொல்லி, பயிற்சி அளிக்கின்றனர்.

**பயிற்சியில் நடத்தப்படும் பாடங்கள் என்னென்ன?**

☆ உரச் செலவுகளைக் குறைத்திட மண் வளத்தினை அறியும் வகையில், மண் பரிசோதனை செய்திட, மண் மாதிரி எடுத்தல்.

☆ பதரான பொக்கு விதைகளை நீக்கவும், நோயற்ற தரமான நாற்றுகள் பெற்றிடவும், முளைப்புத் திறனை அதிகரித்து கூடுதல் மகசூல் பெறவும் நெல் நல் விதைத் தேர்வு செய்தல்.

☆ விதை மூலம் பரவும் நோய்களைக் கட்டுப்படுத்தவும், வளமான நாற்றுக்களைப் பெறவும் பூஞ்சான விதை நேர்த்தி செய்தல்.

☆ காற்றிலுள்ள தழைச்சத்தைப் பயிருக்குக் கிடைக்கச் செய்யவும், அதிக வேர் வளர்ச்சி பெறவும், வறட்சியைத் தாங்கி அதிக மகசூல் தரவும் உயிர் உரமிடுதல்.



★ துத்தநாகச் சத்துப் பற்றாக் குறையைப் போக்கி, பயிர் கரைவதையும், வெளுப்பாக இருப்பதையும் தடுத்திட நெல் வயலுக்கு ஜிங் சல்பேட் இடுதல்.

★ கூடுதல் மகசூல் பெற பயிர் எண்ணிக்கையைப் பரா மரித்தல் .

★ களைகளை ஆரம்ப நிலை யிலேயே கட்டுப்படுத்தவும், வயலுக்கு இடப்படும் நீரையும் பிற உரங்களையும் பயிரே முழுமையாகப் பெற்றிடவும் களைக் கொல்லி இடுதல்.

★ மேலுரம் இடும்போது அதிலிருக்கும் தழைச்சத்து ஆவியாகியோ, தண்ணீரில் கரைந்தோ போகாமல் தடுக்க யூரியாவுடன் வேப்பம் புண்ணாக்கு கலந்து இடுதல்.

★ வாளிப்பான நிலக்கடலை பெற்றிட, பயிருக்குச் சுண்ணாம்புச் சத்து கிடைத்திட ஜிப்சம் இடுதல்.

★ மஞ்சள் விதைக் கிழங்குகளைப் பூஞ்சான நேர்த்தி செய்தல்.

★ பருத்தி அமிலவிதை நேர்த்தி செய்தல்.

★ தென்னைக்கு உரமிடல்.

ஆகிய பாடங்கள் 5 நாட்கள் தொடர்ந்து நடைபெறும் கிராமப்புறப் பயிற்சியில் நடத்தப் படுகின்றன.

அடுத்து 2 நாட்கள் நடக்கும் சிறப்புப் பயிற்சியில் மாடு களுக்குத் தேவையான அடர் மற்றும் கலப்புத் தீவனம் தயாரித்தல், பசுந்தீவனம் தயாரித்தல், சிப்பிக்காளான் வளர்த்தல், கூழ்முட்டைகளைக் கண்டுபிடித்தல், கோழித் தீவனமாக கரையான் உற்பத்தி செய்தல் ஆகிய பாடங்கள் செயல் விளக்கத்துடன் சொல்லித் தரப்படுகின்றன.

பின் பண்ணை மகளிர் பயிற்சி மாநாடு நடத்தப்பட்டு எஞ்சிய சந்தேகங்கள் பொது வாகத் தீர்த்து வைக்கப்படு கின்றன.

**பயிற்சி வகுப்பில் செயல் விளக்கம் பெறுவதில் ஏதும் சிரமம் உண்டா?**

சிறிதும் இல்லை. மூன்று பெண் வேளாண்மை அலு வலர்கள் இருப்பதால், பயிற்சி பெறும் 25 பெண்களும் மூன்று சிறு குழுக்களாகப் பிரித்து செயல் விளக்கம் அளிக்கப் படுவதுடன் பயிற்சியாளர்கள், ஒவ்வொரு பாடத்தையும் செயல் முறைப் பயிற்சி செய்து காட்டச் சொல்லி சந்தேகங்கள் தீர்த்து வைக்கப்படுகின்றன.

இவ்வளவு ஆர்வத்தோடும், ஊக்கத்தோடும் பயிற்சி வகுப்பில் பங்கு கொள்ளும் பெண்கள், தாங்கள் பெற்ற பயிற்சியைக் கற்ற பாடத்தைத் தங்களது வயல்களில் எந்த அளவு பயன்படுத்துகிறார்கள் எனச் சில பெண்களிடம் வினவினோம்.

சித்தோடு பகுதி குமிளம் பரப்புக் கிராமம் உருமங் காட்டைச் சார்ந்த திருமதி சம்பூர்ணம், தான் பெற்ற பயிற்சி பற்றிக் கூறியதாவது:

"வேளாண்மை அலுவலர் சொல்லித் தந்த பாடங்கள் எல்லாவற்றையும் ரொம்ப மகிழ்ச்சியாகக் கற்றுக் கொண் டேன். குறைந்த செலவில் நிறைந்த மகசூல் பெற, பல விதமான தொழில் நுட்பங்கள் எனக்குத் தெரியும் என்ற நினைப்பே எனக்கு ஒரு தன்னம்பிக்கையைக் கொடுக் கிறது. எனக்கு 2 3/4 ஏக்கர் நிலம் இருக்கிறது. நான் படித்த பத்து பாடங்களில், நெற்பயிர் சாகு படிக்குரிய பயிற்சிகளைப் பயன் படுத்தி நெல் நடவு செய்திருக் கிறேன். பக்கத்துக் காட்டை விட என்னுடைய பயிர் நன்றாக வந்திருக்கிறது என்று பார்க் கிறவர்கள் கூட சொல்கிறார்கள்" என்று கூறினார் திருமதி சம்பூரணம். இவர் கூறிய அனைத்தையும் முகத்தில் மகிழ்ச்சி பொங்க ஒப்புக் கொண்டார், இவரது கணவர் திரு புஷ்பணன்.



**சம்பூர்ணம்**

கொட்டையாம்பாளையம் கிராமத்தைச் சார்ந்த குப்பு

லட்சுமி, பயிற்சி வகுப்பில் சொல்லித் தந்த முறைகளின்படி, தன் வீட்டுத் தோட்டத்திலுள்ள அனைத்துத் தென்னை மரங் களுக்கும் தானே நேரடியாக உரம் வைத்தேன் என்று சாதனை பொங்கிப் பரவும் புன்னகை முகத்துடன் தெரிவித்துவிட்டு, **10, 15** ஆண்டுளாகக் காய்ப்பே காணாத அந்த மரங்கள் நல்ல குரும்பைப் பிடித்து, காய்ப்பு காட்டத் தொடங்கியிருக்கின்றன, என்று பெருமையுடன் தெரிவித்தார்.



குடும்பத்துடன் கௌசல்யா



குப்புலட்சுமி

அதே ஊரைச் சார்ந்த கௌசல்யா என்ற பெண்மணிக்கோ பெருவருத்தம். தான் கற்ற பாடங்களையெல்லாம் பயன் படுத்தி உற்பத்தியைப் பெருக்கி சாதனை படைத்துக்காட்ட விரும்பியிருந்தார் கௌசல்யா. ஆனால், தனது கணவர் திரு அண்ணாமலை அவர்களின் உடல்நலக் குறைவால், நிலத்தைக் குத்தகைச் சாகுபடிக்குக் கொடுக்கும்படியான சூழ்நிலை. ஆனால், எப்படியும் அடுத்த பருவத்தில், தான் கற்ற பாடங் களுடன் நெல் நடவு செய்து பெருமை படைப்பேன் என்று உறுதிபடக் கூறினார் திருமதி கௌசல்யா.

நிலத்தைக் குத்தகை சாகு படிக்கு விட்டாலும், தான் சிறப்புப் பயிற்சியில் கற்ற மற்ற பாடங்களைக் கௌசல்யா மறந்துவிடவில்லை. தான் பெற்ற பயிற்சியில் உணவுக் காளான் வளர்ப்பதோடு, கால்நடை களுக்குத் தேவையான பசுந் தீவனங்களைத் தயாரித்துப் பயன்பெற்று வருகின்றார்.

கிராமப்புற மகளிரிடையே புதைந்து கிடக்கும் திறமை களையும், சோர்வறியா அவர் களது செயல்திறனையும், ஆளுகைத் தன்மையையும் வெளிக் கொணர்வதுடன், நாட்டின் வேளாண்மை உற்பத்தி யைப் பெருக்கி, மகளிரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத் தும் திட்டமான பண்ணை மகளிர் பயிற்சித் திட்டம், பெரியார் மாவட்டத்தில் ஒரு மாபெரும் வெற்றித் திட்டமாக விளங்கிக் கொண்டிருக்கிறது.

இத்தகையதொரு நல்ல திட்டத்தை வகுத்துத் தந்து, தங்களது வளமான வாழ்வுக்குச் செயலாற்றி வரும் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை மனமுவந்து நன்றியுடன், பெரியார்மாவட்டக் கிராமப்புறப் பெண்கள் மகிழ்ந்து கொண்டாடுகின்றனர்.

இவ்வெற்றியின் பயனாய், பெரியார் மாவட்டத்தில், கி.பி.2001-ஆம் ஆண்டு இறுதியில், பல்லாயிரக்கணக்கான பெண்கள் பண்ணை மகளிர் பயிற்சி பெற்று, விவசாயத் தொழில் நுட்பங்களில் கைதேர்ந்து, விவசாய உற்பத்தியிலும், அதன் ஆக்கபூர்வமான பணிகளில் பெண்கள் பங்கேற்றுச் செயல் படும் சீரிய பாங்கிலும், தமிழகத்திலேயே முதல் மாவட்ட மாக நிற்கும் என்பதில் ஐயமில்லை.

நல்வாழ்த்துக்கள்

SKM வழங்கும் பண்ணை உபகரணங்கள்!

குஞ்சுப் பருவ, வளர் பருவ,

முட்டைப் பருவக் கோழிக் கூண்டுகள்

விபரங்களுக்கு:

SKM பார்ம் எஞ்சினீரிங் பிரைவேட் லிமிடெட்.,

சாவடிப்பாளையம் புதூர் ரோடு, நஞ்சை ஊத்துக்குளி (Post)

மொடக்குறிச்சி 638 104

போன்: 0424 - 500211- 13, 500451 &500453

நல்வாழ்த்துக்கள்

'தமிழரசு' இதழுக்கு

எங்களது இதயங்கனிந்த நல்வாழ்த்துக்கள்

SREE VALLI THEATRE

NANJAPPA STREET

GOBICHETTIPALAYAM 638 452

PERIYAR DISTRICT

Phone: 22668

**With Best Compliments From**

# Centre For Entrepreneur Development

**Head Office:**
CED - SIPPO CAMPUS
No.4, T.B. Road,
Madurai 625 010
Phone: 0452 - 602388
Telex: 0445 - 310 SSP IN
Fax: 091 - 452 - 602455

**Branch Office:**
143 - C, Brough Road,
(Near sivaranjani Hotel)
Erode 638 001
Phone: 76172, 72896 PP

---

நல்வாழ்த்துக்கள்

**பெரியார் மாவட்ட ஆதிதிராவிடர் ஆட்டோ ஓட்டுநர் தொழிற் கூட்டுறவுச் சங்கம் லிட்.,**

**இண்ட். எண் 1889**

460, நல்லப்பன் பில்டிங் கீழ்த்தளம்
ஈ.வி.என். சாலை, ஈரோடு 638 009

இந்து ஆதிதிராவிடர் வகுப்பைச் சார்ந்த ஆட்டோ ஓட்டுநர் உரிமம் உள்ள சொந்தமாக ஆட்டோ இல்லாத வறுமைக் கோட்டில் உள்ளவர்களுக்கு, இச்சங்கத்தின் மூலம் கடன் தவணை முறையில் ஆட்டோ ரிக்ஷா வழங்கப்படும். விவரங்களுக்குச் சங்கத்தை அணுகவும்.

**பெரியார் மாவட்ட டாக்டர் புரட்சித்தலைவி ஆட்டோ ஓட்டுநர் தொழிற் கூட்டுறவுச் சங்கம் லிட்.,**

**இண்ட். எண். 1886**

202, மேட்டூர் ரோடு, ஈரோடு 638 099

சொந்தமாக ஆட்டோ இல்லாமல் உள்ள பிற்பட்டோர், மிகவும் பிற்பட்டோர் ஆட்டோ ஓட்டுநர் உரிமம் உள்ள வறுமைக்கோட்டில் வாழ்பவர்களுக்கு இச்சங்கம் மூலம் குறைந்த வட்டி விகிதத்தில் கடன் தவணை முறையில் ஆட்டோ ரிக்ஷா வழங்கப்படும். பயன் பெற விரும்புவோர் சங்கத்தை அணுகவும்.

இங்ஙனம்
தலைவர்

---

நல்வாழ்த்துக்கள்

**தமிழ்நாடு இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி I.T.I.**

151, பவானி மெயின் ரோடு,
அசோகபுரம் (பெட்ரோல் பங்க்)
ஈரோடு 638 004

மத்திய அரசு அங்கீகார எண் 11907/AFF 13/93
தமிழக அரசு அங்கீகார எண் 16295292

மத்திய, மாநில அரசு அங்கீகாரம் பெற்ற
NCVT - ITI பயிற்சிகள்

| தொழிற் பிரிவுகள் | பயிற்சி காலம் | கல்வித் தகுதி |
|---|---|---|
| 1. மோட்டார் வாகன NCVT மெக்கானிக் MMV | 2 வருடங்கள் | SSLC பாஸ்/பெயில் |
| 2. எலக்ட்ரீசியன் NCVT | 2 வருடங்கள் | SSLC பாஸ் |
| 3. DPCS கம்ப்யூட்டர் NCVT | 1 வருடம் | HSC பாஸ் |
| 4. ஆடியோ மெக்கானிக் SCVT | 1 வருடம் | SSLC பாஸ் |

☆ சிறந்த ஹாஸ்டல் வசதி உண்டு (விடுதி இலவசம்)

☆ NCVT-ITI பயிற்சிகளை வெற்றிகரமாக முடிக்கும் மாணவ, மாணவியர்களுக்கு அரசு ITI இல் வழங்கப்படும் அரசு சான்றிதழ்களே வழங்கப்படும்.

☆ அரசு ஸ்காலர்ஷிப், ஸ்டைபண்டு, பஸ் பாஸ் உண்டு.

---

நல்வாழ்த்துக்கள்

# ஈரோடு துணி பதனிடுவோர் தொழிற் கூட்டுறவுச் சங்கம் லிட்.,

**இண்ட் எண் 1737**

6, டாக்டர் ராதாகிருஷ்ணன் தெரு,

டீச்சர்ஸ் காலனி, ஈரோடு 638 011.

எங்கள் சங்கத்தில் தரமான கைத்தறி மற்றும் விசைத்தறி ஜவுளி ரகங்கள் கிடைக்கும். தேவைக்கு அணுகவும்.

இங்ஙனம்
தனி அலுவலர்

# பெரியார் மாவட்டச் சுற்றுலாத் தலங்கள்

**● நான்காம் அட்டை சொல்லும் செய்தி:**

**த**ந்தை பெரியாரின் புகழ் பேசும் பெரியார் மாவட்டம், வளமையான நிலப்பகுதியும், வற்றாத நீர் வளமும், பச்சைப் பசேல் என்ற வனவளமும், எழுந்தும், விரிந்தும், பரந்தும் கிடக்கும் மலை வளமும், ஒருங்கே அமையப்பெற்ற மாவட்டம். இவ்வளங்களுக்கு மேலும் மெருகூட்டும் வகையில் இப்பகுதியைச் சார்ந்த மக்கள் மென்மையானவர்கள். நல்ல உழைப்பாளிகள். பழகுவதற்கு இனிமையானவர்கள் என்று எல்லோராலும் கருதப்படுபவர்கள். வரலாற்றுக் காலம் தொட்டே சிறப்புப் பெற்ற திருக்கோயில்களும், பழமையான கட்டடங்களும், இன்றும் நிலைத்து நின்று புகழ் பரப்பிக் கொண்டிருக்கின்றன. பெரியார் மாவட்டம் பல துறைகளிலும், வியக்கத் தக்க சாதனைகளை விளைவிப்பது போலச் சுற்றுலா வளர்ச்சியிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளது.

பெரியார் மாவட்டத்தில் பவானி சாகர் அணை, கொடிவேரி அணை மற்றும் பவானி கூடுதுறை போன்றவை சிறப்பாகக் கருதப்படும் சுற்றுலாத்தலங்களாகும்.


இன்றைய தமிழ்த்திரைப் படங்களில் கொடிகட்டிப் பறக்கும், வெளிப்புறப் படக் காட்சிகள் பலவும், கோபிசெட்டி பாளையத்தின் வளமான பகுதிகளே என்றால் திரைப்பட ஆர்வலர்கள் மகிழ்வோடு ஏற்றுக் கொள்வார்கள். அந்த அளவுக்குத் தற்போது வெளிவருகின்ற பெரும்பான்மையான திரைப் படங்களில் கோபிசெட்டிப் பாளையத்தையும் அதன் சுற்றுப் பகுதிகளையும், தங்கள் புகைப் படக் கருவிக்குள் அடக்கிக் கொண்டதால், பல புகழ்பெற்ற திரைப்படங்கள் வெற்றியடைந்திருக்கின்றன என்றால் அக்கூற்றும் மிகையல்ல.

**பவானிசாகர்**

காவிரி ஆற்றின் துணையாறான பவானி ஆற்றில் கட்டப்பட்டுள்ள கீழ்பவானி அணை சிறப்புப் பெற்ற சுற்றுலாத் தலமாக விளங்கி வருகிறது. இவ்வணையையொட்டி அழகிய பூங்கா ஒன்று அமைக்கப்பட்டுச் சுற்றுலாப் பயணிகள் பொழுது போக்கும் வண்ணம் பசுமையாகக் காட்சியளிக்கிறது. பவானிசாகர் அணையைச் சுற்றிலும் உள்ள பசுமையான காட்சிகளும், இயற்கை அன்னை எழில்கொண்டு விளங்கும் மலைப்பகுதிகளும், சுற்றுலாப் பயணிகளை முழுமையாகக்கவரும். இதுதவிர கொடிவேரி அணை, காலிங்கராயன் அணை, உப்பாறு அணை, வறட்டுப்பள்ளம் அணை போன்றவைகளும், சுற்றுலாப் பயணிகளை வெகுவாகத்தன்னகத்தே ஈர்த்துக் கொள்ளும் தன்மை பெற்றன.

**கொடிவேரி அணை**

கோபிசெட்டிப்பாளையத்தில் சத்தியமங்கலம் சாலையில் அமைந்துள்ள அழகிய கொடிவேரி அணை திரைப்படத் தொழில் நுட்பக்காரர்களைத் தவிர சாதாரணப் பொதுமக்களையும், கவருகின்ற இயற்கை அழகு பெற்றது. நாள்தோறும் நூற்றுக்



பாரியூர் அம்மன் கோயில்



பவானிசாகர் அணை

கணக்கான சுற்றுலாப் பயணிகள் இப்பகுதிக்கு வந்து தங்களுடைய பொழுதை இனிமையாகக் கழிக்கின்றனர். குறிப்பாகத் திரைப் படத் துறையினர் எப்போதுமே இவ்விடத்தைச் சுற்றி வருகின்ற அளவுக்கு, இப்பகுதியின் சிறப்பு எங்கும் பரவியுள்ளது.

**பவானி கூடுதுறை**

வடநாட்டிலே உள்ள பிரயாகையைப் போல, தென்னாட்டில், பெரியார் மாவட்டத்தில் பவானி கூடுதுறை சிறப்புப் பெற்றுள்ளது. இந்தப் பவானி கூடுதுறையில் காவிரி நதியும்,



பாரியூர் மகாமுனீஸ்வரர்

பவானி நதியும், அமுத நதியும் ஒன்றுகூடி முக்கூடல் என்ற சிறப்புப் பெற்றுள்ளது. மேல்கரையில் சங்கமேஸ்வரர் திருக்கோயில் அமைந்துள்ளது. இவ்வாறு சிறப்புப் பெற்ற பவானி கூடுதுறை ஈரோட்டிலிருந்து 12 கி.மீ. அளவில் அமைந்துள்ளது. ஈரோட்டிற்கு அண்மையில் அமைந்துள்ளதாலும், வரலாற்றுச் சிறப்புப் பெற்றதாலும், எப்போதும் ஏற்ற தட்பவெப்ப நிலை உள்ளதாலும் இக் கூடுதுறையில் சுற்றுலாப் பயணிகள் நாள்தோறும் கூடுகிறார்கள்.

**பாரியூர்**

கோபி வட்டத்துக்குள் சிறப்புப் பெற்ற பாரியூர் அம்மன் திருக்கோயில் சுற்றுலாத் தலங்களில் ஒன்றாகும். குறிப்பாகத் தேர்த்திருவிழா, சிவராத்திரி திருவிழா, கார்த்திகை தீபத்திருவிழா போன்ற முக்கிய நாட்களில் பொதுமக்கள் ஆயிரக் கணக்கில் கூடி மகிழக்கூடிய இடமாக பாரியூர் விளங்குகிறது. இக்கோயிலை ஒட்டியுள்ள, அமரபணீஸ்வரர் திருக்கோயில் மற்றும் ஆதிநாராயணப் பெருமாள் திருக்கோயில் இரண்டும் தமிழ்நாட்டில் வேறெங்கும் இல்லாத வகையில் முழுவதும் வெள்ளைப் பளிங்குக் கற்களால் கலைநயம் மிக்க வேலைப்பாடுகளுடன் சுமார் 75 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டு, ஈரோடு மாவட்டத்திற்கு ஒரு சிறப்பைத் தருகின்ற திருக்கோயிலாக விளங்கி வருகிறது.



ஈரோடு வ.உ.சி. பூங்கா

ஈரோடு நகரில் அமைந்துள்ள வ.உ.சி. பூங்கா அருகில் ஒரு சுற்றுலா வளாகம் ரூபாய் நாற்பது இலட்சம் செலவில் அமைப்பதற்கான திட்டம் ஒன்று, செயலாக்கப்பட உள்ளது. இதில், உணவு விடுதி, தங்கும் விடுதி, போன்ற வசதிகள் கொண்டு அமைய உள்ளது.

பெரியார் மாவட்டம் முழுவதுமே எல்லோரையும்



கவரும் வணணம், இயற்கை அன்னை சிரித்து மகிழும், இனிமையான மாவட்டம். எங்கு நோக்கினும் பசுமையும் இனிமையும், கலந்து காண்போரைத் தன்னிடத்தே தக்க வைத்துக் கொள்ளும் சிறப்புப் பெற்ற பல பகுதிகளைக் கொண்ட மாவட்டம். பழமைக்குப் பழமையும், புதுமைக்குப் புதுமையும் கொண்டு விளங்கும் மாவட்டம் பெரியார் மாவட்டம்.

# St. JOSEPH

## INSTITUTE OF COMPUTER INFORMATION TECHNOLOGY

## INDUSTRIAL TRAINING INSTITUTE

மத்திய அரசு நிரந்தர அங்கீகார எண் DGET-6/19/1/90-TC, CDI/49292

தமிழக அரசு அங்கீகார எண் 68799, 75640

### மத்திய, தமிழக அரசு அங்கீகாரம் பெற்ற

**N.C.V.T. - I.T.I. பயிற்சிகள்**

1. மோட்டார் மெக்கானிக் (Mechanic Motor Vehicle) - N.C.V.T. - 2 வருடம்
2. எலக்ட்ரிஷியன் (Electrician) N.C.V.T. - 2 வருடம்
3. ஒயர்மேன் (Wireman) - N.C.V.T. 2 வருடம்
4. பிட்டர் (Fitter )- N.C.V.T. - 2 வருடம்
5. டீசல் மெக்கானிக் (Diesel Mechanic) - 1 வருடம்
6. டேட்டா பிரிப்ரேஷன் & கம்ப்யூட்டர் சாப்ட்வேர்-N.C.V.T. - 1 வருடம் (Data Preparation & Computer Software)
7. மெக்கானிக் ஆடியோ (Mechanic Audio)- STATE 1 வருடம்

தகுதிகள்: 10ம் வகுப்பு, + 2 தேறிய மாணவ, மாணவிகள் சேரலாம்.

குறிப்பு: மாணவ, மாணவிகளுக்குத் தனித்தனியே ஹாஸ்டல் வசதி உண்டு

விண்ணப்பப் பாரங்கள் வேண்டுவோர் ரூ.25 செலுத்தி நேரடியாகவோ அல்லது தபால் மூலம் M.O. அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

**Head Office:** S.F. 49, கீழ்திண்டல், திண்டல் P. O.

பெருந்துறை மெயின் ரோடு, ஈரோடு-9

ஈரோடு பஸ் நிலையத்திலிருந்து புறப்படும் 12, 12-A, 12-B, 12-C, 9, 31, B-1, ஆகிய பஸ்ஸில் செங்கோடம்பாளையம் ஸ்டாப்பில் இறங்கவும்



With Best Compliments From.:

**J.K.K. MUNIRAJAH, M.Tech (Bolten)**
**Managing Trustee**
**Annai JKK Sampoorani Ammal Charitable Trust**
**Komarapalayam.**

### I. INSTITUTION RUN BY THE TRUST

1. Annai JKK Sampoorani Ammal Polytechnic, T.N. Palayam

**Branches Offered:**
1. Civil Engineering
2. Mechanical Engineering
3. Electrical & Electronics Engineering
4. Electronics & Communication Engineering
5. Chemical Technology
6. Textile Technology

2. JKK Munirajah ITI, T.N. Palayam

**Branches Offered:**
1. Mechanic (Motor Vehicle)
2. Electrician
3. Chemical Plant (Mechanic Maintenance)

3. Annai JKK Sampoorani Ammal College of Pharmacy, Komarapalayam - (D. Pharm & B. Pharm)

4. JKK Sampoorani Ammal College of Nursing, Komarapalayam - (Diploma in Nursing & B.Sc., Nursing)

5. JKK Munirajah Research Foundation, Komarapalayam
Cours es Offered: 1. Bachelor of Physiotheraphy
2. Bachelor of Occupation Theraphy.

6. JKK Sampoorani Ammal Blind and Orthopedic School, Komarapalayam

7. JKK Vidyha Mandhir Matriculation School, Bungalowpudur

### II TRYSEM TRAINING COURSES

Sponsored by DRDA Erode.

**Branches Offered:**
1. Automobile and Car Driving
2. Computer Science
3. TV and Radio Mechanism
4. Two Wheeler Mechanism
5. Simple Wiring

**INDUSTRIES RUN BY THE TRUST**
1. Pulliccar Mills Ltd, Thiruchengode
2. J.K.N.M. Mills (P) Ltd, Komarapalayam
3. Annai J.K.K. Sampoorani Ammal Eye Hospital, Komarapalayam
4. J.K.K. Munirajah Enterprises Madras, Komarapalayam, T.N. Palayam
5. Kandasamy Weaving Factory, Komarapalayam
6. Kailash Packing Company, Komarapalayam
7. J.K.K.M. Printers, Komarapalayam

போன்: 23994

எங்களது இதயம்கனிந்த நல்வாழ்த்துக்கள்

# 'அன்பு பவன்'

உயர்தர சைவ உணவகம்

**அன்பு பவன் டீலக்ஸ் A/C**

**அன்பு பவன் ஸ்வீட்ஸ்**

மெயின்ரோடு, கோபிசெட்டிபாளையம்

பெரியார் மாவட்டம் 638 476

With Best Compliments From

# GRAN ROCK TILES (P) LTD

Manufacturers and Exporters of all High quality monuments

GOBICHETTIPALAYAM

PERIYAR DISTRICT

TAMIL NADU

Phone: 22327

**Head Office**

C-7, SONA

3, Murray's Gate Road,

Alwarpet, Madras - 600 018

Phone: 450833, 454435, 459575

Factory: R.S. No.45/5 Polavakkalipalayam Village, Gobichetty Palayam Taluk - 638 476.

Periyar District, Phone: 04285 - 2327



# காவல் நிர்வாகத்தில் பெரியார் மாவட்டம்

பெரியார் மாவட்டச் சிறப்பிதழுக்காக, பெரியார் மாவட்டத்தில் காவல் நிர்வாகத்தில் ஏற்பட்டுள்ள வளர்ச்சிகள் மற்றும் நல்வாழ்வுத் திட்டங்கள் குறித்து மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அவர்களைத் தமது அலுவலகத்தில் பேட்டி கண்டபோது கீழ்க்கண்ட தகவல்களை அளித்தார்.

பெரியார் மாவட்டத்தில் சட்டம், ஒழுங்கு பொதுவாகவே நன்றாக இருக்கிறது. இந்த மாவட்டத்து மக்கள் மென்மையானவர்கள். காவல்துறையினருக்குப் பொது மக்களும் அரசு ஊழியர்களும் நல்ல ஒத்துழைப்புக் கொடுக்கிறார்கள். இதனாலேயே சட்டம் ஒழுங்கை நன்றாகப் பராமரிக்க முடிகிறது என்று மாவட்டக் கண்காணிப்பாளர் கூறியதைக் கேட்டு நாங்களும் பெருமை அடைந்தோம். மாநிலத்திலேயே கள்ளச் சாராயம் கட்டுப்படுத்தப்பட்டுள்ள ஒரு சில மாவட்டங்களில் பெரியார் மாவட்டமும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த மாவட்டத்தில் மொத்தம் 41 காவல் நிலையங்கள் உள்ளன. ஏறக்குறைய அனைத்துக் காவல் நிலையங்களுக்கும் வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் இந்தக் காவல் நிலையங்களுக்கு AK-47 போன்ற நவீன ரகக் கருவிகளும் தரப்பட்டுள்ளன. நவீன வசதிகள் செய்து தரப்பட்டதன் பயனாக இந்த ஆண்டு 1995-இல் இந்த மாவட்டத்தில் களவு போன ரூபாய் 95 இலட்சம் பெறுமானமுள்ள பொருட்களில் ரூ.60 இலட்சம் பெறுமானமுள்ள பொருட்கள் மீட்கப்பட்டிருப்பதாக, காவல்துறை கண்காணிப்பாளர் தெரிவித்தார்.

கொலை, கொள்ளை, கார் திருட்டு - போன்ற பல்வேறு குற்றங்களில் ஈடுபட்டு 1991 முதல் கடந்த 4 ஆண்டுகளாகக் காவல்துறையினரால் தேடப்பட்டு வந்த ரகு என்றழைக்கப்படும் ரகுசீலனை சமீபத்தில் காவல்துறையினர் கைது செய்து மாவட்ட காவல்நிர்வாகத்துக்குப் பெருமை சேர்த்திருக்கிறார்கள்.

மேலும், வீட்டை உடைத்துக் கொள்ளையடித்தல், சங்கிலி பறிப்பு போன்ற (Chain Snatching) 7 குற்றங்களில் ஈடுபட்டுப் போலீசாரால் தேடப்பட்டு வந்த பள்ளப்பட்டியைச் சேர்ந்த சிராஜுதீன், கேரள மாநிலத்தைச் சேர்ந்த வினோத் குமார் ஆகியோரை பெரியார் மாவட்டக் காவல்துறையினர் சமீபத்தில் கைது செய்துள்ளனர்.

சென்ற ஆண்டு 1994 கள்ளச் சாராயக் கடத்தலில் ஈடுபட்ட 2 கார், 1 லாரி, 22 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஸ்கூட்டர் ஆகியவற்றைக்காவல்துறையினர் பறிமுதல் செய்திருக்கிறார்கள். 1995-இல் இதே தொழிலில் ஈடுபட்ட 1 வேன், 1 லாரி, 3 கார், 17 இரு சக்கர வாகனங்களையும் காவல்துறையினர் பறிமுதல் செய்திருக்கிறார்கள்.

பெரியார் மாவட்டத்தில் 700 பேர் கொண்ட போலீஸ் நண்பர்கள் குழு மிகச் சிறப்பாக செயல்பட்டு வருவதாக மாவட்டக் காவல்துறை கண்காணிப்பாளர் தெரிவித்தார்.

பெரியார் மாவட்டத்தில் தற்சமயம் 36 ஆய்வாளர்களும், 67 உதவி ஆய்வாளர்களும், 162 தலைமைக் காவலர்களும், 445 முதல் நிலை காவலர்களும், 253 இரண்டாம் நிலை காவலர்களும் பணியாற்றுகிறார்கள்.

**காவல் அலுவலர்களுக்கு**

தமிழ்நாடு அரசு காவல்துறையிலுள்ள 21,000 இரண்டாம் நிலைக் காவலர்களை முதல் நிலைக் காவலர்களாகவும், 2,700 முதல்நிலைக் காவலர்களைத் தலைமைக் காவலர்களாகவும் தரம் உயர்த்தி, இதனை 4 கட்டங்களாகக் காவல்துறையின் அடித்தளத்தில் பணிபுரியும் ஆளினர்களிடையே பதவி உயர்விலுள்ள தேக்க நிலையைப் போக்கும் வகையில் ஆணைகள் பிறப்பித்தது. இதன்படி பெரியார் மாவட்டத்தில் 100 முதல் நிலைக் காவலர்கள் தலைமைக் காவலர்களாகவும், 590 இரண்டாம் நிலைக் காவலர்கள் முதல்நிலைக் காவலர்களாகவும் பதவியில் உயர்வு பெற்றார்கள். அரசு அறிவித்த பதவி உயர்வு திட்டத்தின்படி ஏறத்தாழ 500 காவலர்கள் இம்மாவட்டத்தில் பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

**புதிய காவல் துணைக் கோட்டம்**

பெரியார் மாவட்டம், பவானியில் புதியதாக ஒரு காவல் துணைக் கோட்டத்தினை உருவாக்கிட அரசு ஆணை பிறப்பித்தது. அதன்படி ஈரோடு ஊரக துணைக் கோட்டத்திலிருந்து 5 காவல் நிலையங்களும், ஈரோடு நகர துணைக் கோட்டத்திலிருந்து 1 காவல் நிலையமும் எடுக்கப்பட்டு ஆக மொத்தம் 6 காவல் நிலையங்கள் பவானி துணைக் கோட்டத்துடன் இணைக்கப்பட்டு புதிய காவல் துணைக் கோட்டம் உருவாக்கப்பட்டு 4.1.95 முதல் செயல்பட்டு வருகிறது.

**☆ இன்று நமக்கு வேண்டியது அறிவு வளர்ச்சி, அறிவு வளர்ச்சி பெற்று ஒவ்வொரு துறையிலும் முன்னேற வேண்டும். அறிவு ஆட்சி செய்ய வேண்டும்.**


**—தந்தை பெரியார்**

**சத்தியமங்கலம் காவல் துணைக் கோட்டம் உருவாக்குதல்**

பெரியார் மாவட்டம் சத்தியமங்லத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதியதாக ஒரு காவல் துறைத் துணைக் கோட்டத்தினை உருவாக்கிட அரசு ஆணை பிறப்பித்தது. இதன்படி கோபி துணைக் கோட்டத்திலிருந்து 7 காவல் நிலையங்கள் பிரித்தெடுக்கப்பட்டு சத்தியமங்கலம் துணைக் கோட்டம் உருவாக்கப்பட்டது. புதிய துணைக் கோட்டம் 23.3.95 முதல் சத்தியமங்கலத்தில் செயல்பட்டு வருகிறது.

**தேசிய நெடுஞ்சாலை வழிப் பாதுகாப்புத் திட்டம்**

தேசிய நெடுஞ்சாலை வழிகளில் ஏற்படும் குற்றங்களைத் தடுக்கும் நோக்கத்துடனும் சாலை விபத்துக்களைத்தடுக்கும் முகத்தானும் நெடுஞ்சாலை வழிகளில் ஏற்படும் வழிப்பறி, கூட்டுக் கொள்ளை மற்றும் இதரக் கொள்ளைகளைத் தடுக்கவும், சாலை வழிகளில் தங்கள் பயணங்களை மேற்கொள்ளும் பொதுமக்களின் மனதில் நம்பிக்கை உணர்வினை வளர்க்கும் வகையில் தேசிய நெடுஞ்சாலை பாதுகாப்புத் திட்டத்தினை உருவாக்கிட தமிழக அரசு எண்ணம் கொண்டது. அதன் விளைவாகப் பெரியார் மாவட்டத்தில் நெடுஞ்சாலை பாதுகாப்புப் பணி திட்டத்தினை அமலாக்கம் செய்வதற்காக, இம்மாவட்டத்திற்கு 8 இளம்



ஆய்வாளர்கள், 24 இரண்டாம் நிலைக் காவலர்கள், 8 ஓட்டுநர் காவலர்கள் மற்றும் 4 ஜீப்புகள் மற்றும் தளவாடங்களை ஒப்பளிப்பு செய்துள்ளது.

**துப்பறியும் நாய்ப்படை**

பெரியார் மாவட்டத்தில் கடும் பெர்ருள் களவு குற்றங் களை துப்புத் துலக்கவும் கொலைக் குற்றங்களை விரைவில் கண்டறி வதற்கும் புலன் விசாரணையில் துணைபுரிவதற்கும் ஏதுவான வகையில், 26.7.94-ஆம் தேதி நடைபெற்ற காவல் உயர் அலுவலர்கள் மாநாட்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பெரியார் மாவட் டத்தில் புதிதாக நாய்ப்படை துவக்குவதான அறிவிப்பினை வெளியிட்டார். அதன்படி பெரியார் மாவட்டத்தில் துப் பறியும் நாய்ப்படையைத் துவக்கு வதற்கு உத்தரவிட்டு, அப்படைக் கெனத் தனியாக ஓர் இளம் ஆய்வாளர், ஓர் தலைமைக் காவலர், 4 இரண்டாம் நிலைக் காவலர்கள் மற்றும் நாய்கள் பராமரிப்புக்காக ஓர் இளம் காவலர் Dog boy மற்றும் இதர தளவாடங்களையும் இதர வசதிகளையும் ஒப்பளிப்பு செய்தது.

அனைத்து மகளிர் காவல் நிலையம் ஈரோட்டில் 14.7.93 முதல் செயல்பட்டு வருகிறது. இந்நிலையத்திற்கான மகளிர் காவல் நிலையம் 2.9.94ஆம் தேதியன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

**தாராபுரத்தில் அனைத்து மகளிர் காவல் நிலையம் துவக்குதல்**

ஈரோட்டில் அனைத்து மகளிர் காவல் நிலையம் செயல்பட்டு வருவது அனைத்துத்தரப்புப் பொதுமக்களின் மிகுந்த வர வேற்பைப் பெற்றுள்ளது. பெண் களின் குறைகளை விரைந்து களைவதற்கு ஏதுவாகவும், பெண்களின் மீதான கொடுமைகள் மற்றும் வரதட்சணைக்கொடுமை யால் உயிரிழப்புகளைத் தடுப்ப தற்காகவும், தமிழக அரசு தாராபுரத்தைத் தலைமையிட மாகக் கொண்டு புதியதாக ஒரு அனைத்து மகளிர் காவல் நிலையம் துவங்குவதாக அறிவிப்பு வெளியிட்டுள்ளது. பெண்களின் குறைகளை விரைவில் தீர்ப்பதற்கு ஏற்ப பெரியார் மாவட்டத்தின் பாதி மாவட்ட எல்லைகளைத் தாரா புரம் அனைத்து மகளிர் காவல் நிலையம் கட்டுப்பாட்டின் கீழ் இணைப்பதற்காக உத்தரவிடப் பட்டுள்ளது.

தமிழக அரசு காவல் துறையின் சரித்திரத்திலேயே முதல் முறையாகக் காவல் அலுவலர்கள் மற்றும் ஆளினர் களுக்காகப்பல்வேறு நல்வாழ்வுத் திட்டங்கள் மற்றும் ஒட்டு மொத்த பதவி உயர்வு வாய்ப்பு களைத் தற்போதைய அரசு வழங்கியுள்ளது. மேலும் காவல் துறையின் மனித சக்தியைத் தற்பொழுது நிகழ்ந்து வரும் குற்ற நிகழ்வுகளைத் தடுக்கவும், சட்டம் ஒழுங்கை நல்ல நிலையில் பராமரிக்கவும் கடினமான போக்குவரத்துப் பணிகள் ஆற்றவும், காவல்துறை போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்பு முறைகளில் மேலும் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத் திற்கான திட்டங்களை அரசு அறிவித்துள்ளது. அதுமட்டு மல்லாமல் சட்டத்தை மதிக்கும் பொதுமக்களுக்கு அமைதி மற்றும் பாதுகாப்பு வழங்குதல், பல்வகையான சட்டங்கள் மூலம் சமுதாயத்தில் நிகழும் குற்றங் களையும் கொடுமைகளையும் போக்குவதற்கும் பொது மக்களின் நற்பலன்களுக்கும் நல்வாழ்வுக்கும் இக்காவல் துறையில் பல்வேறு சட்ட திட்டங்கள் அமல்படுத்தப் பட்டு வருகின்றன.

**நல்வாழ்த்துக்கள்**

## சீரங்ககவுண்டம்பாளையம் கயிறு உற்பத்தியாளர் தொழிற் கூட்டுறவுச் சங்கம்

இண்ட் நெ.1484, பாலக்கரை அஞ்சல்,
துடுப்பதி வழி, பெருந்துறை T.K. – 638 057
பெரியார் மாவட்டம்

எங்களிடம் முப்பிரிச் சூடி, தலக்கயிறு, மூக்கணாங்கயிறு, வால் கயிறு, Special வடக் கயிறு, தண்ணிக்கயிறு, லாரி பாரக்கயிறு, மற்றும் எல்லாவிதமான கயிறுகளும் மொத்தமாகவும், சில்லரையாகவும் நியாயமான விலையில் கிடைக்கும்.

இங்ஙனம்
**B. நாகலிங்கம்,** M.Cop.,
தனி அலுவலர்

1994-95 ஆம் ஆண்டின் சிறந்த கூட்டுறவுச் சங்கமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

நல்வாழ்த்துக்கள்

## மோளக்கவுண்டன்புதூர் அரிசனக் கயிறு உற்பத்தியாளர் தொழிற் கூட்டுறவுச்சங்கம்

இண்ட் நெ.1749, முத்தூர் அஞ்சல்-638 105
பெரியார் மாவட்டம்

எங்களிடம் மணிச்சூடி, முப்பிரி சூடி, தலக் கயிறு, வால் கயிறு, தண்ணிக்கயிறு, லோடிங் கயிறு, மற்றும் எல்லாவிதமான கயிறுகளும் மொத்தமாகவும், சில்லரையாகவும் நியாயமான விலையில் கிடைக்கும்.

இங்ஙனம்

**V.A. அன்பரசன், B.Com.,**
தனி அலுவலர்

1994-95 ஆம் ஆண்டின் சிறந்த கூட்டுறவுச் சங்கமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

**நல்வாழ்த்துக்கள்**

## பெரியார் மாவட்ட அச்சகச் சேவைத் தொழிற் கூட்டுறவு சங்கம் லிட்.,

இண்ட் நெ. 1765,
793, நேதாஜி ரோடு,
ஈரோடு 638 001

எங்கள் சங்கத்தில் கூட்டுறவுச் சங்கங்கள், பேரூராட்சி, ஊராட்சி ஒன்றியம், நகராட்சி போன்ற நிறுவனங்களுக்குத் தேவைப்படும் படிவங்கள், புத்தகப் பாரங்கள் மற்றும் அனைத்து அச்சு வேலைகளும் உரிய காலத்தில் குறைந்த விலையில் அச்சடித்துக் - (Printing) கொடுக்கப்படும்.

இங்ஙனம்
**B. நாகலிங்கம்,** M.Cop.,
தனி அலுவலர்

நல்வாழ்த்துக்கள்

## ஈரோடு பாபின் தொழிலாளர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கம்,

இண்ட். நெ.684, 4, குமிலன் குட்டை,


பெருந்துறை' ரோடு, ஈரோடு-638 011,
பெரியார் மாவட்டம்

தொலைபேசி எண்: 70494

நூற்பாலைகளுக்குத் தேவையான அனைத்து விதமான முதல்தர பிளாஸ்டிக் பாபின்கள், கோன்கள், சீஸ் டியூப்புகள் மற்றும் உயர்தர மரத்தினால் செய்யப்பட்ட பல்வேறு வகை மர உருளைகள், ஆர்டரின் பேரில் தயாரித்துக் கொடுக்கப்படும். "1994-95-ஆம் ஆண்டின் சிறந்த கூட்டுறவுச் சங்கம்" எனத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

ரி அலுவலர்

(7-ஆம் பக்கத் தொடர்ச்சி)



முக்கிய அமைப்பாக இந்நிறுவனத்தை உருவாக்க நாங்கள் கருதுகிறோம்.

19. கல்வித் துறையே பெரும் அளவில் நிதி ஒதுக்கீட்டைப் பெறும் துறையாகத் தொடர்ந்து விளங்குகிறது. 1996-97ல் இத்துறைக்கு அளிக்கப்படும் மொத்த நிதி ஒதுக்கீடு ரூ.2504.51 கோடியாகும். தரம் வாய்ந்த பள்ளிக் கல்வி அளிப்பதை உறுதி செய்தல் என்கிற அரசின் கல்விக் கொள்கைக்கு இணங்க, பல்வேறு நிலையில் கல்வித் தரத்தை உயர்த்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அறைக்கலன்கள், ஆய்வுக் கூடங்கள், கற்பிக்கும் பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள் முதலிய வசதிகளை அளிப்பதன் மூலம், பள்ளிகளின் வசதிகளை மேம்படுத்தக் கருதப்பட்டுள்ளது. மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம், 1996-97ல் மேலும் மூன்று மாவட்டங்களில் செயலாக்கப்படும். இத்திட்டத்தைச் செயலாக்குவதற்காக, வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.3.32 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 1996-97-ல் தொழில் நுட்பக் கல்வித் திட்டத்தைச் செயலாக்க ரூ.8.02 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

20. ஆளுநர் உரையில் ஆதி திராவிடர் நலனுக்காகச் செயலாக்கப்பட்ட பல்வேறு திட்டங்களின் விவரம் ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளது. ஆதி திராவிடர், பழங்குடியினர் நலனுக்கான மொத்த நிதி ஒதுக்கீடு, 1996-97ல் ரூ.230.41 கோடி ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இந்த நிதி ஒதுக்கீட்டளவு 1991-92-ல் ரூ.114.96 கோடியாக இருந்தது. இந்த நிதி ஒதுக்கீட்டளவு இரண்டு மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆதி திராவிடர், பழங்குடியினர் நலனில் இந்த அரசு கொண்டுள்ள உறுதியினை இது காட்டுகிறது.

## வளர்ச்சித் திட்டங்கள்

21. 1996-97 ஆம் ஆண்டிற்காக நடைபெற்று வருகிற திட்டங்களுக்குச் செய்யப்பட்ட முக்கியமான நிதி ஒதுக்கீடுகள் சிலவற்றை, நான் சுருக்கமாக எடுத்துரைக்க விழைகிறேன்.

22. வேளாண் உற்பத்தியில் இம்மாநிலம் அடைந்துள்ள மிகச் சிறந்த சாதனை ஆளுநர் உரையில் ஏற்கெனவே சிறப்பிடம் பெற்றுள்ளது. இது, இந்த அரசின் ஒட்டு மொத்த வேளாண் வளர்ச்சி உத்திகளின் வெற்றியைக் காட்டுகிறது; இதனால், உழவர்கள் தங்களுடைய உற்பத்திப் பொருளுக்கு அதிக விலை பெறுவதற்கு இந்த அரசு உறுதி செய்தது. வேளாண் தொழிலில் அரசு தொடர்ந்து முதலீடு செய்யவும் ஆவன செய்யப்பட்டது. வேளாண் துறைக்கு, இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் மொத்தத் திட்ட ஒதுக்கீடு ரூ.210.24 கோடி ஆகும். தமிழ்நாடு வேளாண் வளர்ச்சித் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.86.06 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. வேளாண் மனித வள மேம்பாட்டுத் திட்டத்திற்காக நிதி ஒதுக்கீடு 1996-97 இல் ரூ.20.80 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.


23. இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், பாசனத் துறையின் திட்டப் பணிகளுக்கான மொத்த நிதி ஒதுக்கம் ரூ.249.83 கோடி ஆகும். ரூ.1,240 கோடி செலவாகும் நீர் ஆதாரங்களை நிலைப்படுத்தும் திட்டம் 1995 அக்டோபர் முதல் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தால் 16.68 இலட்சம் ஏக்கர் நிலப்பரப்பு பயன் பெறும். இது, அரசின் நீர் ஆதாரங்கள் வாயிலாகப் பாசனம் பெறுகின்ற பகுதியில் சுமார் 50 சதவீதம் ஆகும். இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், நீர் ஆதாரங்களை நிலைப்படுத்தும் திட்டத்திற்கு ரூ.89.89 கோடி நிதி

ஒதுக்கப்பட்டுள்ளது. ஏரிகளை நவீனமயமாக்கல் திட்டத்திற்கு ரூ.18.98 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம், 30,000 ஏக்கர் ஆயக்கட்டுப் பகுதிக்குப் பாசனம் அளிக்கின்ற மேலும் 100 ஏரிகளுக்கு நீட்டிக்கப்பட்டு வருகின்றது. பாசனத் திட்டங்கள் பராமரிப்பிற்காகப் போதுமான அளவு நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதை உறுதி செய்தது, எங்களுடைய குறிப்பிடத்தக்க சாதனைகளில் ஒன்றாகும். ஒன்பதாம், பத்தாம் நிதிக் குழுக்கள் நிர்ணயித்த அளவுகளை எய்த பராமரிப்பு நிதி ஒதுக்கத்தை நாங்கள் உயர்த்தியுள்ளோம். 1991-92ல், பெரும் பாசனப் பணிகள் பராமரிப்பிற்கான ஒட்டு மொத்த நிதி ஒதுக்கம் ரூ.10.65 கோடி ஆகும். சிறுபாசனப் பணிகள் பராமரிப்பிற்கான நிதி ஒதுக்கம் ரூ.3.50 கோடி ஆகும். 1996-97 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், பெரும் பாசனப் பராமரிப்பிற்கான நிதி ஒதுக்கம் ரூ.21.84 கோடி ஆகும். சிறுபாசனப் பராமரிப்பிற்கான நிதி ஒதுக்கம் ரூ.7.90 கோடி ஆகும்.

24. இந்த அரசு முன்னுரிமை அளிக்கும் துறைகளில் ஊரக வளர்ச்சியும் ஒன்றாகும். 1996-97 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், ஊரக வளர்ச்சிக்கான மொத்த திட்ட நிதி ஒதுக்கீடு ரூ.276.40 கோடியாக அதிகரித்துள்ளது. பத்தாம் நிதிக்குழுவின் பரிந்துரைகளின் ஒரு பகுதியாக, ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு மூலதன மானியமாக ரூ.71.83 கோடி நிதி ஒதுக்கம் செய்துள்ளதும் இதில் அடங்கும். 1996-97 ஆம் ஆண்டில், ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம் மொத்தம் ரூ.368.60 கோடி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும். மாநில அரசின் பங்காக ரூ.87.70 கோடி நிதி ஒதுக்கம் இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது. 1995-96 ஆம் ஆண்டில், ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கிழ் 70,187 கான்கிரீட் வீடுகள் கட்டப்பட உள்ளன. 1996-97 ஆம் ஆண்டில் அதே எண்ணிக்கையிலான வீடுகளைக் கட்டுவதற்கு நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. 1996-97 ஆம் ஆண்டில், ஒருங்கிணைந்த ஊரக மேம்பாட்டுத் திட்டத்திற்கான மொத்த ஒதுக்கீடு ரூ.86.92 கோடி ஆகும். இதில் மாநில அரசின் பங்காக ரூ.43.46 கோடி இந்த இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது. மாவட்ட அளவில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கு, நிபந்தனைகளற்ற வகையில் நிதி வழங்க, 1992-93 ஆம் ஆண்டில் ரூ.20 கோடி ஒதுக்கீட்டுடன் அதிகாரத்தைப் பரவலாக்கிய மாவட்டத் திட்டத்தைத் தொடங்கியிருந்தோம். 1995-96 ஆம் ஆண்டில் இந்த ஒதுக்கீடு ரூ.50.71 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. 1996-97 ஆம் ஆண்டுக்கான இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளிலும் இதே அளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

25. அடிப்படை வசதித் துறைகளை மேம்படுத்த இந்த அரசு நிலைத்த முக்கியத்துவம் அளித்து வருகிறது என்பதை அனைவரும் நன்கறிவர். 1995-96 ஆம் ஆண்டிற்கு மின்விசைத் துறைத் திட்ட ஒதுக்கீடான ரூ.750 கோடி, செயல்படுத்தப்படும் நிலையில் அதை விட அதிகரிக்கும். மின் உற்பத்தித் திறனைக் கூடுதலாக உருவாக்க, மாநில அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து ஏற்கெனவே ஆளுநர் உரையில் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இம்மாநிலத்தில், மின் அனுப்புகை-விநியோகப் பணி அமைப்பை மேம்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தில், தமிழ்நாடு மின்வாரியம், 1995-96 ஆம் ஆண்டில் 110 துணை நிலையங்களை அமைத்து வருகிறது. 1995-96 ஆம் ஆண்டில் விவசாய பம்பு செட்டுகளுக்கு இலவசமாக மின்சாரம் வழங்கும் வகையில் ஏற்படக் கூடிய இழப்பு ரூ.1358 கோடியாக இருக்கும். 1996-97 ஆம் ஆண்டில் இந்த இழப்பு மேலும் அதிகரிக்கக் கூடும்.

26. 1996-97 ஆம் ஆண்டுக்கான இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தில், சாலைகள், பாலங்களுக்குக்காக ரூ.468.32 கோடி நிதி



ஒதுக்கப்பட்டுள்ளது. இது, 1995-96 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட ரூ.424.12 கோடியைக் காட்டிலும் கணிசமான அளவு அதிகமானதாகும். 1996-97 ஆம் ஆண்டில் சாலைகளைப் பராமரிப்பதற்கான மொத்த ஒதுக்கீடு ரூ.204.46 கோடியாக இருக்கும். பராமரிப்பில் எஞ்சியுள்ள பணிகளை மேற்கொள்ள ஐந்தாண்டு காலச் சிறப்புப் பழுதுபார்ப்புத் திட்டம் ஒன்று 1991-92ல் தொடங்கப்பட்டது. இது 1995-96 ஆம் ஆண்டில் முடிக்கப்படும். இதற்கான மொத்த ஒதுக்கீடு ரூ.178.40 கோடியாகும். இதற்கு முதலில் வகை செய்யப்பட்ட ஒதுக்கீடு ரூ.150 கோடியாகும். இத்திட்டத்தின் கீழ் 15,926 கி.மீ. சாலைகள் பராமரிக்கப்பட்டுள்ளன. ஊரகச் சாலைகள் திட்டத்திற்கான நிதி ஒதுக்கம், 1996-97 ஆம் ஆண்டில் ரூ.22.50 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ஊரகச் சாலைகள் திட்டம் முழுவதும், 1997 மார்ச்சுக்குள் முடிக்கப்பட்டுவிடும். அதற்கேற்ப இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஒதுக்கீடுகள் ரூ.35 கோடி அளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளன. கடற்கரையோரச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம், ரூ9.21 கோடி ஒதுக்கீட்டுடன், 1996-97 ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

27. நாட்டில் நகர்மயமான மாநிலங்களில் இரண்டாவது மாநிலமாக, தமிழ்நாடு திகழ்கிறது. நகர்ப் பகுதிகளின் அதிகரித்து வரும் தேவைகளுக்கு அதிகஅளவில் நிதி ஒதுக்கவேண்டியுள்ளது. தமிழ்நாடு நகர்ப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், ரூ.206.19 கோடி வரவு-செலவுத் திட்ட ஆதரவு உள்பட, மொத்தம் ரூ.260.50 கோடி ஒதுக்கீட்டுடன், 1996-97 ல் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இம்மாநிலத்திலுள்ள நகராட்சிகளின் அடிப்படை வசதிகளுக்காகத் தேவைப்படும் நிதியுதவி கிடைக்கவும், தரமான திட்டங்களைத் தயாரித்து மதிப்பீடு செய்யப்படுவதை உறுதி செய்யவும், நிதி நிறுவனங்கள் பங்கேற்கும் வகையில், நகர்ப்பகுதி அடிப்படை வசதி நிதி ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இம்மாநிலத்தில் ஆற்றல் வாய்ந்த தொழில் பகுதியான திருப்பூர் மாநகரில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் பணி புதிய திருப்பூர் மேம்பாட்டு நிறுவனத்திடம்




ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதில், தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (TACID), திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கம், அடிப்படை வசதி-குத்தகை-நிதியுதவி நிறுவனம் (ILFS) ஆகியவை பங்குதாரர்களாக இருக்கும். இந்நிறுவனம், திருப்பூரின் அடிப்படை வசதிகளை மேம்படுத்த மூலதனச் சந்தையில் நிதி திரட்டுவதுடன், உருவாக்குதல், இயக்குதல், மாற்றுதல் (B.O.T) போன்ற புதிய உத்திகளைப் பின்பற்றி, பெரிய அளவில் முதலீடு செய்யும். இந்தப் புதிய முயற்சிகள் மூலம் திருப்பூரில், குடிநீர் வழங்கல், சாலைகள், தகவல் தொடர்பு, நகரக் கழிவுப் பொருள்களை அகற்றுதல், கழிவு நீரைச் சுத்திகரித்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ள ரூ.1313.20 கோடி முதலீடு செய்யப்படும்.

28. "எழில்மிகு சென்னை 2000" திட்டத்தின் அனைத்து அம்சங்களின் கீழும் கணிசமான அளவிற்கு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதை இம்மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். சென்னை மாநகரை 2000 ஆம் ஆண்டில், முன்னோடிப் பெருநகரமாக உருவாக்க வேண்டுமென்ற நோக்குடன் இந்த அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகள், முழு அளவில் வெற்றியடையும் என்று உறுதியுடன் நம்புகிறோம். சென்னை மாநகரில் புறவட்டச்சாலை (Outer Ring Road) அமைக்கும். பணி ரூ.317 கோடி செலவில் மேற்கொள்ளப்படும். நிலங்களைக் கையகப்படுத்த ரூ.10 கோடிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மொத்தம் ரூ.56 கோடி பங்கு மூலதனத்துடன் பெருநகர அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் உருவாக்கப்பட்டுள்ளது. சென்னைப் பெருநகரில் அடிப்படை

வசதிகளை மேம்படுத்த ரூ.887 கோடி மதிப்பிற்கான திட்டங்களுக்கு இந்த நிறுவனம் நிதி உதவி அளிக்கும். இந்நிறுவனத்திற்கு, எட்டாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தமிழ்நாடு அரசும் மத்திய அரசும் முறையே ரூ.100 கோடி நிதியுதவியை மானியமாக வழங்கும்.

29. வீட்டு வசதித் துறை கணிசமான அளவிற்கு வேலை வாய்ப்பை உருவாக்குவதன் மூலம் பொருளாதாரத்தில் முக்கிய இடம் வகிக்கிறது. வீட்டுவசதித் துறையில் மாநில அரசின் சாதனை மிகவும் சிறந்து விளங்குகிறது. ஊரக வீட்டுவசதி திட்டத்தின் கீழ், 1995-96 ஆம் ஆண்டில் கட்டப்பட வேண்டிய வீடுகளின் எண்ணிக்கை 58,200 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. கிராமப் பகுதிகளில் வீடுகளின் நிலை உயர்த்தல் (SHUPRA) திட்டம் 1996-97 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ.1.50 கோடி ஒதுக்கீட்டுடன் தொடர்ந்து செயல்படுத்தப்படும். தமிழ்நாடு குடிசைப்பகுதிமாற்று வாரியம், 1996-97 ஆம் ஆண்டில், ரூ.2.50 கோடி செலவில், தமிழ்நாடு நகர்ப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் ஒரு அம்சமான குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 10,000 குடும்பங்களுக்கு நிதி உதவி அளிக்கும். 1996-97 ஆம் ஆண்டில், மொத்தம் ரூ.8 கோடி செலவில், 2500 குடியிருப்புகள் கட்டப்படும். இத்துடன், தமிழ்நாட்டில் உள்ள நகர்ப்புற குடிசைப்பகுதி பிரச்சினைகளைச் சமாளிக்க பத்தாம் நிதிக்குழு, தனிப்பிரச்சினை மானியமாக ரூ. 60 கோடி வழங்கப் பரிந்துரைத்துள்ளது. மேம்படுத்தப்பட்ட மாற்று மனைகளில், குடிசைப்பகுதியில் வாழும் குடும்பங்களைக் குடியமர்த்த உரிய திட்டங்கள் வகுக்கப்படும். 1996-97ல், அரசுப்பணியாளர்களுக்கான வீடு கட்ட முன்பணம் குறித்த நிதி ஒதுக்கம் ரூ.74.15 கோடியாகக் கணிசமாக உயர்த்தப்பட்டுள்ளது.



1991-92ல் ரூ.17.63 கோடியாக மட்டுமே இருந்த வீடு கட்டுவதற்கான முன்பணத்திற்கான நிதி ஒதுக்கம், நான்கு மடங்குக்கும் மேல் உயர்த்தப்பட்டுள்ளதை இது காட்டும்.

30. 1996-97 ஆம் ஆண்டு இடைக்கால வரவு-செலவுத்திட்ட மதிப்பீட்டில் குடிநீர் வழங்கல், கழிவு நீர் அகற்றலுக்கான மொத்த ஒதுக்கீடு, ரூ.482.50 கோடியாக இருக்கும். ஊரகக் குடிநீர் வழங்கலுக்கான மொத்த ஒதுக்கீடு ரூ.103.95 கோடியாக இருக்கும். ஊரகக் குடிநீர் வழங்கல் திட்டப் பணியில் தமிழ்நாட்டின் சாதனை பாராட்டத்தக்கதாக உள்ளது. 1991-92 முதல் 1995-96 வரையிலான ஐந்தாண்டுக் கால அளவில், மொத்தம் 1 கோடி மக்கள் தொகையுடன் கூடிய, இம்மாநிலத்தில் உள்ள 17,987 ஊரகக் குடியிருப்புப் பகுதிகள் இத்திட்டத்தினால் பயன் அடைந்துள்ளன. இதில், 30 இலட்சம் மக்கள் தொகையுடன்கூடிய 8,315 ஆதிதிராவிடர், பழங்குடியினர் குடியிருப்புகளும் அடங்கும். இம்மாநிலத்தில் உள்ள ஒவ்வோர் ஊரகக் குடியிருப்பிலும் குறைந்தது ஒரு குடிநீர் ஆதாரத்துக்கான ஏற்பாடாவது செய்து கொடுக்கப்படும் என்பதை உறுதி செய்யதுள்ளோம். 1996-97 ஆம் ஆண்டிலிருந்து, ஓரளவு குடிநீர் வசதி பெற்றுள்ள ஊரகக் குடியிருப்புகளில், குடிநீர் வழங்கலை அதிகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இம்மாநிலத்தில் உள்ள அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் குடிநீர் வழங்கு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. 1996-97 ஆம் ஆண்டில் 326 நகரப் பேரூராட்சிகள், 173 ஊரகப் பேரூராட்சிகள் ஆகியவற்றில் குடிநீர் வழங்கு திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

31. தொடர்ந்து இருந்து வரும் குடிநீர்ப் பற்றாக்குறைப் பிரச்சினையிலிருந்து சென்னை மாநகரை விடுவிக்க இந்த அரசு உயரிய முக்கியத்துவம் அளித்துள்ளது. முதல் சென்னை குடிநீர் வழங்கு-கழிவு நீரகற்றுத் திட்டம் மொத்தம் ரூ.255.05 செலவில் 1996 மார்ச்சில் முடிவடையும். சென்னை மாநகருக்கு வீராணம் ஏரியிலிருந்து நாள் ஒன்றுக்கு 180 மில்லியன் லிட்டர் தண்ணீரைக் கொண்டு வருவதற்கான மொத்தம் ரூ.1638 கோடி செலவிலான




இரண்டாம் சென்னை குடி நீர் வழங்கல்-கழிவு நீரகற்றல் திட்டம் 1995 அக்டோபரிலிருந்து தொடங்கப்பட்டுள்ளது. இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கம் ரூ.299.10 கோடியாகும். கிருஷ்ணாநதி நீரைப் பெற்று, தூய்மைப்படுத்தி, வழங்குவதற்கான முதல் கட்டப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. தெலுங்கு கங்கைத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கான செலவில் மொத்தப் பங்கான ரூ.521 கோடியில் ரூ.462 கோடி ஆந்திரபிரதேச அரசுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளது. சென்னை மாநகருக்கு உடனடியாக நீரை வழங்குமாறு ஆந்திரப்பிரதேச அரசை நாம் வலியுறுத்துவோம்.

## நிதி நிலைமை

32. இந்த அரசு பதவியேற்றபோது இருந்த இடர்ப்பாடான நிதி நிலைமையை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கறிவர். இந்த அரசு பதவியேற்றபோது, 1991-92 ஆம் ஆண்டிற்குரிய மொத்த நிதிப் பற்றாக்குறை ரூ.898 கோடியாக இருந்தது. நாட்டு மது விற்பனை முற்றிலுமாக ஒழிக்கப்படுவதை உறுதி செய்யும் வகையில், அரசு எடுத்திருந்த முதல் முடிவின் விளைவாக, இந்த அரசுக்கு ஏற்பட்ட வருவாய் இழப்பு ரூ.322 கோடியாகும். இதனால், இந்த அரசின் ஒட்டு மொத்த நிதிப் பற்றாக்குறை ரூ.1220 கோடியாகியது. இந்த வருவாய் இழப்பை ஈடுசெய்ய நிதியுதவி அளிக்குமாறு மத்திய அரசிடம் நாம் விடுத்த வேண்டுகோளுக்கு மத்திய அரசிடமிருந்து எவ்வித மறுமொழியும் வரவில்லை. இருப்பினும், திறமையான நிதி நிருவாகத்தின் மூலம், மாநிலத்தின் ஒட்டுமொத்த நிதி இடர்ப்பாட்டு நிலையைச் சரிசெய்து, நிதிநிலையைக் கணிசமான அளவிற்கு மேம்படுத்துவதில் நாம் தற்போது வெற்றி பெற்றுள்ளோம். மின் கட்டண இழப்பீட்டு பாக்கித் தொகை வகையில், தமிழ்நாடு மின் வாரியம் அரசுக்குச் செலுத்த வேண்டிய பாக்கித் தொகைகளைச் சரிக்கட்டுவதைக் கணக்கில் கொள்ளாமல், 1991-92 ஆம் ஆண்டில் ரூ.878.87 கோடியாக இருந்த வருவாய்ப் பற்றாக்குறை, 1992-93 ஆம் ஆண்டில் ரூ.1143.67 கோடியாக உயர்ந்தது. இதன்பின்னர், 1993-94 ஆம் ஆண்டில், வருவாய்ப் பற்றாக்குறையின் அளவு ரூ.691.86 கோடி என்ற அளவிற்குக் குறைக்கப்பட்டது. இது, 1994-95 ஆம் ஆண்டில், ரூ.415.55 கோடியாகக் குறைக்கப்பட்டது.

33. பொருளாதார வளர்ச்சியினால் ஏற்பட்ட வரி வருவாய் அதிகரிப்பு இந்த மேம்பாட்டிற்கு ஒரு காரணமாகும். தெளிவான நோக்கத்துடன் வகுக்கப் பெற்று மாண்புமிகு உறுப்பினர்களின் ஆதரவையும் பெற்றுள்ள அரசின் செலவுக் கொள்கை, வருவாய்ப் பற்றாக்குறை குறைவதற்குக் காரணமாகியது.

34. 1995-96 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், (-)ரூ.925.55 கோடி வருவாய்ப் பற்றாக்குறை ஏற்படும் என எதிர்பார்க்கப்பட்டது. சென்ற ஆண்டு நான் ஆற்றிய வரவு-செலவுத் திட்ட உரையில், பொது விநியோக முறையின் கீழ் வழங்கப்படும் அரிசியின் விலையைக் கிலோ ஒன்றுக்கு ஒரு ரூபாய் குறைப்பதாக அறிவித்திருந்தேன். இதன் விளைவாக, வருவாய்ப் பற்றாக்குறை (-)ரூ.150 கோடியிலிருந்து (-)ரூ.1075.55 கோடியாக அதிகரிக்குமென எதிர்பார்க்கப்பட்டது. அதற்கேற்ப, 1995-96 ஆம் ஆண்டுக்கான இறுதிப் பற்றாக்குறை (-)ரூ.175.25 கோடியாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

35. 1995-96 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் இடர்ப்பாடான நிதி நிலைமையைத் தெளிவாகக் காட்டியது. இந்நிலையிலும், முன்னுரிமை அளிக்க வேண்டிய துறைகளில், முக்கிய இனங்களுக்குத் தேவைப்படும் செலவுப் பொறுப்பைக் குறைக்க

இயலவில்லை. வறட்சி நிவாரணம் போன்ற அரசின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட சில காரணங்களினாலும், சமூகப் பாதுகாப்பு குறித்த செலவு, வளர்ச்சிக்கான நிதி ஒதுக்கீடு ஆகியவற்றைத் தொடர்ந்து நிலை நிறுத்த வேண்டிய இன்றியமையாத தேவைகளினாலும், 1995–96 ஆம் ஆண்டில் இந்த வருவாய்ப் பற்றாக்குறை மேற்கொண்டும் அதிகரித்தது.

36. மத்திய அரசு, 1.1.1995, 1.7.1995 ஆகிய இரு கால அளவுகளில் ஒவ்வொன்றும் 11 சதவீதம் என்ற அளவில், அதிகமாக 2 கூடுதல் அகவிலைப்படித் தவணைகளை அறிவித்தது. மேலும், மத்திய அரசு, 1.4.1995 ஆம் நாள் முதற்கொண்டு, அனைத்துப் பணியாளர்களுக்கும் அவர்களுடைய அடிப்படைச் சம்பள வீதத்தில் 10 சதவீதத் தொகையை இடைக்கால நிவாரணத் தவணைத் தொகையாக வழங்குவதாக அறிவித்தது. ஏற்கெனவே நாம் மத்திய அரசு சம்பள வீதங்களையும், அகவிலைப்படி வீதங்களையும் பின்பற்றி வருவதால், அதற்கிணங்க இவற்றை வழங்க வேண்டி இருந்தது. இதன் விளைவாக, 1995–96 ஆம் ஆண்டில் வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கத்திற்கு மேல் ரூ.350 கோடி கூடுதல் செலவு ஏற்பட்டது. முதலில் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த உணவு உதவித் தொகை ரூ.600 கோடியிலிருந்து ரூ.800 கோடியாக அதிகரித்துள்ளது. வறட்சி நிவாரணச் செலவிற்கென, இந்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், தொகை ஏதும் ஒதுக்கப்படவில்லை. குடிநீர் பிரச்சினையைச் சமாளிப்பதற்கென இராமநாதபுரம் மாவட்டத்தில், உவர் நீரை நன்னீராக்கும் நிலையத்தை அமைக்கும் வகையில், கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியிருந்தது. 1995–96 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளில், ஏற்பளிக்கப்பட்ட ஆண்டுத் திட்ட நிதி ஒதுக்கீடு ரூ.3,200 கோடி என்றிருக்க, திட்டப் பணிகளுக்கான நிதி ஒதுக்கீடு ரூ.3316.24 கோடியாகும். இவ்வனைத்து இனங்களும் சேர்ந்து, 1995–96 ஆம் ஆண்டில் நிதிப் பற்றாக்குறை கணிசமான அளவு உயர வழிவகுத்தது.

37. 1995–96 ஆம் ஆண்டின் திருத்த மதிப்பீடுகளில், மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த வருவாய் வரவுகள் ரூ.9,689.22 கோடியாகும். இது, 1995–96 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடுகளைக் காட்டிலும் ரூ.704.15 கோடி அதிகரித்திருப்பதைக் காட்டுகிறது. இதனால், வரி வசூலை அதிகரிக்க உறுதியான முயற்சிகளை மேற்கொள்ளவும், வளர்ச்சிப் பணிகளுக்கெனப் பெருமளவு நிதி ஆதாரங்களைத் திரட்டவும் முடிந்தது. இது இவ்வாறிருக்க, 1995–96 ஆம் ஆண்டிற்குரிய திருத்த மதிப்பீடுகளில் வருவாய்க் கணக்கில் ஏற்பட்ட மொத்தச் செலவு ரூ.10,857.84 கோடியாகும். 1995–96 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளிலிருந்து, ரூ.947.22 கோடி அதிகரித்திருப்பதை இது காட்டுகிறது. இதனால், 1995–96 ஆம் ஆண்டிற்குரிய திருத்த மதிப்பீடுகளில், (–)ரூ.1,168.62 கோடியாக வருவாய்ப் பற்றாக்குறை அதிகரித்தது. 1995–96 ஆம் ஆண்டில், இவ்வனைத்துப் பற்று-வரவு நடைமுறைகளினால் ஏற்பட்ட பற்றாக்குறை (–) ரூ.354.50 கோடியாகும். 1994–95 ஆம் ஆண்டுக் கணக்குகளில் காட்டப்பட்ட இறுதி இருப்பு (–)ரூ.55.66 கோடியுடன், 1995–96 ஆம் ஆண்டின் இறுதியில் (–)ரூ.410.16 கோடி நிதிப் பற்றாக்குறை இருக்குமென நான் எதிர்பார்க்கிறேன்.

38. 1996–97 ஆம் ஆண்டிற்குரிய இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த வருவாய் வரவுகள் ரூ.10,543.52 கோடி ஆகும். வருவாய் வகையிலான செலவு ரூ.11,505.61 கோடியாகும். இதனால், வருவாய்ப் பற்றாக்குறை (–)ரூ.962.09 கோடியாகும். 1996–97 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், வருவாய்ப் பற்றாக்குறை அளவு குறைந்ததற்கு முக்கிய காரணம், இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், புதிய



பகுதி-II திட்டங்களுக்கெனத் தொகையேதும் ஒதுக்கப்படாததேயாகும். 1996-97 ஆம் ஆண்டிற்குரிய இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளிலுள்ள அனைத்துக் கணக்குகள் குறித்த பற்று-வரவு நடைமுறைகளினால் கிடைத்த நிகரப் பற்றாக்குறை (-)ரூ.270.66 கோடியாகும். 1995-96 ஆம் ஆண்டிற்குரிய திருத்த மதிப்பீடுகளில் எதிர்பார்க்கப்பட்ட இறுதி இருப்பு (-)ரூ.410.16 கோடி என்றிருக்க, 1996-97 ஆம் ஆண்டு முடிவில் ஏற்படக்கூடிய மொத்த நிதிப் பற்றாக்குறை (-)ரூ.680.82 கோடியாக இருக்கும்.

39. வருவாய்ப் பற்றாக்குறையின் அளவு கவலையளிப்பதாகவுள்ளது. நிதிப் பற்றாக்குறை அளவைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்து வர, முந்தைய நான்கு ஆண்டுகளில், பின்பற்றப்பட்டு வந்துள்ள செலவுக் கொள்கைகள் தொடர்ந்து முனைப்பாகப் பின்பற்றப்படவேண்டும்.

40. இஃது ஓர் இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடாகவிருப்பதால், நிதிப் பற்றாக்குறையைச் சரிக்கட்டுவதற்கெனப் புதிய வரி விதிப்பு நடவடிக்கைகள் எவற்றையும் மேற்கொள்ளக் கருதவில்லை. பொருத்தமான காலத்தில் கூடுதல் நிதி ஆதாரங்களைத் திரட்டுவதற்குத் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கருதலாம்.

41. அதிகரித்துவரும் வருவாய் நிதி ஆதாரங்களிலிருந்து கிடைக்கும் தொகையில் ஒரு பங்கை மத்திய அரசு மாநிலங்களுக்கு வழங்க வேண்டும் என்று நான் இத்தருணத்தில் மீண்டும் வலியுறுத்த விழைகிறேன். மத்திய அரசு வரி வருவாய்களை மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிப்பது குறித்த மாற்றுத் திட்டம் தொடர்பாக, அதன் முடிவை விரைவில் அறிவிக்க வேண்டும். மேலும், மத்திய அரசின் பல்வேறு திட்டங்களுக்கு விருப்பத்தின்பேரில் நிதி வழங்குதல் குறைக்கப்பட வேண்டும் என்றும், இதற்குப் பதிலாக, மாநிலங்கள் தங்களுடைய நிதி நிலைமைகளையும், வளர்ச்சித் திட்டப் பணிகளையும் திட்டமிடும் வகையில், மத்திய அரசு தன்னுடைய நிதி ஆதாரங்களிலிருந்து திட்ட



வட்டமான பங்கினை மாநிலங்களுக்கு வழங்க வேண்டும் என்றும் நான் வலியுறுத்த விழைகிறேன்.

42. இந்த அரசு, இதன் ஐந்தாண்டுக் கால ஆட்சியை, மிக வெற்றிகரமாக நிறைவு செய்யும் நிலையை நெருங்கி வருகிறது. புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான இந்த அரசின்பால் தமிழ்நாட்டு மக்கள் வைத்திருந்த நம்பிக்கை முழுவதுமாக மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. மக்களுக்கு இந்த அரசு மேம்பட்ட வாழ்க்கைத் தரத்தைப் பெற்றுத் தந்துள்ளது. ஒவ்வொரு நிலையிலும் விரைவான வளர்ச்சி உருவாக்கப்பட்டுள்ளது. கடும் போட்டி நிலவுகின்ற சூழ்நிலையிலும், தமிழ்நாடு, நாட்டில் ஒரு தொழில் மாநிலமாகத் திகழும் நிலையைத் தொடர்ந்து நிலை நிறுத்தி வருகிறது. வேளாண்மை உற்பத்தியும், உற்பத்தித் திறனும் மிகச் சீரான வளர்ச்சியைக் காட்டுகின்றன. இம்மாநிலத்தின் வறுமை நிலையும் கணிசமாகக் குறைந்துள்ளது. பிறப்பு-இறப்பு குறித்த புள்ளி விவரங்களின் வாயிலாக, இத்துறையில் நாம் அடைந்துள்ளதாகத் தெரியவரும் சாதனையும் ஊக்கம் அளிக்கும் வகையில் உள்ளது. அனைத்திற்கும் மேலாக, தமிழ்நாடு, அமைதியைப் பேணிக்காப்பதன் மூலம் இந்நாட்டில் அமைதிப் பூங்காவாகத் திகழ்கிறது. தமிழ்நாடு மாநிலம் இன ஒற்றுமையைக் கட்டிக்காப்பதில் எடுத்துக்காட்டாக, இன ஒற்றுமையின் சின்னமாக விளங்கி வருகிறது. இவ்வகையில் இன்று நாம், நமது நாட்டில் அனைவரும் பின்பற்றுகின்ற சிறந்த முன்னுதாரணமாகத் திகழ்கிறோம்.

43. இடைக்கால வரவு-செலவுத் திட்டமதிப்பீடுகளை இந்த அவையில் தாக்கல் செய்த பிறகு நடைபெறும் விவாதத்தில், மாண்புமிகு உறுப்பினர்கள் ஆக்க பூர்வமான முறையில் தங்களுடைய உயர்ந்த கருத்துக்களைத் தெரிவிக்குமாறு நான் கேட்டுக் கொள்கிறேன்.

44. இந்த இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளை உருவாக்கும் பணியில் பேருதவியாக இருந்த நிதித்துறைச் செயலாளர் திரு பி.வி.ராஜாராமன், அவர்களுக்கும் மற்ற அரசு அலுவலர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

45. இத்துடன், இந்த 1996-97 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளை இம்மாமன்றம் ஏற்று, இசைவளிக்குமாறு வேண்டுகிறேன்.

வணக்கம்

இரா. நெடுஞ்செழியன்,
நிதி அமைச்சர்.

சென்னை,
1996 ஆம் ஆண்டு
பிப்ரவரித் திங்கள் 20 ஆம் நாள்,
திருவள்ளுவர் ஆண்டு 2027,
மாசித் திங்கள் 8 ஆம் நாள்.

## வீரம் செறிந்த தீரன் சின்னமலை

தீரன் சின்னமலை பெரியார் மாவட்டத்தில் நொய்யல் ஆற்றங்கரையிலுள்ள மேலப்பாளையம் என்ற இடத்தில் 1756-ஆம் ஆண்டு பிறந்தார். அரச்சலூர் என்ற ஊருக்குத் தென்கிழக்கில் அமைந்துள்ள ஓடாநிலை என்ற பகுதியை, தீரன் சின்னமலை குறுநில மன்னராக ஆண்டு வந்தார்.

மைசூருக்கு கொங்கு நாட்டார் எதற்காகத் திறை செலுத்த வேண்டும்? என்று அறிவித்து மைசூர் ஆட்சிக்கு வரிப்பணத்தைக் கொடாமல் அதனை எதிர்த்தவர். மைசூர் ஆட்சியின் வீழ்ச்சிக்குப் பிறகு கி.பி.1801 முதல் 1805 வரை ஆங்கிலேயப் படையை, தான் ஆண்ட கொங்குப் பகுதிக்குள் நுழையவிடாமல் தடுத்து வீரப்போர் புரிந்தவர் தீரன் சின்னமலை. கடைசியில் நயவஞ்சகமாக ஆங்கிலேயர் தந்திரத்தைக் கையாண்டு, தீரன் சின்னமலையைச் சிறைபிடித்து, சங்ககிரிக்கோட்டையில் தூக்கிலிட்டனர்.

## தமிழ்ப் பெரியோர் வாழ்ந்த பெரியார் மாவட்டம்

நாத்திகக் கருத்துக்களை நாடெங்கும் பரப்பி, நற்புகழ் எய்திய தந்தை பெரியாரை ஈன்ற பெரியார் மாவட்டம் பல தமிழ்ப் பெரியோர்களைத் தந்து, புகழ் பெற்றுள்ளது. சான்றாக நன்னூல் எழுதிய பவணந்தி முனைவர் சீனாபுரத்தையும், சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லார் நிரம்பை என்ற ஊரையும் சேர்ந்தவர்கள்.

கொங்குமண்டல சதகம் பாடிய கார்மேகக் கவிஞர், பெருங்கதை இயற்றிய கொங்குவேளிர் ஆகியோர் பிறந்த விசயமங்கலத்தில் திகழ்ந்த தமிழ்ச்சங்கத்தில் தான் நேமிநாதம், வச்சணந்தி மாலை ஐம்பெரும் காப்பியத்தில் ஒன்றான சீவகசிந்தாமணி ஆகியவை தோன்றின.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : இ. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927



தூய
பட்டு
தூய
சரிகை
ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ-ஆப்டெக்ஸ்.
கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி
HTA.7556


தமிழரசு
பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23
கொடிவேரி அணை
பவானிசாகர் அணை
கூடுதுறை
நட்டாற்றீஸ்வரர்
திருக்கோயில்
சித்தோடு பால் பவுடர் தொழிற்சாலை
பெருந்துறை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை